

# புனித தோமையார் வரலாறு

இந்தியநாட்டு அப்போஸ்தலராகிய

# புனித தோமையார் வரலாறு

(திருத்திய பதிப்பு)

எம். மோ. வாஸ் அடிகளார்.

பதிப்புரிமை :

தமிழ் இலக்கியக் கழகம்

திருச்சிராப்பள்ளி

1971

அச்சிடலாம்:

✠ D. பால் அருள்சாமி,
குடந்தை ஆயர்.

அச்சிட்டவர்:

அருள்திரு A. ரெக்ஸ் மாணிக்கம்,
மேலாளர்.
தூய வளனார் அச்சகம், குடந்தை.

# முகவுரை

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழி லொழுகுஞ் சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்ட"மென்பது நமது இந்திய நாடு. நீர்வளம், நிலவளம், மலைவளம் முதலிய பல வளம் பெற் றுள்ளது. பண்டையக் காலந்தொட்டு மிக்க சீரும் சிறப்பும், பேரும் புகழும் படைத்தது. கல்வி, கலை, இலக்கண இலக்கியங்களை உரிமையாகக் கொண்டது. தற்காலத்து நாகரிகமுற்று விளங்கும் நாடுகள் நாகரிக ஒளி வீசப்பெறுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே தொழில் தேர்ச்சியடைந்து நாகரிகம் முதிர்ந்து துலங்கியது. ஆதலால் இந்தியா ஒரு சிறந்த நாடு. கிறிஸ்தவர்களாகிய நமக்கும் ஒரு புண்ணிய நாடாகும். ஏனெனில், நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து படாத பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்த பின்னர் நமக்கு இரட்சணியம் கிடைத்தது. விண்ணக வீடு திறக்கப்பட்டது: இகலோக வழி செப்பனிடப்பட்டது. இம்மார்க் கத்தை ஏனையோருக்கும் காட்டும் வண்ணம் தேவ திருமகன் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டார். அவர்கள் உலகத்தின் எத்திசையிலும் போய்த் தமது அரிய வேதத்தைப் போதிக்க வேண்டுமென்று பணித்தார். அவரது ஆணையைச் சிரமேற்கொண்டு அவர்கள் பல திசைகளையும் நோக்கிப் புறப்பட்டனர். அவர்களில் ஒருவராகிய புனித தோமையார் நமது இந்தியாவுக்கு வந்து பல் லோரைச் சத்திய மறையில் சேர்த்துள்ளார். ஆகவே நம் நாடு அப்போஸ்தலர் காலந்தொட்டு இயேசு திருமறையின் ஒளி வீசப்பெற்ற பாக்கிய நாடு.

நமக்கு நல்வழி காட்டிய புனித அப்போஸ்தலர் வரலாறு தமிழ் மக்களுக்குப் பயன்படும்பொருட்டு, சரித்திரம், பாரம்பரை, கதை முதலியவற்றிலுள்ள குறிப்புகளைக்கொண்டு ஈண்டுரைப்போம்.

இதில் ஆங்காங்கு புதுமைகள், அற்புதங்கள் என்று சொல்லும்போது சாதாரணமாக மக்கள் புரிந்துகொள்ளும் பொருளில் சொல்லுகிறோமேயல்லாது, சத்திய திருச்சபை கொள்ளும் பொருளில் கூறவில்லை.

இவ்வரலாற்றை எழுதுவதற்குக் கீழ்க்காணும் புத்தகங்கள் பெரும்பாலும் ஆதாரமாயுள்ளன.


(1) "India and the Apostle Thomas" by Medlycot.

(2) "The Apostle Thomas in India" by Mgr. Zaleski.

(3) "St. Thomas the Apostle in India" by F. A. D'Cruz.

(4) "Lettres edifiantes et curieuses ecrites des missions etrangeres."



M. M. VAZ.

# பதிப்புரை

புனித தோமை அப்போஸ்தலர் இக வாழ்வு நீத்துப் பரவாழ்வுபெற்ற பத்தொன் பதாவது நூற்ருண்டு விழாவின்போது, இந் நூல் அவருக்கு அன்புக் காணிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியக் கழகம்,
திருச்சிராப்பள்ளி,
1—11—71.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| புதிய ஏற்பாட்டில் புனித தோமையார் வரலாறு ... | 1 |
| புனித தோமையாரின் பயணம் ... | 3 |
| இந்திய நாடு - இந்திரபட்டணம் ... | 5 |
| நாராங்கோட்டை அரசனும் அரண்மனையும் ... | 8 |
| நாராங்கோட்டையில் அற்புதங்கள் ... | 13 |
| மலையாள நாடு ... | 23 |
| மலையாளத்தில் தோமையார் வேலை ... | 27 |
| மயிலாப்பூரிலிருந்து வந்த தூது ... | 42 |
| மயிலாப்பூர் ... | 44 |
| மயிலைக்கு வருதல் ... | 46 |
| அப்போஸ்தலரின் திருப்பொருள்கள் ... | 87 |
| மயிலை திருத்தலங்கள் ... | 89 |
| சின்ன மலை ... | 94 |
| பெரிய மலை ... | 98 |
| முடிவுரை ... | 103 |
| புனித தோமையாருக்கு மன்றாட்டுக்கள் ... | 109 |

# புனித தோமையார் வரலாறு

## முதல் அதிகாரம்

### புதிய ஏற்பாட்டில் புனித தோமையார் வரலாறு

**புனித** தோமையார் பன்னிரு அப்போஸ்தலர்களுள் ஒருவர். அவரைப்பற்றிய குறிப்புகள் வேதாகமத்தில் சிலவேயுள. அவை புனித அருளப்பர் எழுதிய சுவிசேஷத்திலேயே பரவிக்கிடக்கின்றன. இறந்த லாசரை உயிர்ப்பிக்க யுதேயாவுக்கு இயேசு போக எண்ணினர். அந்நாட்டிலுள்ள யூதர்கள் முன்னெருகால் அவர்மேல் கல்லெறிய எத்தனித்ததை அறிந்த அப்போஸ்தலர்கள் அவர் அங்கு போகாவண்ணம் தடுக்க முயன்றனர். ஆனால் திதிமு என்னும் தோமையார் மற்றவர்களைவிட மிக மன வலிமை பூண்டு துணிவுடன், "நாமும் செல்வோம்; அவரோடு இறப்போம்" என்று தம்முடைய உடன் சீடர்களிடம் சொன்னர். (அருள. 11:16). கடைசி இரா உணவு அருந்தும்போது நம் ஆண்டவர், தாம் அவர்களை விட்டுப் பிரிவதாகவும், ஆனல் அதனிமித்தம் அவர்கள் கவலைப்படாமல் இருக்கும் வண்ணம், அவர்களுக்காகத் தம் பிதாவினில்லத்தில் உறைவிடங்கள் ஏற்பாடு செய்யப் போவதாகவும் கூறினர். அப்போது தோமையார் அவரை நோக்கி, "ஆண்டவரே, நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க, அங்கே போகும் வழி எப்படித் தெரியும்?" என்ருர். இயேசு அவருக்குக் கூறியது, "நானே வழியும் உண்மையும் உயிரும். என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை" என்பதே. (அரு. 14:2-6) இயேசு உயிர்த்தபின், தம் அப்போஸ்தலர்களுக்குக் காட்சி தந்தபோது தோமையார் அவர்களோடு இல்லை. ஆகையால், அவர்கள் அவரைப் பின்னர் சந்தித்ததும், தாங்கள் கண்டதை நவின்றனர். அதனை அவர் நம்பாது, "நான் அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப்பார்த்து, ஆணிகள்

இருந்த இடத்தில் என் விரலையிட்டு, விலாவில் என் கையை இட்டாலொழிய விசுவசிக்க மாட்டேன்" என்ருர் எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் வீட்டில் இருந்தனர் அவர்களோடு தோமையாரும் இருந்தார். கதவுகள் மூடியிருக்க, இயேசு வந்து அவர்களிடையே நின்று, "உங்களுக்குச் சமாதானம்" என்ருர் பின்பு தோமையாரை "இங்கே உன் விரலை இடு. இதோ, என் கைகள். உன் கையை நீட்டி என் விலாவில் இடு; விசுவாசம் அற்றவனு யிராதே; விசுவாசங்கொள்" என்ருர். தோமையார் அவரை நோக்கி, "என் ஆண்டவரே! என் கடவுளே!" என்க, "என்னைக் கண்டதால் விசுவாசங்கொண்டாய் காணுமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்ருேர்" என்று இயேசு அவரிடம் கூறினுர். (அரு 20 : 19-29).

ஒரு பக்கம் தோமையார் உடனே விசுவசிக்கப் பின்னடைந்ததைப்பற்றி இயேசு கடிந்துகொண்டது உண்மை; மறுபக்கம், தோமையார் அவ்வாறு செய்ததால் இயேசுவின் உத்தானமும், அதனிமித்தம் அவரது தேவத்துவமும் உலகுக்கு நன்கு விளங்குவன ஆயின. மற்ற அப்போஸ்தலர்களின் விசுவாசத்தைவிடத் தோமையாருடைய அவிசுவாசத்தினுல் நம்முடைய விசுவாசம் பெரிதும் உறுதிப்படுத்தப் பட்டது என்பது வேதவல்லுனர்களின் கொள்கை.

பின்ஞெரு முறை இயேசு திபேரியாக் கடலருகே காட்சி தந்தபோது தோமையார் அங்கிருந்தார். கடைசியாக இயேசு வானகத்திற்குச் சென்றபின் அப்போஸ்தலர்கள் தாங்கள் வழக்கமாய்த் தங்கும் மாடி அறையில் பெண்களோடும், இயேசுவின் தாய் மரியாளோடும், அவருடைய சகோதரர்களோடும் ஒரேமனதாய்ச் செபத்தில் ஈடுபட்டிருக்கையில், தோமையார் அங்கிருந்தார் இச்சில நிகழ்ச்சிகளே தோமையாரைப்பற்றிச் சுவிசேஷத்தில் கூறப் பட்டுள்ளவை. அவைகளினின்று அவரது மன உறுதியும் நன்னேக்கமும், இயேசுவின்மீது அவருக்கிருந்த அன்பும், பற்றுதலும், தளரா ஊக்கமும் மட்டற்றவை என்று நன்கு நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

# 2 ஆம் அதிகாரம்

## புனித தோமையாரின் பயணம்

"உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" என்று தம் அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டார் இயேசு அந்தக் கட்டளையின்படி பன்னிரு அப்போஸ்தலரும் தாம்தாம் போகுமிடங்களைத் தெரிந்து கொள்ளும்பொருட்டுத் திருவுளச் சீட்டுப் போட்டனர். தோமையார் பேருக்கு இந்தியா விழுந்தது. அவருக்கு அங்கு செல்ல விருப்பமில்லாததால் "அவ்வளவுதூரம் போக எனக்கு வலிமையில்லை. பின்னும் நானே எபிரேயன். இந்தியருக்குப் போதிப்பது எப்படியாகும்?" என்று கூறினர். ஆயினும், தேவசுதனைப் பின்பற்றித் தேவ ஊழியம் செய்ய ஆசை கொண்ட அப்போஸ்தலர் அவர். தம் ஆண்டவரின் மட்டில் பற்றுதல் உள்ளவர். அவரது அலுவலில் ஊக்கங் குன்ருதவர் இவை உண்மையென முன்கூறிய அத்தியாயத்தில் கண்ட வேதாகம வாக்கியங்களால் நன்கு விளங்கும் ஆகவே, சற்று ஆலோசித்த பின்னர் தடங்கல்களைத் தவிர்த்துச் சுவிசேஷத்தைப் போதிக்கத் தோமையார் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார்.

முதன் முதல் காஸ்பியன் கடலுக்குத் தென்பாகமுள்ள நாடுகளிலும், அர்மேனியா திகிரிஸ் மலைச்சாரலின் கீழ்ப் பக்கமுள்ள நாடுகளிலும் தொடங்கித் தென்பெர்சியாவின் கண்ணுள்ள கார்மீனு வரையிலும் வேதம் போதித்தாரென்பது வரலாற்றின் கூற்று. கன்னிமரியாள் இறக்கும் போது அப்போஸ்தலர் திரும்பவும் பலஸ்தீன் நாட்டில ஒன்று கூடினர். ஆதித் திருச்சபைக்குத் துணையாயிருந்து வந்த தேவதாயின் விண்ணேற்புக்குப்பின் அப்போஸ்தலர்கள் தத்தம் அலுவல்களைத் தொடர்ந்து நடத்த ஆரம்பித்தனர். இதுவரையில் தோமையார் மிதியர், பெர்சியர், ஹிரேனியர், பாக்திரீயர் முதலிய பல இனத்தார்களுக்கு ஞானவாழ்வு அளித்துள்ளார். இப்போது இந்தியாவுக்கே போவதாவென்று யோசித்துக் கொண்டிருக்கையில், ஆண்டவர்

அவருக்குத் தோன்றி, "தோமா! நீ இந்தியாவுக்கே போவாயாக! அவ்விடம் உள்ளோருக்கு நித்திய வாழ்வின் ஒளியை வீசுவாயாக'' என்று விளம்பினர். "என் ஆண்டவரே! வேறெந்த இடத்திற்காகிலும் போகும்படி கற்பிப்பீராக. இந்தியாவோ எனக்கு அச்சத்தை உண்டு பண்ணுகின்றது. அங்கு வேண்டாம்'' என்று கெஞ்சி மன்ருடினர் தோமையார். "தோமா! நான் அங்கேயிருப்பேன் அஞ்சாதே. உன்னல் என் பெயர் மகிமைப் படுத்தப்படும். இந்தியாவிலுள்ள பல இனத்தார் மத்தியில் என்னைப்பற்றிப் போதிப்பாய். எனக்காக நல் யுத்தம் செய்வாயாக. அதன்பின் உன் சகோதரர்களோடு நித்திய ஆனந்தம் சுகிக்க உன்னை அழைத்துக் கொள்வேன். நான்தான் அவர்களுடைய ஆண்டவரும் இரட்சகரும் என்று இந்தியர்களுக்குக் காட்ட நீ பெரும்பாடு படவேண்டிவரும்; அஞ்சாதே''. என்று தைரியம் அளித்தார் இயேசு பரமன்.

தோமையார்: ஆண்டவரே! உம் அடியானை இந்தியாவுக்கு அனுப்பவேண்டாம். வெகுதூரம்; வழியோ மிகக்கடினம்.

இயேசு: "தோமா! நீ போவாயாக! நான் உன்னுடன் இருப்பேன்''.

இதைக் கேட்டவுடன் தோமையார் இயேசுவின் பாதத்தில் வீழ்ந்து "என் ஆண்டவரே! என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேறக்கடவது'' என்று பணிவுடன் பகர்ந்தார். ஆகவே, அலெக்சாந்திரியா – சுயெஸ் வழியாகப் பயணம் செய்து இந்தியாவுக்கு வந்தார் என்பது பாரம்பரை. எங்கு சென்ருலும் தம் எஜமானனின் கட்டளையின்படி சுவிசேஷத்தைப் போதிக்கக் கங்கணங்கட்டி நின்றவராகையால், தோமையார் வரும் வழியில் ஏதென், சொக்கோத்ரா என்ற இடங்களில் சத்தியவேதத்தைப் போதித்துப், பலரை மெய்ம்மறையில் சேர்த்துள்ளார். 1542ஆம் ஆண்டு புனித சவேரியார் சொக்கோத்ரா தீவுக்குப்போனபொழுது பெருந்தொகையான கிறிஸ்தவர்கள் அங்கு இருந்தது இதற்குச் சான்று.

நிற்க, புனித தோமையாரின் இந்தியப் பயணத்தைப் பற்றி விரிவாய் ஆராய்வோம்.

# 3 ஆம் அதிகாரம்

## இந்திய நாடு — இந்திரபட்டணம்.

தோமையார் இந்தியாவுக்குப் போகவேண்டும் என்பது இயேசுநாதர் இட்ட கட்டளை. அதனைச் சிரமேற் கொண்டு உடனே எழுந்து சென்றூர் இராயப்பரிடம்; பெற்றூர் விடை; புறப்பட்டார் பயணம். செசரேயாவுக்கு வந்ததும், அங்கு ஒரு வியாபாரியைச் சந்தித்தார். அவன் பெயர் ஹாபான், யூதகுலத்தோன். கொந்தபோரஸ் அரசனின் தூதன். சிரியா நாட்டிற்கு வணிகக் கப்பலோடு இந்திய அரசனுகிய கொந்தபோரஸ் அவனை அனுப்பியிருந்தான். கடலோரமாக உலாவிக்கொண்டிருந்த ஹாபான், அப்போஸ்தலரைக் கண்டதும் அருகில் சென்று, "புண்ணியரே, என்னிடத்தில் உமக்குத் தேவையானது என்ன?" என்று வினவினுன்.

தோமையார் · "உமது கப்பலில் என்னை இந்தியாவுக்கு ஏற்றிக்கொண்டு போகத் தயை செய்வீரா?"

ஹாபான் : "நல்லது, அப்படியே ஆகட்டும்" என்ருன்.

இருவரும் கப்பலில் ஏறிக்கொள்ளவே பயணம் ஆரம்பித்தது. காற்றும் அநுகூலமாயிருந்தது. கப்பல் செவ்வனே சென்றது. வரும் வழியில் ஏதேனிலும், சொக்கோத்ராவிலும் இறங்கினர்: அங்கு தோமையார் பலரை மனந் திருப்பினுர். அங்கிருந்து புறப்பட்டு ஏறக்குறைய மூன்று மாதகாலம் கடற் பிரயாணம் செய்து, கடைசியாக இந்தியா கிட்டியதை அறியவே, கண்டார் கரையை; கொண்டார் ஆனந்தம் கப்பலுங் கரை சேர்ந்தது. இந்திரபட்டணத்தின் துறைமுகத்தில் நங்கூரம் இறக்கப்பட்டது.

பண்டையகாலத்தில் அந்திரப்போலிஸ் என்றும் அதற்குப்பின் இந்திரபட்டணம் என்றும் வழங்கப்பட்டு வந்த

ஊர் ஒன்றே: அவ்வூரானது இப்போது கராச்சி என்று அழைக்கப்படுகின்றது என்பது வரலாற்று ஆசிரியரின் துணிபு. இந்திரபட்டணம் இந்தியாவின் ஒரு பாகமாகிய சிந்துவுக்கு முக்கியமான ஒரு பட்டணம். ஆகவே தோமையார் இந்தியாவிற்குள் வந்துவிட்டது வெளிப்படை.

பிரயாணிகள் கப்பலைவிட்டுக் கரையிலிறங்கிப் பட்டணத்தை நோக்கிச் செல்கின்றார்கள். மேள தாள வாத்திய தொனி காதிற்கு எட்டுகின்றது. தோமையார், "இந்நகரில் இன்று என்ன கொண்டாட்டம்?" என்று வினவினார். "உமக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி இன்று உம்மைத் தேவர்கள் தான் இந்த இடத்திற்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். ஏனெனில், எங்கள் அரசனின் ஒரே மகளுக்கு இன்று திருமணம். நீர் கேட்டதெல்லாம் கலியாணக் கொண்டாட்டத்தின் ஆரவாரமே" என்று பதில் அளிக்கப்பட்டது.

ஹாபானும் அப்போஸ்தலரும் ஊரில் வந்திறங்கி விடுதியிலிருப்பதை அறிந்த அரசன் அவர்களைக் கலியாண விருந்திற்கு அழைத்தான். அவர்கள் அரண்மனை அடைந்ததும் அரசன் அப்போஸ்தலரை அணுகி, பூமாலை சூட்டி உபசரித்து, மேசையின் முதன்மையான இடத்தில் இருக்கச் செய்தான். ஹாபானுக்குக் கீழிடம் அளிக்கப்பட்டது. அங்கு பரிமாறப் பட்ட உணவுப் பொருட்களையாவது, பானங்களையாவது புனித அப்போஸ்தலர் அருந்தவில்லை. ஆனால் விருந்தினர்கள் மீது தேவ ஆசீர்வாதம் இறங்கும் வண்ணம் தன் இருதயத்தில் தேவனைப்பார்த்துச் செபித்திருந்தார். உணவு அருந்திய பின் அப்போஸ்தலர் எழுந்து எபிரேய மொழியில் செபம் செய்தார். அதன் பொருள் ஒருவருக்கும் விளங்கவில்லை. ஆனால் குழல் ஊதும் ஒரு சிறு யூதப் பெண்மட்டும் அறியலானாள். விருந்தினர் விடைபெற்று ஏகியபின், அரசன் தோமையாரை நோக்கி, "கடவுளுக்கு உகந்த புண்ணியரே! என் மகளை ஆசீர்வதித்தருள உம்மை மன்றாடுகிறேன். ஏனெனில், அவள் என் ஒரேபுதல்வி; இன்று அவளுககுக் கலியாணமாகின்றது" என்றான். உடனே கலியாணப்

பந்தலுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார். தம்பதிகள் அவர்முன் முழந்தாளிட்டுத தலை குனிந்திருக்க, அப்போஸ்தலர் அவர்கள் தலையின் மேல் கை வைத்துப் பின்வருமாறு செபிக்கலானார் "ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் கடவுளே, இவ்விருவரையும் ஆசீர்வதித்தருளும். அவர்கள் இருதயத்தில் நித்திய வாழ்வின் விதையை விதைத்தருளும். அவர்களுக்கு எவைஎவை நன்மையாயிருக்குமோ அவற்றை அருள்வீராக. அவர்கள் எஞ்ஞான்றும் உமது திருவுளப்படி நடப்பார்களாக அவர்கள், இரட்சகராகிய இயேசுவின் பெயரால் பரிசுத்த ஆவியின் கொடைகளால் நிரப்பப்பெற்று உமது அருளால் நடத்தப்பட்டு வருவார்களாக" பின்னர் கைவிரித்த வண்ணம், "எங்கள் ஆண்டவர் உங்களோடிருப்பாராக" என்று மனமுவந்து ஆசீர்வதித்தார். இது முடிந்ததும் கலியாண வீட்டை விட்டு வெளியே சென்றார்.

# 4 ஆம் அதிகாரம்

## நாராங்கோட்டை அரசனும் அரண்மனையும்

தோமையாரும் ஹாபானும் இந்திரபட்டணம் விட்டுக் கப்பலேறி நாராங்கோட்டை வந்தடைந்தனர். அது ஒரு பெரிய நகரம். கொந்தபோரஸ் எனும் அரசன் அதை ஆண்டு வந்தான். அவ்வூரானது தற்காலத்தில் சிந்துவுக்குத் தலைநகரமாகிய ஹைதராபாத் என்று எண்ணப்படுகின்றது. ஹாபான் அரசனை அணுகி சிரியா நாட்டினின்று மிக்க ஞானமுள்ள புண்ணியசீலர் ஒருவரைத் தன்னோடு கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தான். அரசன் அன்னாரைக் காண அவாவுற்றுத் தன்முன் கொண்டுவரச் சொன்னான். தோமையார் மன்னன்முன் வரவே "நீர் எனக்கோர் உயர்ந்த அரண்மனை அமைக்கக் கூடுமா?'' என்று வினவினான் கொந்தபோரஸ். "ஆம், என்னால் கூடும்'' என்று விடை பகர்ந்தார். அவ்வாறு அவர் மொழிந்தபோது தாம் இந்தியாவுக்கு வந்து கட்ட நினைத்த ஞானமாளிகையையே கருதிச் சொன்னார்.

அரசன் அவரைப் பட்டணத்து வாசலுக்கு வெளியே மைதானத்திற்குக் கொண்டுபோய் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி, "எனக்கு இங்கு எத்தகைய மாளிகையைக் கட்டக் கூடும்'' என்று வினவினான். அதற்கு அப்போஸ்தலர் கோலொன்றைஎடுத்துத் தரையில் அடித்தளம் போடவேண்டிய முறையைக் குறிப்பிட்டார். பின்னர் மாளிகையின் அளவுக்கு இசைந்தாற்போல் சுவர்கள், வாசல்கள், சன்னல்கள் அமைக்கப்படுவதை அளந்தார். அரச குடும்பத்தார் தங்குவதற்கேற்ற சிறந்த இல்லிடமும், அவருடைய பரிவாரங்கள், ஏவலாட்கள், அரண்மனைக் கைத்தொழிலாளர் முதலியோர் வசிக்கத் தனித்தனி இடங்களும், அவரவர் அந்தஸ்திற்குத் தகுந்தாற்போல் அளவும் அழகுங்கொண்ட விதமாய்க் கட்டுவதற்குரிய மாதிரியாக 'பிளான்' ஒன்று தரையில் எழுதி அரசனுக்குக் காண்பித்தார். இதைச் செய்கையில் கடவுள் பரலோகத்தில் ஒரு மாளிகைக்கு அஸ்திவாரம் இடுகிறு

றென்று எண்ணிக் செய்து கொண்டிருந்தார். பின் உயரப் போகும் தனது மாளிகையின் படத்தைத் தரையில் பார்த்துப் பிரமித்தான் மன்னன்; ஆனந்தம் கொண்டான். "நீ அரசர்களுக்கு வேலைசெய்யத் தகுதியுள்ள சிறந்த சிற்பியே'' என்றும் போற்றினன். வேலையைத் துவக்கி நடத்தும்பொருட்டுப் பெரும் செல்வத்தையும் அளித்தான். திருப்தியாக எல்லாம் முடியுமென மன அமைதியோடு நாராங்கோட்டையை விட்டு, அரசன் முக்கிய அலுவலாய் வேற்றூர் போயினன்.

தேவநேசம் பற்றி எரிய, பிறர்நேசம் பொங்கி நின்றது அப்போஸ்தலரிடம். ஆகவே, மக்கள் எல்லாருக்கும் நல் வழிகாட்டும் வண்ணம் கடவுளால் ஏவப்பட்டு, அந்த அரசின் பட்டணங்கள், கிராமங்களுக்குப்போய், ஏழைகளுக்கு அரசனின் பொருளைத் தாராளமாக வழங்கினர். நோயாளிகள் மீது இரங்கிக் கடவுள் இரக்கத்தால் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். அன்னோரது அன்பையும் செல்வாக்கையும் இவ்வாறு கைப்பற்றவும், மெய்ம்மறையைப் போதிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது அவரது போதனையைக் கேட்ட பலர் ஞானதீட்சை பெற்றனர். அரசன் அவ்வூர் திருப்புவதற்குள் பல கோவில்களைக் கட்டி ஆங்காங்கு வழிபாடு நடத்தக் குருக்களும் நியமிக்கப்பட்டார்கள். ஆகவே, திருச்சபையானது பலத்த அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டிருந்ததென்று சொல்லலாம்.

நம் அப்போஸ்தலரின் நடவடிக்கைகள் இப்படியிருக்கையில், இந்திரபட்டணத்தரசன், முன்னர் தோமையார் உரைத்த இனியமொழிகளைச் சிந்தித்து, கடவுள் அருளால் ஏவப்பட்டவனாய், தன் மகளோடும் மருமகனோடும் நாராங்கோட்டைக்கு வந்து சேர்ந்தான். சேர்ந்தவுடனே அப்போஸ்தலரைத் தேடி அடைந்து, அவரை அணுகி, "பராபரனுக்கு உகந்த புண்ணியரே! நாங்கள் கிறிஸ்துவின் மட்டில் முற்றும் பற்றுதல் கொண்டுள்ளோம். எங்களைச் சத்தியத்தில் நிலைநிறுத்துவீராக" என்று வெகு விநயமாகக் கேட்டான். அவர்கள் வேத சத்தியங்களை நன்கு கற்றுக் கொண்டபின், தோமையார் அவர்களைத் திருச்சபையின்

மக்களாக ஏற்றுக்கொண்டார். அரசனுக்குச் சாந்திப்புஸ் என்றும், அவர் மருமகனுக்குத் தெனிஸ் என்றும், மகளுக்கு பெலாஜியா என்றும் பெயரிட்டார்.

மெஞ்ஞானச் சுடர் கொளுத்தப்பெற்ற இந்திர பட்டணத்து அரசராகிய சாந்திப்புஸ் தமது அரசை முற்றும் துறந்து, தேவ ஊழியத்திலேயே தமது எஞ்சிய வாழ் நாளைச் செலவழிக்கத் தீர்மானித்து அத்தீர்மானத்தைத் தோமையாருக்குத் தெரிவிக்கவே அவரும், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல மகிழ்ச்சிகொண்டு, அதற்கு இசைந்து அவருக்கு டீக்கன் பட்டமளித்து, அவரைத் தமது பிரியாத் துணையாக வைத்துக்கொண்டார். தெனிசும் பெலாஜியாவும் தமது நாட்டுக்குச் சென்று கிறிஸ்துவை எங்கும் போதித்தார்கள். அதன் பலனைப் பலர் மெய்யங் கடவுளைத் தொழுவாராயினர். அன்னோர்க்குப் பணிபுரிய ஒரு குருவானவரைத் தோமையார் அங்கு அனுப்பினார்.

இது நடந்த சில ஆண்டுகளுக்குப்பின் தெனிசும், அவன் மனைவியும் முழுமனத்துடன் உலகப் பற்றுதலை ஒழித்துக் கடவுளைச் சேவிக்க விருப்பம் கொண்டனர். அவர்களது நற்கருத்தை ஆலோசித்து அறிந்த அப்போஸ்தலர், தெனிசை இந்திரபட்டணத்து மேற்றிராணியாராக அபிஷேகம் செய்தார். பெலாஜியாவோ, தன்னைக் கடவுளுக்கு முழுதுமே தியாகம் செய்தாள் என்பதற்கு அறிகுறியாகத் துறவறம் பூண்டாள்.

தெனிஸ் மேற்றிராணியார் இறந்திடவே புது அரசன் பட்டத்துக்கு வந்தான். அவன் பெலாஜியாவை கிறிஸ்துவத்திலிருந்து திருப்ப முயன்றான். சிலைகளுக்குத் தீபதூபங் காட்டவேண்டும் என்று உத்தமிக்குக் கட்டளையிட்டான். பல தடவை அச்சுறுத்தி வற்புறுத்தினான். அஞ்சா நெஞ்சம் படைத்த அப்புண்ணியவதி அதற்குச் சற்றேனும் ஒப்ப வில்லை. ஆதலால் சினங்கொண்டு அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். தீர்ப்பைக் கேட்டாள் திட மனத்துடன்; உயிரை ஒப்புக்கொடுத்தாள் இயேசுவுக்கு; இந்தியாவிற்கு முதல் வேதசாட்சியாக விண்ணக முடிபெற்றாள்.

இரண்டு ஆண்டுகாலம் வெளியூர் போயிருந்து நாராங்கோட்டைக்குத் திரும்பிவந்தான் கொந்தபோரஸ் அரசன். தான் ஏற்பாடுசெய்த உன்னத மாளிகை முடிவு பெற்று இருக்குமென்று எண்ணி, அதைப் பார்க்க அவாக்கொண்டு "அப்போஸ்தலரால் கட்டப்பட்ட எனது மாளிகையைப் பார்க்க என்னுடன் வாருங்கள்" என்று தம் நேயர்களை அழைத்தான். "அரசே! மாளிகை ஒன்றும் கட்டப்படவில்லையே. அவர் இதுகாறும் அரண்மனை வேலையைத் தொடங்கினதாகத் தெரியவில்லை. அதற்கு மாருக நமது அரசில் பல திசைகளுக்கும்போய், மக்களுக்கு ஒரு நூதன மதத்தைப் போதித்து அவர்களில் பலரைத் தன்வசப்படுத்தி உள்ளார். அவர் போதிப்பது நவீனமாகவே இருக்கின்றது. அம்மார்க்கத்தைத் தழுவுவோருக்கு நித்திய வாழ்வு உண்டு என்றும், அவர் போதிக்குங் கடவுளை நம்பினோர் மரணத்துக்குப்பின் நித்திய வாழ்வு அடைவார்கள் என்றும் உறுதி கூறுகிருர். இதுமட்டுமன்று; பேயை ஓட்டுகிருர், நோயாளியை குணப்படுத்துகிருர்; இறந்தோரை உயிர்ப்பிக்கிருர். இத்தகைய அற்புதமான பேருபகாரங்களுக்கு யாதொரு நன்கொடையும் கைம்மாறும் ஏற்றுக்கொள்ளுவதில்லை. இவர் ஒரு மந்திரவாதி என்பதில் ஐயமன்று. நாடெங்கும் உம் குடிகளை ஏமாற்றிக்கொண்டு திரிகிருர். இத்தனைக் காலமாக ஊர்கள், கிராமங்களெல்லாம் சுற்றிவிட்டு இப்போது திரும்பவும் நாராங்கோட்டைக்கு வந்திருக்கிறதாகச் செய்தி" என்று அரசனுக்கு எடுத்து உரைத்தனர் அவர் சிநேகிதர். இதைக் கேட்டவுடன் எரிகிற கொள்ளியில் எண்ணெய் இட்டாற்போல அரசனின் சினம் அதிகரித்துப் பொங்கிற்று. "உடனே அவனை என்னிடம் கொண்டுவாருங்கள்" என்று சேவகருக்குக் கட்டளையிட்டான்.

அவ்வண்ணமே அப்போஸ்தலர் அரசன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டார். "நான் கட்டளையிட்ட மாளிகையை இப்பொழுதே கட்டி முடிப்பாயாக; இன்றேல் நீ உயிர்துறப்பது நிச்சயம்'' என்று வெகுவாகச் சினந்து கூறினான் அரசன். "கொந்தபோரஸ் அரசே! உமது

மாளிகை கட்டியாகி விட்டது. ஆனால், அது இவ்வுலகில் அல்ல, பரலோகத்தில் இருக்கின்றது. அப்பரகதியில் போய்ச் சேர்ந்த பிறகுதான் அதை நீர் பார்த்து வியப்புறுவீர்'' என்று சாந்தமாகப் பகர்ந்தார் தோமையார். "ஆகா! நீ எங்களை ஏமாற்றுகிறாய் போலும்; நாங்கள் முழு மூடர்கள் என்று நினைத்தாயா? உன் மாயப் பேச்சால் நான் மகிழ்ந்திட மாட்டேன். எச்சரிக்கை!'' என்று கதறிக் கொண்டு அப்போஸ்தலரையும் ஹாபானையும் சிறையிலிடக் கட்டளையிட்டான். அப்போஸ்தலரோ, இயேசுவுக்காக வாதனைப்பட வேண்டியதின் நிமித்தம் ஆனந்தங்கொண்டு ஹாபானோடு மறியலறை சென்றார். ஆனால் ஹாபான் திகைத்து நிற்பதைப் பார்த்து, "சிநேகிதா! அஞ்சாதே! கடவுள்மேல் நம்பிக்கையாயிரு. இவ்வுலகைவிட்டு விலகின வுடன் பரகதியில் நித்திய பாக்கியம் அடைவாய்'' என்று அவனுக்கு ஆறுதல் சொன்னார்.

அரசனோ, அப்போஸ்தலரை எத்தகைய சாவுக்கு உட்படுத்துவதென ஆலோசித்துக் கடைசியாக இருவரையும் உயிருடன் தோலுரித்து நெருப்பிலிட்டுக் கொல்வதே தகுந்த தண்டனையாகுமெனத் தீர்மானித்தான்.

# 5 ஆம் அதிகாரம்

## நாரங்கோட்டையில் அற்புதங்கள்

அவர்களிருவரும் சிறையிலிருக்கையில் அரசனின் இளைய சகோதரன் காத் என்பவன் இறந்தான். அரசன் தன் சகோதரனை அதிகமாக நேசித்து வந்தமையால் சொல்லொண்ணுக் கவலைக்கு உள்ளாகினுன் தனது அன்பைக் கடைசி முறையாக வெளிப்படையாய்க் காட்டும்பொருட்டு அவன் சடலத்தை அதிக ஆடம்பரத்துடன் ஊர்வலமாகக் கொண்டு வந்து அடக்கம் செய்யும்படிக் கட்டளையிட்டான.

மரித்த நான்காம்நாள் முதல் நாழிகையில், உற்றுர், உறவினர், நண்பர் புடைசூழ்ந்திருக்க, பூசாரிகள் மந்திரங்கள் ஓதி இறுதிச் சடங்குகள் நடத்தினர் கவலையினிமித்தம் அரசன் அங்கு வரவில்லை. அடக்கச் சடங்கு ஆரம்பித்ததும் ஓர் ஆச்சரிய சம்பவம் நேரிட்டது சவமாய் மரத்துப் போயிருந்த காத் கட்டிலைவிட்டெழுந்து அக்கம் பக்கமெல்லாம் திரும்பிப் பார்த்துவிட்டுத் தான் தேடுகிறவர் அருகில் இல்லையென்று அறிந்ததும், சுற்றி நின்ருேரை நோக்கி "என் சகோதரரை அழைத்து வாருங்கள்'' என்று கூவினுன். உடனே அரசனிடம் தூதன் விரைந்தோடி, ''மன்ன! உமது சகோதரர் உயிர்த்துவிட்டார்'' என்று இயம்பினுன். இதைக்கேட்டதும் வியப்புற்று; தம்பியிடம் விரைந்து சென்ருன் அரசன். அநேகர் அவரைப் பின்சென்ருர்கள். செத்துச் சவமாயிருந்த தன் சகோதரன்பக்கம் வந்ததும், அரசன் முகம் வெளுத்து இருதயம் துடிக்க, அச்சம் மேலிட்டவனுய் வாய்பேச இயலாது மலைத்துப் போய்விட்டான். அப்போது காத், பயம் வேண்டாம் எனும் வண்ணம் சயிக்கினை காட்டித் தமையனைப் பார்த்து, "அண்ணு! என் உயிரைக் காக்க யாரேனும் உமது அரசில் பாதி கேட்பினும் மறுப்பீரோ? மறுக்க மாட்டீர் என்பது எனக்கும் தெரியும். நீர் இவ்வளவு காலம் பெரும் செல்வத்தைச் செலவிட்டுச் சம்பாதித்த

கருவூலத்தை எனக்குத் தயவு செய்து விட்டுவிடுவீராக. அதுவே நீர் எனக்குச் செய்யக்கூடிய பேருபகாரம்" என்று மன்ருடினன்.

"தம்பி நான் உனக்குக் கொடுக்கக்கூடிய பொருள் யாது? எனக் கேட்டான் அரசன். "எனக்கு விற்றுவிடுவேன் என்று முதலில் பிரமாணம் செய்துகொடும்" என்ருன் காத். தனக்குச் சொந்தமானவற்றில் எதைக் கேட்பினும் மறுக்காது அளிப்பதாக சத்தியம் செய்தான் கொந்தபோரஸ் அரசன். இவ்வாறு உறுதிமொழி பெற்றுக்கொண்டபின் தமையனை நோக்கி, "அண்ணு! விண்ணகத்தில் நீர் வாங்கியிருக்கும் மாளிகையை எனக்கு விற்றுப்போடும்" என்று அதிக ஆவலோடு கேட்டான். "சகோதரா! யார் எனக்கு அத்தகைய மாளிகையை அளித்தது?" என்ருன் அரசன். அதற்கு, "அண்ணலே! நெருப்பிலிட்டுக் கொன்றுபோடும்படி ஒருவரை மறியலில் வைத்திருக்கின்றீர். அவர் ஓர் அருளுடையார். கடவுளுக்கு உகந்த புண்ணியசீலர். நான் இறந்தவுடன் தேவதூதர் என்னை இகலோகமிருந்து பரலோகங் கொண்டுபோயினர். ஆங்கு ஒரு பிரமாண்ட மாளிகையைக் கண்ணுற்றேன். அதன் அழகு அலங்காரம் எடுத்துக் கூறும்தரமன்று. பளபளவெனப் பளிங்குபோல் பிரகாசிக்கும் சுவர்களெழுப்பி, நவமணிகளால் இழைக்கப்பட்டு, சொல்லற்கரிய அலங்காரத்துடன் விளங்கியது அம்மாளிகை. 'இது தோமையார் உன் சகோதரனுக்காகக் கட்டியுள்ள அரண்மனை. ஆனல் அவன் இதற்குத் தகுதியற்றவனுகிவிட்டான். ஆகையால், தோமையார் உனக்காக மன்ருடினர். உனக்கு உயிர்ப்பிச்சைக் கிடைக்கும். அதன்பின், உன் தமையன் ஏழைகளுக்கு ஈயாத பணத்தை நீ அவனுக்கு ஈடு செலுத்திவிட்டு, இம்மாளிகையைக் கைப்பற்றிக்கொள்' என்று வானவர் கூறினர்" என அழுத்தமாகச் சொன்ஞன் காத். இதைக்கேட்ட அரசன் திகில் கொண்டு, "தோமாவின் கடவுளே! என் அறியாமையை மன்னித்து என்பால் இரங்கும்" என்று மனக்கவலையுடன் இரந்து வேண்டினன் கடவுளை,

காத் உடனே படுக்கையைவிட்டெழுந்து திரண்ட மக்களினிடையே ஓடிச் சிறைச்சாலைக்குச் சென்று, தோமையார் பாதத்தில் விழுந்து வணங்கி, "ஆண்டவரின் அப்போஸ்தலரே! என் தமையன் செய்த தப்பிதத்தைப் பொறுத்தருள்வீராக" என மன்றாடினான். தோமையார் அவனை முக மலர்ச்சியோடு உற்று நோக்கித் தம் கரங்களால் அவனது நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந்து "என் மகனே! ஆண்டவருடைய சமாதானம் உன்னோடு இருப்பதாக" என்று ஆசீர்வதித்தார்.

தோமையார், காத் ஆகிய இருவரும் சிறையைவிட்டு வெளியேறி வந்தனர். அரசன் எதிர்கொண்டு சென்று அவர்களைச் சந்தித்தான். அப்போஸ்தலரைக் கண்டதும் அவர்முன் தெண்டனிட்டு விழுந்து கலங்கிய மனத்தோடும் கவலைகொண்ட முகத்தோடும் தன் பிழையை மன்னிக்கும்படி அவரை வேண்டினான். "கடவுளுக்கு உகந்த புனிதரே! தேவரீர் எனக்காக விண்ணகத்தில் கட்டிய மாளிகையை அடியேன் உரிமையாக்கி கொள்ளத் தகுதியுள்ளவனாகும்படி உம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை எனக்காக மன்றாடும். நீர் போதிக்கும் இறைவனின் மெய்யான தொண்டனாக நான் ஒழுகும்படி எனக்கு உதவி செய்தருளும்" என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டான். இரு சகோதரர்களும் கடவுளைத் துதித்துத் தோமையாரோடு தங்கிவிட்டனர். ஏழு தினங்கள் அவர்கள் அறியவேண்டிய வேத சத்தியங்களை அவர்களுக்குக் கற்பித்தபின், இருவருக்கும் ஞானஸ்நானங் கொடுத்தார் தோமையார். மூத்தவனுக்கு இராயப்பன் என்றும், இளையவனுக்குச் சின்னப்பன் என்றும் பெயரிட்டார்.

## பல்லாயிரம் பக்தர்கள்

இந்நற்செய்தி எங்கும் பரவிற்று. குடிமக்கள் வியப்பும் மலைப்பும் கொண்டனர். அப்போஸ்தலருடைய அமிர்த மொழிகளைக் கேட்க ஆவலாய் அவரைவிடாது பின்தொடர்ந்தார்கள். அவர்மீது பற்றுதல் கொண்டவர்களின் தொகை அமோகமாக அதிகரித்தது. அன்னோர் எல்லாரையும்

கொள்ளத் தக்க மண்டபம் ஆங்கில்லாது போயிற்று. ஆதலால் ஊருக்கு வெளியே, கஞ்சோ (காஸி) மலை அடிவாரத்தில் அவர்களை அழைத்துச்சென்று போதித்தார். அக்கும்பலில் இருந்த நோயாளரைப் புறம்பாக்கி, அவர்கள்பால் இரங்கி, வானத்தை ஏறெடுத்துப்பார்த்துக் கரங்களை விரித்து, "எமது ஆண்டவரும் கடவுளுமாகிய இயேசு கிறிஸ்துவே! உமது திருப்பெயரால் நாங்கள் கேட்பதை அளிப்பதாகத் திருவுளம்பற்றி இருக்கிறீர். இதோ! இங்குக் குழுமியிருக்கும் குருடர்களுக்குக் கண்பார்வை கொடுத்தருளும்; செவிடருக்குச் செவி அளித்தருளும். பற்பல பிணிகளால் வாதைப்படுவோர் குணமடைந்து மகிழ்வார்களாக. அதன் பலனாக, பிதா சுதன் பரிசுத்த ஆவியாகிய மூன்ருட்களும், ஏக தேவனும், சர்வ வல்லபரும், நித்தியருமாயிருக்கும் கடவுளை ஒருமனப்பட்டு விசுவசிக்கும்படியாக, இயேசு தேவனே! உமது பேரால் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்" என்று மன்ருடினர். அங்கு கூடியிருந்த கிறிஸ்தவர்கள் அனைவரும், "ஆமென்" என்று முடித்தார்கள். உடனே மேகங் கருக்க, இடி முழங்கிற்று. மக்கள் தலைகுப்புறத் தரையில் வீழ்ந்தனர் எங்கும் மௌனமாயிருந்தது. "எழுந்திருங்கள் மக்களே! தேவன் உங்கள் மீது கருணை கூர்ந்து அருள் செய்து உங்கள் பிணிகளையெல்லாம் குணப்படுத்தி விட்டார். அவருக்கு நன்றி கூறுவீர்களாக" என்று உரைத்தார் அப்போஸ்தலர். எல்லாரும் எழுந்தார்கள். நோயாளிகள் எல்லாரும் குணம் அடைந்திருந்தார்கள். ஆகவே, சகலரும் வானத்தை அண்ணார்ந்து பார்த்த வண்ணம் தத்தம் இருதயத்தினின்று பொங்கிய நன்றியைக் காட்ட ஒரே குரலாய்த் துதி பாடினர். ஏற்பட்ட நற்சமயத்தை நழுவவிடாது தோமையார் அரியதொரு பிரசங்கம் அவர்களுக்குச் செய்தார். அதைக்கேட்டு அவரைப் பின்பற்ற மனம் ஒத்தவர் பலர். அவர்களுக்குச் சிலநாள் அளவாகத் தக்க போதனை சொல்லி, அவர்களை மெய்ம்மறையில் சேர்த்தார். இப்படி ஞானதீட்சை பெற்றவர்களில், பெண்களும் சிறுவருமன்றி ஆண்கள் மட்டும் ஒன்பதினுயிரமாம்.

## பேய் ஓட்டுதல்

ஒரு நாள் அப்போஸ்தலர் பட்டணத்திலிருந்து வெளியே போய்க் கொண்டிருக்கையில் ஒரு பெண்ணைக் கண்டார். அவளுக்குப் பேய் பிடித்திருந்தது. அதனிமித்தம் கீழே விழுந்து புரண்டுகொண்டு கிடக்கையில் அவளிடமிருந்த பேயானது, "கிறிஸ்துவின் அப்போஸ்தலரே! ஏன் எங்களை வாதிக்கின்றீர்? இப்போது எங்களைத் துரத்தி அடிக்க வந்திருக்கிறீரே'' என்று பரிதாபமாக ஓலமிட்டது இதைக் கேட்ட தோமையார், "சாத்தானே! இப்பெண்ணின் உடலுக்கு யாதொரு தீங்கும் விளைவிக்காமல் அவளை விட்டு உடனே அகன்று போகும்படி எம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் உனக்குக் கட்டளை இடுகிறேன்'' என்றார். அதைக் கேட்ட பசாசு மன எரிச்சலுடன், "இந்தப் பெண்ணை விட்டுப்போகும்படி கட்டளையிட்டிருக்கின்றீர். ஆனால் இவளைவிட உயர்ந்த நிலைமையிலுள்ள வேறொரு பெண்ணைப் பற்றிக்கொள்வேன்'' என்று கூறிக்கொண்டே ஓட்டம் பிடித்தது. அதற்குப்பின் அப்பெண் எழுந்து நின்றாள். தோமையார் தம் கரங்களை அவள் தலையின்மேல் வைத்து ஆசீர்வதித்து, "கடவுளது கருணை உனக்கு எப்போதும் இருக்கக்கடவது'' என்று உரைத்தார். அவளோ அப்போஸ்தலர் பாதத்தில் தெண்டனிட்டு, ஞானதீட்சை கொடுக்கும்படி ஆவலுடன் அவரை மன்றாடினாள். தோமையார் உடனே ஒரு நீர் ஊற்றை ஆசீர்வதித்து, அவளுக்கும் வேறு சிலருக்கும் இந்நற்பலனை மனமுவந்து அளித்தார்.

## ஒரு இளைஞனின் வரலாறு

பின்னொரு நாள், திருப்பலி பூசை நிறைவேற்றுவதற்காக, அவர் துணைவராகிய 'டீக்கன்' மேசையொன்றைத் தரையில் நிறுத்தி, அதன்மேல் வெண்துணி பரப்பி, அப்பத்தையும் இரசத்தையும் வைத்தார். அப்போஸ்தலர் பூசை நிறைவேற்றினார். விசுவாசிகளுக்குத் திவ்ய நன்மை கொடுக்கும் பொழுது ஒரு வாலிபன் தன் இரு கைகளை நீட்டினான். அவன் கையில் நன்மை வைக்கப்பட்டது.

அவ்விளைஞன் நற்கருணையைப் பெற்றதும் அவன் இரு கைகளும் மரத்து விரைத்துப்போக, வாயின் அருகில் அதைக் கொண்டுபோவதற்கு இயலாது போயிற்று இதைப் பார்த்த அப்போஸ்தலர் திகைத்துப்போய் "வாலிபா! நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் ஒவ்வொருவருக்கும் சுகம் அளிக்கின்றது. உனக்கோ இத் துன்பம் வந்தது எப்படி? யாது காரணமும் இன்றி இப்படி நிகழாது. ஆகையால் இதன் காரணம் என்னவாயிருக்க லாம்?'' என்று வினவினர். அப்போது இளைஞன் உடல் நடுங்க, மனம்கலங்கக் கண்ணீர் விட்டு பயத்தோடும் மனக்கவலையோடும் அவையோர் முன்னிலையில், "இரு நாள் களுக்கு முன்னுல் நான் வீட்டிற்குப் போனபோது, என் மனைவி எனக்குத் துரோகம் செய்து அயலான் ஒருவனுடன் தகாத முறையில் நடக்கக் கண்டேன்; கடுங்கோபம் கொண் டேன். இருவரையும் கொல்லத் துணிந்தேன். ஆனுல் அந்தப் படுபாவி தப்பித்து ஓடிவிட்டான்; மனைவியைப் பிடித் தேன்; நையப் புடைத்தேன். இப்போது சாகுந்தறுவாயி லிருக்கிருள்'' என்று தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டான்.

அப்போஸ்தலர் இளைஞனைக் தனிமையாக அழைத்துப் புத்தி புகட்டினர். அவன் அதன்பின் மிகவும் மனம் நொந்து துக்கப்பட்டான். தன் பாவங்களை யெல்லாம் சொல்லி மன் னிப்புப் பெற்ருன். தோமையார் ஒரு பாத்திரத்தில் தண் ணீர் நிரப்பி அதை மந்திரித்த பின்னர் வாலிபனை நோக்கி "உன் கைகளைத் தண்ணீரில் விடு'' என்று சொன்னர். அவன் அப்படிச் செய்ததும், அவற்றைப் பற்றியிருந்த கடு நோய் சட்டென்று அகலக் கைகள் முன்போலாயின. அதற் கப்பால் அவர், "நீ இப்பாதகத்தைக் கட்டிக்கொண்ட இடத் திற்குப் போவோம் வா'' என்று அழைத்துக்கொண்டு வாலிபன் முன்னும், பெருந்திரளான மக்கள் பின்னுமாகப் போனர். இல்லம் வந்ததும், உட்புகுந்துபார்க்கப் பெண் இறந்து கிடந்தாள். அவள் சிறு வயதினள். அவளைப் பார்த்ததும் தோமையார் மனம் இளகிற்று. "அவளைத் தூக்கிவந்து தாழ்வாரத்தில் வையுங்கள்" என்ருர். அவர்

சொற்படி அவளைத் தூக்கிவந்து ஒரு கட்டிலின்மேல் கிடத்தினார்கள். அப்போஸ்தலர் அப்பிணத்தண்டை அணுகித் தம் இரு கைகளையும் உயரத் தூக்கி, வானத்தை அண்ணார்ந்து நோக்கி "எங்கள் எளிய வேண்டுதலைக் கேட்டருளும் என் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே! இங்கிருக்கும் மக்கள் உமது திருப்பெயரைப் புகழவும், உம்மிடம் நம்பிக்கை வைத்து நித்திய வாழ்வு பெறும்பொருட்டும், மரித்துக் கிடக்கும் இப்பெண்ணுக்கு உயிர் அளித்தருள்வீராக'' என்று செபித்தார். பின்னும் வாலிபனை நோக்கி, ''உன் இருதயத்தைக் கடவுள் பக்கம் திருப்பி, அவரிடத்தில் நம்பிக்கை வைத்து, உன் மனைவியிடம் போய் 'நான் உன்னைக் கொன்றேன். ஆனால் தேவனாகிய இயேசு என் விசுவாசத்தைப் பார்த்து உன்னை உயிர்ப்பிக்கிறார். பெண்ணே எழுந்திரு' என்று சொல்வாயாக" எனக்கற்பித்தார். வாலிபனும் அவ்வண்ணமே பிணத்தருகே போய், "என் ஆண்டவராகிய இயேசுவே! மெய்யாகவே நான் உம்மை நம்பியுள்ளேன்'' தோமையாரைப் பார்த்து, "அப்போஸ்தலரே! எனக்காக மன்றாடும்" என்று வேண்டிக்கொண்டு பெண்ணின் கைகளைப் பற்றினான். ஆ! ஆச்சரியம். மரித்திருந்த பெண் நித்திரையிலிருந்து எழுவதுபோல் படுக்கையை விட்டு எழுந்து நின்றாள். நாலாபக்கமும் பார்த்தாள். கும்பலைக் கண்டு வியந்தாள். அப்போஸ்தலரைக் கண்டதும் விரைந்தோடி அவரது பாதங்களில் தெண்டனிட்டாள். அப்போஸ்தலர் இருவரையும் மந்திரித்து, "பிரிய மக்களே! கடவுள் உங்கள் மட்டில் பெருங்கருணை காட்டியுள்ளார். மகிழ்ச்சியாயிருங்கள். இனிமேல் பாவங் கட்டிக்கொள்ளாதேயுங்கள்'' என்று அறிவுரை கூறினார். இதைக் கண்ணுற்ற மக்கள் கிறிஸ்துவை நம்பினர் என்று சொல்லவும் வேண்டுமோ? எல்லாரும் ஞானதீட்சை பெற்றார்கள். ஏழைகட்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படியாக ஏராளமான காணிக்கைகளைத் தோமையாரிடம் கொடுத்தார்கள்.

தோமையாரோ, சத்திய வேதத்தைப் போதிப்பதில் சலிப்படையவில்லை. இளைப்புக்கும், களைப்புக்கும் அஞ்ச

வில்லே. வேதாகமங்களில் குறித்துப் பேசப்பட்டுள்ள மெசியாஸ் இயேசுவே என்று எப்பொழுதும் பிரசங்கித்து வந்தார். இப் புனிதரின் போதகமும், தருமச்செயல்களும் அற்புதங்களும், எங்கும் பரவின. அவரிடம் கொண்டு வரப் பட்ட பற்பல நோயாளிகளின் தொகைக்குக் கணக்கில்லே. அவர் செல்லும் வழிகளிலே முதலாய் நோயாளிகளைப் படுக்கையுடன் கொண்டுவந்து வைப்பார்கள் அவரும் அவர்களை இயேசுவின் வல்லபத்தைக்கொண்டு அவரது பரிசுத்த சிலுவை அடையாளத்தினுல் குணப்படுத்துவார் இவ்வாறு குணம் அடைந்தவர்கள் கடவுளைப்போற்றித் துதி பாடிக்கொண்டு போவார்கள்.

எண்ணிறந்த மக்களைத் தோமையார் மனந்திருப்பவே, இராயப்பனென்னும் கொந்தபோரஸ் அரசன் ஏராளமான செல்வத்தைச் செலவிட்டுக் கோவில்களைக் கட்டினுன் பேயின் மாயவலேயினின்று இயேசுவின் மந்தைக்குக் கொண்டுவரப் பட்டவர்களுடைய நன்மைக்காக, தேவ ஊழியம் புரிவதற்கு அத்தியாவசியமாகிய பல குருக்களையும், டீக்கன்மார்களையும் ஏற்படுத்தி சிந்து மாகாணத்தில் திருச் சபையை நிலே நிறுத்தினுர். அரசனின் சகோதரராகிய காத் என்னும் சின்னப்பரை அவ்விடத்திற்குப் பெரிய குருவாக அபிஷேகஞ் செய்து நியமித்துவிட்டு, மெய்ம் மறையை வேறிடங்களில் போதிக்க நாராங்கோட்டையை விட்டுப் புறப்பட்டார்.

## நாராங்கோட்டையின் சரித்திர ஆராய்ச்சி.

அப்போஸ்தலரது பிந்திய நடவடிக்கைகளைத் தொடர்ந்து சொல்லுமுன் நராங்கோட்டையைப் பற்றிய சில விவரங்களை ஆராய்வது உசிதமாகும். நாராங்கோட்டை தற்போது சிந்துவுக்குத் தலே நகரமாய் விளங்கும் ஹைதராபாத் என்பது பொது அபிப்பிராயம். 1834 ஆம் ஆண்டு கொந்தபோரஸ் அரசனின் பெயர்கொண்ட சில நாணயங்கள் ஆப்கனிஸ்தானில் அகப்பட்டன. அதற்குப் பின் அவைபோன்ற வேறு சில, காபுல், கந்தாஹார்,

சீயஸ்தான், வடக்குப் பஞ்சாப், மேற்குப் பாஞ்சாப் நாடுகளிலும் கண்டெடுக்கப்பட்டன. இந்நாணயங்கள் கிறிஸ்துவுக்குப் பின் முதல் நூற்றாண்டில் வழங்கப்பட்டுள்ளன என்பது தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் துணிபு. ஆகவே, கொந்தபோரஸ் தோமையார் காலத்திலுள்ள ஓர் அரசன் என்று தெரிய வருகின்றது. அந்த அரசனின் அரசில், கீழ் ஆப்கனிஸ்தான் பாஞ்சாபின் ஒரு பாகம், இண்டஸ் (சிந்து) நதிவரையிலுமுள்ள சிந்து நாடுகளெல்லாம் அடங்கியிருந்தன வென்பது வரலாறு. ஆகவே இவ்விரு ஆதாரங்களும் தோமையார் சிந்துவுக்கு வந்த உண்மையை எண்பிக்கின்றன.

சிந்துவின் வட பாகத்தில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதற்கு யாதொரு அடையாளமும் காணப்படவில்லை. ஆனால் தென்பாகத்திலோ அடையாளங்கள் பலவுள. ஆதலால் தென்பாகத்திலேயே தோமையார் மதப்பிரசாரஞ் செய்து உழைத்தாரென்று துணிவாகக் கொள்ளலாம். அவரது போதனையால் கிறிஸ்தவர்கள் பெருக, திருச்சபை எந்த அளவு ஒளி விட்டது என்பதற்குப் புனித தமசீன் அருளப்பரே அத்தாட்சி. அவர் சொல்லுகிறதாவது: "புனித வனத்துச் சின்னப்பரும் புனித வனத்து அந்தோனியாரும் தெபெய்தா எனும் வனாந்தரத்தில் தம் சீடர்களோடு செபதபஞ்செய்து, உத்தம வாழ்வு வாழ்ந்திருக்கையில், இண்டஸ் நதியின் பக்கத்திலுள்ள வனாந்தரத்தில் இந்திய தபோதனர்கள் பெரும்பான்மையோர் ஜீவித்தனர்'' என்பதே. இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் புனித பாலாம் ஒருவர் என்பதும் அவரது கொள்கை. சிந்துவில் மனந்திரும்பின கிறிஸ்தவ சந்ததியின் கதி என்ன ஆயிற்றென்று நாம் அறிய விரும்பலாம். ஆனால், அதைப்பற்றி யாதொன்றும் உறுதியாகத் தெரியவில்லை. நெஸ்தோரியஸ் பிரிவினைக்காரர்கள் அங்கு வந்துற்றகாலை, குருக்களில்லாக் குறையால், அவர்களைப் பின்பற்றியிருக்கலாம். அப்படியாயின் அச்சபையினேரில் பெரும் பாலர் முஸ்லீம்களாகவும் அல்லது இந்துக்களாகவும் திரும்பினரென்று சொல்லக்

கூடும். எது எப்படியாயினும் தோமையார் சிந்துவுக்கு வந்து சுவிசேஷத்தைப் போதித்து, பெருந் தொகையினேரை மனந்திரும்பியது மறுக்கப்படாது நிற்கின்றது.

சிந்துவிலிருந்து அப்போஸ்தலர் சென்ற வேறு இடங்களுக்கு நாமும் போவோமாக.

# 6 ஆம் அதிகாரம்

## மலையாளநாடு

**புனித** தோமையார் மலையாளநாடு வந்து அங்கு வெகுவாக உழைத்ததைப்பற்றி பாரம்பரை மிக்க உறுதியாகக் கூறுகின்றது. அவ்விடம் தோமையார்பேரால் பண்டையக் காலத்தே கட்டப்பட்டுள்ள சில கோவில்களே அதற்கு அத்தாட்சி. அக்காலமுதல் இக்காலம் வரையில் அத்தேசத்தில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் மட்டுமன்று, இதர மதத்தினராகிய இந்துக்கள், முஸ்லீம்கள், யூதர் ஆகியவர்கள் முதலாய் தோமையார் அங்கு வந்ததை நம்பி, அவர் பேர்கொண்ட ஆலயங்களைத் தரிசித்துக் காணிக்கைகள் செலுத்துவது கவனிக்கற்பாலது. ஆண்டுதோறும் சூலை மாதம் 3ஆம்நாள் அவர்கள் கொண்டாடும் புனித தோமையார் திருநாள் அவர்களுக்கு ஒரு முக்கியமான நாள். ஒவ்வொரு குடும்பத்திலும் தோமையார் பெயர்கொண்டவன் ஒருவனுகிலும் இருப்பான். மற்ற எவ்விடத்தையும் விட தோமையார் பெயரைப் பெரிதும் பாராட்டும் நாடு மலையாள நாடே. அது தோமையார் நாடு என்ருல் தகும். அவர்களும் தொன்றுதொட்டு 'தோமையார் கிறிஸ்தவர்கள்' என்றே வழங்கப்பட்டு வருகின்றனர். அவ்விடத்தில் இன்னும் தோமையார் கிறிஸ்தவர்கள் இருப்பது வெளிப்படை. அவர்களின் மொத்தத் தொகை இன்று இருபது இலட்சத்திற்கு மேலாகிறது. பதினறு இந்திய மறை ஆயர்களும் பன்னூறு உள்நாட்டுக் குருக்களும் அக்கிறிஸ்தவர்களைக் கண்காணித்து வருகின்றனர்.

நாராங்கோட்டையிலிருந்து கடல் மார்க்கமாக முதன் முதல் கரங்கனூர் வந்தார் தோமையார். அவரது அப்போஸ்தலிக்கு வேலையை ஆரம்பிக்க அதுவே ஏற்ற இடமாயிற்று. ஏனெனில், அக்காலம் கரங்கனூரில், சிரியாவிலிருந்து வந்துள்ள வணிகர்களும், யூதர்களும் குடியேறி

யிருந்தனர். அவர்கள் மத்தியில் தமது வேத அலுவலைத் தொடங்கினர். அந்த இடத்திலேயே தங்கிவிடாது மலையாளப் பகுதியின் பல பாகங்களுக்கும்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எண்ணற்ற பேர்களை மனந்திருப்பி, அவர்களுக்காகச் சில ஆலயங்களையும், வேறு சில இடங்களில் பெரிய கற்சிலுவைகளையும் அமைத்தார். ஆலயங்களில் முக்கியமானவை ஏழு. இவற்றைப்பற்றி அறியாதவர்கள் அந்தக் கிறிஸ்துவர்களுக்குள் ஒருவராகிலும் கிடையாது என்பது மிகையாகாது. அந்நாட்டில் அப்போஸ்தலர் எத்தனை ஆண்டு உழைத்தார் என்று நிச்சயமாய்க் கூறத் தகுந்த ஆதாரம் இல்லாதே போயினும், ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் அங்கிருந்தார் என்பது பாரம்பரை. அவ்விடமிருந்து திருமயிலை போனபின்புங்கூட இரண்டுமுறை அங்கு சென்ருராம். 1498ஆம் ஆண்டு போர்த்துக்கீசியர் மலையாள தேசம் வந்தடைந்தபோது, அங்குப் பெருந்திரளான கிறிஸ்துவ சபையோரைக் கண்டது வரலாறு. அதைப்பற்றி வரலாற்று ஆசிரியராகிய பாரோஸ் 1552ஆம் ஆண்டு பின்வருமாறு எழுதியிருக்கின்ருர். "கரங்கனூரில் போர்த்துக்கீசியர் வந்திறங்கினபோது பெருந்தொகையான கிறிஸ்துவர்கள் அங்கிருந்தனர். அவர்கள் 'தோமையார் கிறிஸ்துவர்கள்' என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். ஏனெனில், அவர்கள் அப்போஸ்தலராகிய தோமையாரால் மனந்திருப்பப்பட்டவர்களின் சந்ததியார். அவர் பலரை சத்தியமறையில் சேர்த்து, அவர்களுக்காகச் சில கோவில்களையும் கட்டியிருந்தார்" என்பதே. மயிலாப்பூர் பக்கத்திலேயே தோமையார் மரித்ததாகக் கிறிஸ்துவர்கள் நம்பிவந்தபோதிலும், போர்த்துக்கீசியர் வந்தபோது அங்குக் கிறிஸ்துவர்கள் காணப்படவில்லை. ஆனல் மலையாள தேசத்துள்ள கரங்கனூர், தீயாம்பூரிலே கிறிஸ்துவர்களில் பெரும்பாலர் இருந்தார்கள். மயிலையில் ஏற்பட்ட போரினல் அவ்வூர் அடியோடு அழிந்துபோயிற்று. இதனிமித்தம் மக்கள் பலதிசையிலும் சிதறிப்போயினர். கிறிஸ்தவர்களோ தம் சகோதரர்களாகிய கிறிஸ்துவர்களிருந்த மலையாளப்பகுதிக்குப் போனர்கள். இதுவே,

அங்கிருந்த பெருந்தொகையான கிறிஸ்துவர்களுக்குக் காரணமென்பது பொதுவானக் கருத்து

நிற்க, கரங்கனூரில் தோமையாரின் சீடர்கள் இருவர் கட்டிய கோவில் ஒன்று இருக்கின்றது. அக் கோவிலானது மிகுந்த பக்தியோடு பாதுகாக்கபபட்டு வருகின்றது. தோமையார் சீடர்களின் சடலங்கள் கரங்கனூரிலேயே அடக்கம் செய்யப்பட்டன. போர்த்துக்கீசியர் கோட்டை கட்டுகையில் அந்த இடத்தில் சிறு கோபுரங்கள் அமைத்தனராம்.

பிற்காலத்தில் கத்தோலிக்குக் குருக்கள் அரிதாயினர். ஆயினும் அர்மெனியாவினின்று மற்றக் குருக்கள் வந்தமையால் கிறிஸ்துவை மறக்கவில்லை. போர்த்துக்கீசியர் வருகைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் கத்தோலிக்கரல்லாத தலைவர்கள் நால்வர் வந்து, மலையாள தேசத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொருவர் ஆண்டுவர ஏற்பாடு செய்கையில் இருவர் இறந்தனர். மற்ற இருவரில் ஒருவர் கொல்லத்திலும், மற்றவர் கரங்கனூரிலும் ஆட்சிபுரிந்தனர். கரங்கனூரில் பதவி ஏற்றவர், அவருக்குமுன் இருந்த அதிகாரிகளைப்போல் கிறிஸ்துவர்களிடமிருந்து பணம்பறிக்க விரும்பவில்லை, வேறு வழிகளில் அவர்களைத் துன்புறுத்தவுமில்லை. கத்தோலிக்கு வேதத்தில் பற்றுதலும், குருக்களிடம் அன்பும் உள்ளவராய் இருந்தார். இதனல் போர்த்துக்கீசிய அதிகாரியாகிய நூனோதா கூஞ்ஞா அவருக்கு உதவியாயிருந்தார். இந்தத் தலைவர் பெயர் அபூனு யாக்கோப். இவரையே பிற்காலத்தில் புனித சவேரியார் சந்தித்தார். அதன் பயனாக அவர் தமது பழைய கோட்பாடுகளைத் தள்ளிவிட்டு, நல்ல மேய்ப்பனின் மந்தையில் வந்து அடைக்கலம் புகுந்தார். அச்சமயத்தில் அங்கு வாழ்ந்த தோமையார் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் சிதறிப் போயிருந்தனர். அபூனு யாக்கோப், கத்தோலிக்குக் குருக்களாகிய பிரான்சிஸ்கு சபையாருடன் சேர்ந்து, அவர்களை மெய்ம்மறைக்குக் கொண்டுவரப் பெரிதும் உழைத்தார்

அவருக்கு வயது முதிர்ந்தபோது தமது அயரா உழைப்பினால் பலமும் குன்றி, ஒன்றுஞ்செய்ய இயலாதவராய்க் கோவை நகர் போய்ச் சேர்ந்தார். போர்த்துக்கல் அரசனாகிய மூன்றுவது யுவானுக்கு புனித சவேரியார் எழுதிய நிருபத்தில் இவரைப்பற்றி உரைப்பதாவது: "அவரது பரிசுத்த வாழ்வாலும் புண்ணியங்களாலும் மெய்யாகவே கடவுளை முற்றும் நேசிப்பவர் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்" என்பதே.

புனித சவேரியார் கரங்கனூருக்குப் போனபோது அதைச் சுற்றிலும் அறுபது கத்தோலிக்குக் கிராமங்களும், பட்டணத்தில் ஒரு குருமடமும் இருந்தன என்று வரலாறு கூறுகிறது.

புனித தோமையார் மலையாள நாட்டில் செய்த செயல்களைக் கவனிப்போம்.

# 7 ஆம் அதிகாரம்

## மலையாளத்தில் தோமையார் வேலை

*மலையாள* நாட்டில் முக்கிய பட்டணம் கரங்கனூர். ரோமையர், சிரியர், எகிப்தியர் முதலியோர் வாணிபத்திற்காக அங்கு வந்துபோவது வழக்கம். அவ்வழியை ஒட்டியே தோமையாரும், இந்திரபட்டணத்து முற்கால அரசனாகிய சாந்தப்பரும், ஹாபானும் இவ்வூர் வந்து அடைந்தனர். ஆனால் ஹாபான் வாணிபத்திற்காக வந்தமையால் தனது மரக்கலத்தில் சரக்குகள் ஏற்றிக்கொண்டு திரும்பிவிட்டான். மற்ற இருவரும் ஆன்ம வியாபாரம் கொள்ள வந்தமையால் அவ்வலுவல் முடியுமட்டும் தங்கினார்கள். அவ்வூரில் அக்காலத்தில் யூதரும் இருந்தனர். தோமையார் யூதகுலத்தார் ஆகையால் அவர்கள் வசிக்குமிடத்திற்குப் போனார். அங்கு, யூதர்களுக்குத் தலைமையாயிருந்த 'ராபி பாவுல்' அவருக்குத் தங்க இடம் அளித்தான். இச்செய்தியை அறிந்த மற்ற யூதர்களும், வந்த விருந்தினர் இருவரையும் மரியாதையாகப் பாராட்டி ஆதரித்தனர். தங்களின் விருந்தினர், நசரேத் ஊரராகிய இயேசுவின் சீடர்கள் என்று அறிந்ததும் அவர் காட்டிய மதிப்பு அதிகரித்தது. ஏனெனில், இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய அப்போஸ்தலராகிய தோமையார் சிந்துதேசத்தில் செய்துள்ள அற்புதங்களையும்பற்றி முன்னமே அவர்கள் அறிந்துள்ளனர். 'சாபத்' என்னும் ஓய்வுநாளுக்கு அடுத்ததினம் தோமையார் 'ராபி பாவு'லோடு 'சினகாக்' எனும் யூதர் செபக்கூடத்துக்குப் போனார். அங்குள்ள வேதப்புத்தகங்களைக் கையிலெடுத்து இறைவாக்கினர்களின் ஆகமத்தைத் திறந்து, அங்குள்ள வசனங்களால் ஆதாம், அபிரகாம், தாவீது ஆகிய முன்னோர்கள் எதிர்பார்த்திருந்த மெய்யான "மெசியா" இயேசுவே என்று எண்பித்தார். அவர்களோ மௌனத்துடன் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தனர். அன்றுமுதல் ஒவ்வொரு 'சாபத்' நாளிலும் தோமையார் யூதர் செபக்கூடம் போய்,

வேத வாக்கியங்களை அவர்களுக்கு விளக்கினர். அதன் பயனாகப் பலர் அவர் போதிப்பதை நம்பினார்கள். அவர்களுள் முதன்மையானவர் 'ராபி பாவுல்' எனும் யூதகுருவே. இயேசுபதம் வந்தடைய விரும்பிய அவருக்கும், அவரைப் பின்பற்றிய வேறு பலருக்கும் அப்போஸ்தலர் ஞானஸ்நானங் கொடுத்தார். இந் நன்மையைக் கைநெகிழவிட்ட இதர யூதர்கள், கிறிஸ்தவர்களானோரை 'நசரேயர்' என்று ஏளனஞ் செய்தார்கள்.

## புனித தோமையாரின் முதல் சீடன்

பட்டணத்து வீதியொன்றின் வழியாகச் சென்றுகொண்டிருக்கையில் தோமையார் பிராமண வாலிபன் ஒருவனைச் சந்தித்தார். அவன் கபடற்றவனாகவும், திறந்தமனதும், விரிந்த புத்தியும் உடையவனாகவும் காணப்பட்டான். அவன் பெயர் மலையாக்கல் அப்போஸ்தலர் அவனை அணுகினர்; இருவரும் உரையாடிக்கொண்டே வழி நடந்தனர்.

தோமையார் :- "என் மகனே! நீ எங்கிருந்து வருகின்றாய்?"

வாலிபன் :- என் காலைக் கடனை முடித்துக்கொண்டு, தேவர்களைத் துதிக்கக் கோவில் சென்று திரும்புகிறேன்.

தோமை :- அத்தேவர்கள் உன் செபத்தைக் கேட்கின்றார்கள் என்று நம்புகிறாயா ?

வாலி :- அவர்கள் எப்படிக் கேட்கக்கூடும்!

தோமை :- அப்படியானால் ஏன் அவற்றைக் கும்பிடுகிறாய் ?

வாலி: என் தகப்பனார் அங்கு போகிறார். என் பாட்டனாரும் போய் வந்துகொண்டிருந்தார். அதுவே நாட்டு வழக்கம். அப்படியிருக்க நான் வேறு விதமாக நடக்க முடியுமா ?

இதைக் கேட்ட தோமையார் அவன்மீது இரக்கம் கொண்டார்; உண்மையான கடவுளைப்பற்றி நெடுநேரம் அவனுக்கு உபதேசித்தார்; அவன் நெற்றியில் சிலுவை

அடையாளம் வரைந்து, "ஆண்டவரின் அருள் உனக்கு என்றும் இருக்கக்கடவதாக!" என்று அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

அன்று முதல் அவன் அடிக்கடி அப்போஸ்தலரிடம் வந்து போவது வழக்கம். வந்தால் அவரது கால்மாட்டில் உட்கார்த்து அவர் போதனைகளைச் சலிப்பின்றி நெடுநேரம் கேட்பான். இயேசுநாதரையும், அவரது திருத்தாயாரையும் பற்றிப் பேசுகையில் அதிக ஆவலோடு கேட்டுக் கருத்துக்களைப் புரிந்துகொள்வான். பலநாள் இவ்வாறு போதனைகள் கேட்டபின் தோமையார் அவனுக்குத் தோமா என்னும் பெயர் சூட்டி ஞானஸ்நானம் கொடுத்தார். இச்செய்தியைக் கேட்ட அவன் தந்தை, அவன்மீது அடங்காக் கோபம் கொண்டான்; அவனை வெறுத்தான்; கடைசியாக வீட்டினின்று அவனை விரட்டிவிட்டான். இவ்வாறு அனாதையாக நின்ற வாலிபனைத் தோமையார் அன்போடு அணைத்து "மகனே! இனிமேல் இயேசுவே உன் தந்தை. என்னிடமே இருப்பாயாக" என்று தைரியம் கூறினார். அவனும் மகிழ்ச்சியுடன் அப்போஸ்தலருக்கு ஊழியஞ் செய்யத் தீர்மானித்தான். ஆகவே, அந்நாட்டில் அவனே தோமையாரின் முதல் சீடனானான். பிற்காலத்தில் குருத்துவ நிலைக்கு உயர்த்தப்பெற்று, பரிசுத்த சுவிசேஷத்தைத் தம் இனத்தாருக்குப் போதித்தான். அதனால் அவரை "தோமா ராபன்" (போதகர்) என்று அழைத்தார்கள்.

## தீமைக்கு நன்மை

அரசன் கேரளப்பெருமாள் சிலைகளைத் தொழுவதில் பக்தி உள்ளவன். அவன் குடிமக்களுள் பெரும்பாலோர் அப்போஸ்தலர் போதிக்கும் அரிய வேதத்தில் சேர விரும்பினாலும், அரசனுக்குப் பயந்து பின்வாங்கினார்கள். இது தோமையாருக்குக் கவலையை உண்டாக்கியது. இது ஒரு பக்கமிருக்க, மறுபக்கத்தில் மலையாக்கல் என்னும் இளைஞன் கிறிஸ்தவன் ஆனான் என்ற செய்தியைக் கேட்ட பிராமணர்கள் அவனைப் பல விதத்தில் துன்புறுத்த ஆரம்

பித்தார்கள். ஒரு நாள் தோமையார் கடவுளைப் பிராத்தித் திருக்கையில் அவ் வழியே சென்ற பிராமணன் ஒருவன் அவரை ஓங்கி அடித்தான். தோமையார் அவனை ஏறெடுத்துப் பார்த்து, "மனிதா நீ என்ன செய்யத் துணிந்தாய்? என்னை அடித்த உனது கையை சீக்கிரம் இழந்து போவாய்" என்று பரிதாபத்துடன் பகன்றார். பின்னர், "சர்வ வல்லபக் கர்த்தாவே! அவனது குற்றத்தைப் பொறுத்து, அவன் ஆன்மாவை இரட்சியும்" என்று செபித்தார்.

சில நாள்களுக்குப்பின், பைத்தியங் கொண்ட ஒரு நாய் அப்பிராமணனை எதிர்த்து அப்போஸ்தலரை அடித்த அவனது கையைக் கடித்துக் கிழித்துக் குதறிவிட்டது. இதைக்கேட்ட தோமையார் இரக்கத்துடன் அவனது இல்லத்திற்கு விரைந்து சென்றார். நாயால் கடியுண்ட அம் மனிதன் கடும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் கையானது வெட்டுண்டு கிடந்தது. அப்போஸ்தலர், அன்போடு அவனை நோக்கி, "நீ இயேசுவை நம்பி அவருடைய உதவியைக் கேட்பாயாகில் உன் கை திரும்பவும் உனக்குக் கொடுக்கப்படும்" என்றார் "மெய்யாகவே உம் கடவுளை நான் நம்புகிறேன். அவரே வாழ்வளிக்கும் கடவுள்; சர்வவல்லபமும், நித்தியமும் அவருடையதே. என் குற்றத்தை மன்னிக்க எனக்காக வேண்டிக்கொள்ளும்" என்று கெஞ்சினன். உடனே அப்போஸ்தலர், வெட்டுண்டு போன அவன் கையை எடுத்து, அதனுடைய இடத்தில் வைத்து "என் ஆண்டவராகிய இயேசுவே! இம் மக்கள் உம்மையே தங்கள் கடவுளாகவும், ஆண்டவராகவும் நம்பும் படி உமது வல்லமையைக் காட்டியருளும்" என்று உச்சரித்துக்கொண்டே அந்தக் கையின்மேல் சிலுவை அடையாளம் இட்டு மந்திரித்தார். உடனே கை திரும்பவும் புயத்தோடு சேர்ந்து கொண்டது. காயம் முற்றிலும் மாறி விட்டது தழும்பு முதலாய் இல்லாது சரிவரக் குணமாயிற்று. இந்த அற்புதம் ஊரெங்கும் பரவியது. அரசன் கேரளப்பெருமாள் இதைக்கேட்டதும் • தோமையாரைத் தன்னிடம் வரவழைத்து, அரண்மனையில் இருக்கச்

செய்தான். அவர் போதிக்கும் அரிய கோட்பாடுகளேயும், அவரது புண்ணிய வாழ்வையும் நன்கு உணர்ந்த அரசன்; அவர்மீது அன்பும், இரக்கமும் கொண்டு, சுவிசேஷத்தைத் தனது நாட்டில் எப்பாகத்திலும் பிரசங்கிக்க அனுமதித்தான். கோவில்கள் கட்டப் பொருளும் உதவியும் அளித்தான்.

அரசன் அளித்த பொருள் உதவியால், பிராமணர்கள் குடியிருந்த முக்கிய ஊர்களாகிய கரங்கனூர், கொல்லம், க்ஷாயல், நீராணம், கொக்கமங்கலம், பாரூர், பாலேயூர் என்னும் இடங்களில் தோமையார் கோவில்கள் கட்டினூர்.

அப்போஸ்தலரிடம் பலர் நாள் தவருது வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் பொறுமையோடும் அன்போடும் விவேகத்தோடும் பரிசுத்த் வேதத்தைப் பிரியமாய் ஊட்டி, அவர்களே உண்மையான கடவுள் வழியில் சேர்த்தார். நாள்தோறும் பகல் நேரத்தைக் கிறிஸ்தவர்களுக்கு வேதம் போதிப்பதிலும், இரவில் ஒரு பாகத்தைச் செபத்தியானம் செய்வதிலும் செலவழித்து வந்தார். மக்கள் அவரை மிகவும் நேசித்து அவரிடம் முழு நம்பிக்கை வைத்தார்கள். அவரிடம் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார்கள் என்ருல் அவரை ‘முத்தப்பன்’ அதாவது “பாட்டனூர்” என்று அழைத்து வந்தார்கள்.

## இரு அரசர்கள் மனம்திரும்புதல்

கரங்கனூர் அரசனுகிய கேரளப்பெருமாள் தோமையார் மீது மிக்க அன்பு கொண்டிருந்ததோடு, அவர் போதனேகளே அடிக்கடி கேட்டுத் திருப்தியடைந்திருந்தான். சன்னஞ் சன்னமாக வேத ஒளி அவன் இருதயத்தில் வீசவே, இயேசுவை முற்றும் விசுவசிக்கத் தொடங்கினுன். சரியான கிறிஸ்தவன் ஆவதற்கு ஞானஸ்நானம் பெறவேண்டி யிருந்ததால் அதைத் தனக்கு அளிக்கும்படி அப்போஸ் தலரைக் கேட்டேன். அவனது நல்ல உள்ளத்தையும் உறுதியான விசுவாசத்தையும் கண்ட தோமையார் அவனுக்கும், அவனது குடும்பத்தோர் அனேவருக்கும் ஞான

தீட்சை கொடுத்தார். அரசன் அந்துரு (பிலவேந்திரர்) என்றும், அவன் மருமகன் பேதுரு (இராயப்பர்) என்றும் அழைக்கப்பட்டனர். அரசன் மனந்திரும்பிய செய்தியறிந்த பலர் அவர் வழி நடக்கத் துணிந்தனர். ஆகவே, நானூறு பேர்களை அப்போஸ்தலர் நல்ல ஆயன் மந்தையில் சேர்த்தார். அவர்களுள் முப்பத்திரண்டு குடும்பங்கள் நம்பூரி பிராமணர் குலத்தைச் சேர்ந்தவர்கள். அது முதல் கொண்டு கரங்கனூர் ஒரு கிறிஸ்துவப் பட்டணம் ஆயிற்று. அதற்கு 'மகாதேவ பட்டணம்' என்னும் பெயர் சூட்டினார்கள்.

அப்போஸ்தலர் நாளுக்கு நாள் ஆத்தும இரட்சணிய அலுவலில் வெற்றி பெறுவதைக் கண்ட நரகக் கூளியானது மனஞ் சகியாது, அவரைத் தொலைத்து விட வழிதேடியது. ஒரு நாள் அவர் தன்னந் தனிமையாய் அடுத்த கிராமத்திற்குப் பிரயாணம் செய்கையில், கோபவெறி கொண்ட பொறாமைக்காரர்கள் அவரை வழிமறித்துக் கல்லால் அடித்துக் கடுங்காயப் படுத்தினர். அதனால் அவர் மூர்ச்சையாயினார். இதைக்கண்ட எதிரி அவர் மரித்துவிட்டார் என்று எண்ணி, வழியிலேயே அவரைக் கிடத்திவிட்டு ஓடினர். அவ்வழியே வந்த கிறிஸ்தவன் ஒருவன் அப்போஸ்தலரின் நிலையைக் கண்டு பதை பதைத்தான்; தன் இல்லத்துக்குத் தூக்கிச் சென்று அவருக்குப் பரிவுடன் சிகிச்சை அளித்தான். அவரும் குணமடைந்தார்.

பகைவர் அவரைத் தொலைக்க மாயவலைகள் வீசிக் கொண்டிருந்த போதிலும், அவரது புனித வாழ்வும் புதுமைகளும், அவ்வூரில் மட்டுமல்ல, இலங்கைத் தீவிற்கும் பறந்து சென்றன. யாழ்ப்பாணத்து அரசனாகிய பெரியபெருமாள் அப்போஸ்தலரைக் காண இந்தியாவிற்குப் பயணமானார். மலையாளத்திற்கு வந்து தோமையாரைக் கொல்லத்தில் சந்தித்தார். அப்போஸ்தலரைக் கண்டதும், "உலக இரட்சகரின் அப்போஸ்தலரே! கீழ்த்திசையில் அற்புத விண்மீனைக் கண்டு அதைப் பின்பற்றிப் பெத்லேகேமில் திருக்குழந்தையாகிய மெசியாவைத் தரிசித்துவந்த மூன்று ஞானிகளுள் ஒருவன் யான். அக் குழந்தையைப் பார்த்தது

முதல் என் இதயம் அவரிடமே செல்கின்றது ஆதலால் அவரின் வரலாற்றைக் கூறி என்னையும் மெய்ம்மறையிற் சேர்த்துக்கொள்ள மன்றுடுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டார் தோமையார் அவர் விண்ணப்பத்துக்கு இசைந்து திவ்ய இரட்சகரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் போதனைகளையும் அவருக்கு நன்கு உணர்த்திய பின் அவருக்குக் கஸ்பார் எனும் பெயரிட்டு, ஞானஸ்நானங் கொடுத்து அனுப்பினர் அவரோ, தமது நாடு சென்ற பிறகு, அரசியல் தொல்லைகளைப் பொருள் படுத்தாது சுவிசேஷத்தை மக்களுக்குப் போதித்துப் பல்லோரை மனந் திருப்பினர். கடைசியாக மெய்வேதத்திற்காக இரத்தமுஞ் சிந்தினர்.

## பாலையூர்

கடவுளுடைய அரசை எங்கும் நிலை நாட்டுவதில் இடைவிடாது கண்ணுங் கருத்துமாயிருந்த தோமையார் புது ஊர் ஒன்றிற்குப் புறப்பட்டார் அதுதான் பாலையூர். அவ்வூரில் சிறந்த உயர்ந்த கோபுரங்கள் பல இருந்தன ஊருக்குள் நுழையும் முன் பொன்முலாம் பூசப்பட்டு, மாலைச் சூரியனில் ஒளி வீசிக்கொண்டிருந்த கோபுரச் சிகரங்கள் அவர் கண்களுக்குப் புலப்பட்டன. மெய்யங் கடவுளுக்குக் கோவில்கள் இவ்வளவு அழகாக அமைக்கப்பட வில்லையே என்று கவலையுற்ற இதயத்தோடு ஊரினுள் சென்றார். தென்பாகத்தில் யூதரும் அவர்கள் செபக்கூடமும், வட பாகத்தில் செட்டிமாரும் அவர்கள் கோவிலும், வேறொரு பகுதியில் சூத்திரரும் இருந்தார்கள். தோமையார் முதன் முதல் யூதர் மத்தியில் தமது வேலையை ஆரம்பித்தார். ஓய்வு நாள்களில் யூதர் கூடியபோது, செபக்கூடத்திற்குப் போய் வேதவாக்கியங்களைச் சரியான முறையில் விளக்கம் செய்வது அவர் வழக்கமாய் இருந்தது. இதைக் கேட்டு நன்கு அறிந்த பலர் மனந்திரும்பினர்கள்.

சூலை மாதத்தின் அமாவாசை நாளன்று பிராமணர் வசிக்கும் அக்ரஹாரத்திற்குள் புகுந்தார். போகும் வழியில்

ஒரு குளம் இருந்தது. அதில் சில பிராமணர்களும், பிராமணர் அல்லாதாரும் குளித்து முழுகிக் கொண்டிருந்தனர். அச் சமயம் சிலர் கையில் தண்ணீரை யெடுத்துத் தலைக்குமேல் ஆகாயத்தில் எறிந்தனர். இதைக் கண்ட தோமையார், "ஏன் அப்படித் தண்ணீரை ஆகாயத்தில் எறிகின்றீர்கள்?" என்று ஒரு பிராமணனைக் கேட்க, அவருக்கும் பிராமணனுக்கும் பின்வருமாறு உரையாடல் தொடங்கிற்று :

பிராமணன் : தேவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

தோமை அப்படியானால் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாததுபோல் தோன்றுகிறதே !

பிராமணன் : அது உமக்கு எப்படித் தெரியும்?

தோமை : நீங்கள் சமர்ப்பிக்கின்ற தண்ணீர்த் துளிகள் திரும்பவும் கீழே விழுந்து விடுகின்றனவே. மேலே செல்ல வில்லையே !

பிராமணன் : தண்ணீரின் இயற்கையே அப்படி; மேலே போட்டால் கீழேதான் விழும்.

தோமை ; அப்படியா! சரி. என்கடவுள் மெய்யங் கடவுள்;

"நீரையும் நிலத்தையும், மற்றும் எல்லாவற்றையும் படைத்தவர் அவர் ஒருவரே. அவருக்கு எல்லாம் கீழ்ப் படியும் இந் நீர்த்துளிகள் கீழ்ப்படிவதையும் நீங்களே பாருங்கள்" என்று சொல்லிக் குளத்தில் இறங்கிக் கைகளில் தண்ணீரை வாரி, ஆகாயத்தில் எறிந்தார்.

அப்பொழுது ஒரு துளியேனும் கீழே வீழாமல் ஆகாயத்திலேயே அசையாது வைரக்கற்கள்போல பிரகாசித்துக் கொண்டு நின்றன. சற்றுப் பின்னர் அவை கமகமவென மணங்கமழும் மலர்களாக மாறித் தோமையார் பாதத்தில் வந்து விழுந்தன. அதைக்கண்ட மக்கள் வியப்புற்றனர்.

அவர்களில் பெரும்பாலார் குளத்தினின்று வெளியேறித் தத்தம் ஆடைகளே அணிந்துகொண்டு, தோமையாரைப் பின் பற்றினர். பலர் அவரிடமிருந்து சத்தியவேதக் கொள்கைகளேயும் கோட்பாடுகளேயும் மந்திரம் ஞானுபதேசம் முதலியவற்றையும் ஐயந்திரிபறக் கற்றபின் கிறிஸ்துவர்களாயினர்.

தோமையார் இன்னும் சிலகாலம் அங்கிருந்து, தமது போதகத்தாலும், புண்ணிய வாழ்க்கையாலும் பலரை இயேசுவிடம் கொண்டுவந்தார். புதிய கிறிஸ்தவர்களாயினும், அவர்கள் வேதத்தில் உறுதிகொண்டு தங்கள் பழைய ஆலயங்களே உடைத்துத் தகர்த்துவிட்டனர். அவைகளில் பிரமாண்டமாக நின்ற ஒன்றைமாத்திரம் அழிக்காமல் அதன் கோபுரத்தின் சிகரத்தில் திருச்சிலுவையை நாட்டினர்.

கடவுளின் அருளே ஏற்றுக்கொள்ளாதவர்கள் கிறிஸ்துவர்களேத் தொலேக்க முடியாததால், தாங்களே ஊரைவிட்டு வெளியேறத் தலேப்பட்டதோடு, அந்த ஊரில் இனிமேல் தண்ணீர்க்கூட குடிப்பதில்லே என்று வைராக்கியம் கொண்டார்கள். அவ்வூரையும் பழித்துப் பாலேயூர் என்பதை மாற்றிச் 'சவககாடு' என்று ஏளனமாய் அழைக்கத் தலேப்பட்டார்கள். பிராமணர், இன்று முதலாய் அவ்வூருக்குப் போனுல் ஒன்றும் சாப்பிடாதிருப்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

அப்போஸ்தலரோ, தமக்குத் துவக்கத்தில் சீடர்களான சங்காபுரி, பாக்காத்தோ மட்டம் என்போருக்குக் குருப்பட்டம் அளித்து, அங்கேயே அவர்கள் சர்வேஸ்வரனுக்காக உழைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் பாரூருக்குப் பயணமாயினர்.

### பாரூரிலும் வேறு சில ஊர்களிலும்

பாரூரில் இந்துக்களுக்கு ஒரு பெரிய திருநாள். வீதிகளெல்லாம் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆண் பெண் சிறு

பிள்ளைகள் அடங்கலும், நல்லுடைகள் உடுத்தி மகிழ்ச்சியா யிருந்தார்கள். தேர் ஊர்வலம் வருமநேரமாயிற்று. பெருந் திரள் கோவிலண்டை கூடியது. யானைமேல் அம்பாரி வைத்து, அதில் சிலையொன்று நாட்டப்பட்டது. பின் மேள தாளங்களுடன் ஊர்வலம் தொடங்கியது. அது செல்லும் வீதிகளில் எல்லாம் மக்கள் தத்தம் இல்லங்களி னின்று தீபதூபங் காட்டி, மலர்கள் சாற்றித் தங்கள் தேவதையைப் போற்றி ஆராதித்தார்கள். பூசாரிகள் மந்திரம் ஓதி காணிக்கைகள் பெற்று, எல்லோருக்கும் பிரசாதம் அளித்துக்கொண்டு சென்றூர்கள்.

இந்நேரத்தில்தான் தோமையார் அவ்வூருக்கு வந்து சேர்ந்தார். உடனே அவரும் கும்பலில் கூடி அவர்களுக்கு ஞான ஒளி பிரகாசிக்கும்படி பரமபிதாவைப் பிரார்த்தித்துக் கொண்டு போனூர். அங்கு நின்றவர்களில் சிலர் தோமை யாரை இன்னூரெனக் கண்டுகொண்டு, "இதோ இருக்கிறன் மந்திரவாதி! பாலையூரில் அநேகரைக் கெடுத்துவிட்டு இப் போது இங்கு வந்திருக்கிறன். விடாதேயுங்கள்" என்று கூவினூர்கள். மக்கள் இதைக்கேட்டுச் சினந்து, அவர்மேல் கல்லெறிந்தும், தடியோங்கியும் அவரை அவ்விடம் விட்டுத் துரத்தத் தலைப்பட்டார்கள். அச்சமயம் மேகம் இருண்டது, வானத்தில் இடி முழங்கியது. மின்னல் பளீர் பளீர் என்று ஒளிர்ந்து வீசியது. ஒரு பெரிய இடி அம்பாரிமேல் விழ யானை அங்ஙனமே பட்டு மாண்டது. அம்பாரி தட்டுத் தடு மாறி வீழ்ந்தது. சிலையோ தவிடுபொடியாகிவிட்டது. பக்கத் திலிருந்த மக்கள் நிலை தவறிக் கீழே விழுந்து மரித்தார்கள். தூர நின்றவர்கள் திகைத்துத் தள்ளாடி, அச்சம் மேலிட்டுப் பேச இயலாதவர்களாய் மலைத்து நின்றுவிட்டார்கள்.

தோமையார் அவர்களை நோக்கி "மக்களே! நீங்கள் வணங்கும் தேவர்களை விட்டுவிடுங்கள். தம்முடைய வல்ல மையை இப்போது உங்கள்முன் காட்டியிருக்கும் ஒரே கடவுளை ஆராதியுங்கள்" என்று புத்திமதி உரைத்தார்.

அங்கு நின்ற சிலர் அப்போஸ்தலரை நோக்கி, ''தோமையாரே! முத்தப்பனே! எங்களை இரட்சிக்கும்படி உம் தேவனை மன்றாடும்'' என்று இரந்து கேட்டுக்கொண்டார்கள். ''உங்களுக்கு நித்திய வாழ்வை அளிக்கும் இறைவன் உங்களது மரணத்தை விரும்பவில்லை என்பதை நிச்சயமாக நம்புங்கள்'' என்று அவர் சொல்லிவிட்டுக் கொஞ்சந் தண்ணீர் கொண்டுவரும்படி கேட்டார். தண்ணீர் கொண்டு வரப்பட்டதும் அதை ஆசீர்வதித்துத் தரையில் கிடந்த பிணங்களின் மீது தெளித்து, "வாழ்வுக்கும் சாவுக்கும் காரண கர்த்தாவும், இகத்தையும் பரத்தையும் படைத்தவரும் ஒரே கடவுள்தானென்று சகலருக்கும் எண்பிக்கும் வண்ணம் மாண்டுகிடக்கும் மானிடரே! பிதா சுதன் பரிசுத்த ஆவியின், பெயரால் உயிர்த்து எழுவீர்களாக'' என்று சொல்லி, சிலுவை அடையாளமிட்டுப் பிணங்களை மந்திரித்தார். உடனே அங்குக் குழுமி நின்றவர் அனைவரும் அதிசயப்பட, மரித்தோர் எல்லாரும் தூக்கம் தெளிந்து எழுவார்போல் எழுந்திருந்தனர் ஆதலால் அப்போஸ்தலரை அவர்கள் பின்பற்றினர். அங்கு உடைந்து தகர்ந்து கிடந்த சிலைகளை ஏறெடுத்துப் பார்ப்பவர் இல்லாமல் போயிற்று. தன்னைப் பின்தொடர்ந்து வந்த மக்களை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று, சத்திய சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதித்தார். அவர்கள் அவரது உபதேசத்தைச் சரியாய்க் கேட்டறிந்தபின் ஞானஸ்நானம் பெற்றார்கள். புதிதாகத் தழுவிய சத்திய வேதத்தில் அவர்களுக்கு எவ்வளவு வைராக்கியம் இருந்ததென்றால், முன் சிலைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த ஆலயத்தை இயேசுவின் கோவிலாக மாற்றி அதன் உச்சியில் திருச்சிலுவையையும் நாட்டினர்.

திரளான மக்கள் கிறிஸ்துவர்களானதைக் கண்ட பிராமணர்கள் தோமையார்மீது பெரிதும் வெறுப்புக்கொண்டு அவரைப் பழிவாங்கக் கங்கணங் கட்டி நின்றனர். அப்போஸ்தலர் நிராணம் என்னும் ஊருக்கு வந்தபோது ஒரு பெண் பிரசவித்தாள். பிராமணர்களால் தூண்டப்பட்ட அப் பெண்ணும், அவளின் தந்தையும் ஒன்றுகூடி தோமையாரே

அதற்குக் காரணகர்த்தாவென்று அவர்மேல் பழி சுமத்தினதும் அல்லாமல், நீதி மன்றத்திலும் வழக்குத் தொடுத்தார்கள். வாதி பிரதிவாதிகள் நீதிபதி முன் நின்ருர்கள். அப்போது அப்போஸ்தலர் நீதிபதியை நோக்கிக் "குழந்தையை இங்குக் கொண்டுவரும்படிச் செய்வீராக" என்று கேட்டுக்கொண்டார். அதன்படி குழந்தையும் கொண்டு வரப்பட்டது. தோமையார் குழந்தையை அணுகி அதன் இதழ்களில் சிலுவை அடையாளம் வரைந்து, "சிறு குழந்தாய்! உன் தந்தை எவனென்று எனக்குச் சொல்வாயாக" எனப் பணித்தார். பச்சைக் குழந்தை "இவரே என் பிதா" என்று அங்கு நின்ற ஒரு மனிதனேச் சுட்டிக்காட்டியது. அவனும் அதை மறுக்காது ஒப்புக்கொண்டான்.

பிறகு அந்த ஊரைவிட்டு மேலையாத்தூருக்குப் போனுர் தோமையார். அங்குள்ளவர்கள் அப்போஸ்தலரைத் தூற்றிப் பரிகாசம் பண்ணினுர்களே ஒழிய, பெரும் பிரயாசைப்பட்டும், மனந்திரும்பியவர் ஒருவரும் இல்லை. இதனுல் கவலை மேலிட்டவராய்த் தோமையார் அருகேயிருந்த மலையில் தனித்திருந்து செபிக்கச் சென்ருர். பாறையில் ஒரு சிலுவையைச் செதுக்கி அதன்முன் முழங்கால்படியிட்டு, இரவை செபத்தில் கழித்தார். "கர்த்தாவே! இங்குள்ள ஆத்துமாக்களைக் கொடும்" என்று பன்முறை மன்ருடினுர். கடைசியாகக் களைத்துப்போகப் பாறையின்மீது சோர்ந்து விழுந்தார். அப்பொழுது பரிசுத்த கன்னிமரியாயி கனவில் தோன்றி "தோமா! ஏன் கவலையுற்றிருக்கின்றீர்" என்று கேட்டார்.

தோமை: பரிசுத்த தேவதாயே! இவ்விடமுள்ள மக்கள் மத வைராக்கியமுடையவர்கள். மெய்யங் கடவுளாகிய உமது திருக்குமாரன் இயேசுவை விசுவசிக்க மறுக்கின்ருர்களே.

மரியாயி: கவலை வேண்டாம். திரும்பப் போய் பிரசங்கிப்பீராக! உமது நாவில் தக்க வார்த்தைகளை வரச் செய்வார் திருச்சுதன். அவர்களும் அவற்றை மறுக்கமாட்டார்கள்.

அப்போஸ்தலர் இவ்வாக்கினால் திடங்கொண்டு எழுந்து உடனே ஊருக்குள் விரைந்து சென்றார். அப்போது அவருக்கு எல்லாரும் மரியாதை செய்தனர். அவர் அருகே பலர் வந்து கூடினர். அவர்களுக்குச் சத்திய வேதத்தைப் போதித்தார். அன்று, என்றும் இல்லாத கவனத்தோடு உற்றுக் கேட்டனர்; சொல்வதை எல்லாம் விசுவசித்தனர்; கடைசியாகக் கிறிஸ்துவர்கள் ஆயினர்.

கரங்கனூர் அரசன் கேரளப்பெருமாளாகிய பில வேந்திரர் தன் பொருளைக் கொண்டு பல கோயில்களைக் கட்டிவைத்தார். அவர் மருமகனாகிய இராயப்பன், டீக்கன் சாந்திப்புஸ், மலையாக்கல் எனும் பிராமண வாலிபனாகிய தோமா ராபன், சங்கபுரி, பாக்காத்தோ மட்டம், கதர்பூர் பூபன், இன்னும் மற்ற சீடர்கள் எல்லாரும் பல இடங்களில் பரிசுத்த வேதத்தைப் போதித்தனர். அவர்கள் உழைப்பினால் மலையாளப் பகுதியில் திருச்சபை நிறுவப்பட்டது,

## கோவில்கள் வரலாறு

தோமையார் தம் காலத்திலேயே பல கோவில்களைக் கட்டிவைத்தார் என்பது பாரம்பரை. மலையாங்கரை எனும் கரங்கனூருக்கு அப்போஸ்தலர் வந்தபோது, அது ஒரு முக்கிய பட்டணமாயிருந்தது வணிகர்களுக்கு அது ஒரு களஞ்சியச் சாலை. அங்குதான் இறைவன் கேரளப்பெருமாளை மனந்திருப்பினார். அந்த ஊரிலேயே ஒரு பிரமாண்டமான கோவிலும் கட்டப்பட்டது. கொல்லம், திருவாங்கூர் அரசின் முக்கிய பட்டணம் அங்கும் தோமையாரால் ஒரு கோவில் கட்டப்பட்டது. அது அவர் காலந்தொட்டு ஆயிரம் ஆண்டு வரையில் இருந்ததாம். அதற்குப் பின்னர் கடலானது கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்து கோவிலைத் தகர்த்துத் தூர்த்துப்போட்டது.

க்ஷாயல் என்னும் ஊரிலும் ஒரு கோவிலிருந்ததாம். ஒரு காலத்தில் அது ஓர் பெரிய கிராமம். அங்கு வசித்திருந்த குடிகள் நாளடைவில் வெளியூர்களில் குடியேறி விட்டனர். இப்போது அங்கே சில பழைய கட்டடங்களைப் பார்க்கலாம்.

கொக்கமங்கலமும் தோமையாரின் அடையாளம் பெற்ற ஓர் ஊர். அப்போஸ்தலர் அங்கு ஒரு மரச்சிலுவையை நாட்டினார். ஒரு முறை அச்சிலுவை வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டு, மத்தல் என்னும் தீவில் போய் ஒதுங்கிற்று. சில செம்படவர்கள் ஒரு நாள் அத்தீவில் என்றும் இல்லாத வகையில் ஒருவகை ஒளி தோன்றுவதைக் கண்டார்கள். இதை அறியும்பொருட்டு ஒளி வந்த திசையை நோக்கிப் போனார்கள். அங்கே ஒதுங்கிக் கிடந்த மரச்சிலுவையிலிருந்தே அந்த ஒளி வந்ததை அவர்கள் கண்டனர். ஆகவே, அதை எடுத்துவந்து தங்கள் ஊராகிய பல்லபுரத்தில் வணக்கத்தோடு வைத்தார்கள். பின்னர் அங்கு ஒரு கோவில் கட்டப்பட்டது. அதிலுள்ள புனித தோமையார் பீடத்தில் அச்சிலுவை வைக்கப்பட்டிருப்பதை இன்றும் பார்க்கலாம். சிறிது காலத்திற்கு முன் மத்தல் தீவில் அச்சிலுவை சென்றடைந்த இடத்தில் ஒரு கோவில் கட்டப்பட்டது. அது இன்றளவும் இருந்துவருகின்றது.

மலையாத்தூர் கோவில் ஒரு மலையின் உச்சியில் இருக்கின்றது. அது நிற்குமிடத்தில்தான் பரிசுத்த கன்னி மரியாயி தோமையாருக்குக் காட்சி கொடுத்தனளாம். இக்கோவிலானது அடிக்கடி மக்களால் பக்தியுடன் தரிசிக்கப் பட்டு வருகிற ஒரு திருத்தலம், இயேசு உயிர்த்த ஞாயிறுக்குப் பின் வரும் முதல் ஞாயிறு மக்கள், சிறப்பாகப் புதிய மண மக்கள் அக்கோவிலுக்குத் திருயாத்திரையாகப் போகிறது வழக்கமாய் இருந்துவருகிறது. பக்தர்கள் அங்கு போகும் போது, ஜெபித்துக்கொண்டே போகிறார்கள். அடிக்கடி "தோமா! முத்தப்பன்" என்று அழைக்கின்றார்கள். மலையில் ஏறும்போது "பொன் சிலுவை முத்தப்பன்! மலையில் ஏறுகிறோம்" என்றும், கீழே இறங்குகையில் 'பொன் சிலுவை முத்தப்பன்! மலையை விட்டு இறங்குகிறோம்; எங்களுக்கு உதவி செய்யும்" என்றும் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

மேற்கூறிய கோவில்களே தோமையார் நாளில் கட்டப்பட்டவற்றில் இப்போதுவரை பழங்கால வரலாற்றை எடுத்துக்காட்டும் சாட்சிக்குறிகளாய் மலையாளப்பகுதியில் விளங்குகின்றன.

# 8 ஆம் அதிகாரம்

## மயிலாப்பூரிலிருந்து வந்த தூது

**தோமையார்** பல ஊர்களில் பிரசங்கித்து விட்டுக் கரங்கனூர் திரும்பியபோது, சீத்தாராமன் என்ற ஒருவன் அவரிடம் வந்தான். இவன் மயிலாப்பூர் வாசி. அங்குள்ள அரசன் மஹாதேவனுடைய படை தளகர்த்தன். தோமையாரைத் தேடியே அங்கு வந்தான். அப்போஸ்தலரைப் பார்த்ததும், "கிறிஸ்துவின் அப்போஸ்தலராகிய முத்தப்பரே! ஆத்தும சரீரங்களுக்குக் குணம் அளிக்கும் முத்தரே! என் மீது இரக்கம் வையும். ஏனெனில், என் மனைவியும் மகளும் வாதனைப்படுகின்றனர். அவர்களைப் பேய் பிடித்து ஓயாத தொல்லைப்படுத்துகிறது. உம் தேவனின் பெயரால் அப்பேயை ஓட்ட உமக்குச் சக்தியிருக்கின்றதென்று நம்புகிறேன்; ஆதலால் என்னோடு மயிலாப்பூருக்கு வர உம்மை மன்றாடுகிறேன்" என்றான்.

தோமையார்: உன் மனைவியும் மகளும் எம் ஆண்டவரின் கருணையால் குணப்படுவார்கள் என்று நம்புவாயேயானால் நான் வருகிறேன்.

சீத்தா: அப்போஸ்தலரே! அப்படி நம்பாவிடின் இவ்வளவு தூரம் உம்மைத்தேடி வருவேனா?

அச்சமயம் கடவுள் தம்மை வேறிடம் அழைக்கின்றார் என்று அறிந்துகொண்டார் அப்போஸ்தலர். உடனே அங்குள்ள கிறிஸ்தவர்களையெல்லாம் ஒருங்கே கூட்டி, அவர்களுக்குப் பின்வருமாறு சுருக்கமாக உபதேசித்தார். "என் மக்களே! உங்களைவிட்டு நான் பிரியும் நேரம் கிட்டிவிட்டது. ஏனெனில், நம் ஆண்டவர் வேறிடத்தில் அவரது திருச்சபையை நிறுவ என்னை அழைக்கின்றார். நான் உங்களை விட்டுப் போகப் போகிறேன். நீங்கள் விசுவாசத்தில் நிலைத்திருங்கள், நான் கற்பித்தபடி நடந்துவாருங்கள்; சத்தியத்தைத் தவறவிடாதீர்கள். உங்கள் முழு இருதயத்தோடு

இயேசுவை நேசியுங்கள். சாந்திப்புஸ் இனிமேலாக உங்களைக் கண்காணிப்பார். நீங்கள் என்னை இவ்வுலகில் திரும்பவும் பார்க்கமாட்டீர்கள் என்று நினைக்கின்றேன்" என்பதே இவ்வாறு உரைத்ததும் கண்கள் வானத்தை நோக்க இருகைகளையும் உயர்த்தி, "ஆண்டவரே அடியேன் மூலமாக உமது மந்தையில் கொண்டு சேர்க்கப்பட்டுள்ள இந்த மக்களுக்கு நீரே பாதுகாவலாய் இருப்பீராக. இவர்களில் ஒருவராகிலும் முன்வைத்த காலைப் பின்வைக்காது இருக்கும்படிப் பார்த்தருளும். தேவரீரது கண்காணிப்பால் அவர்கள் இயேசுகிறிஸ்துவால் தயாராக்கப்பட்ட பரலோக இன்பத்தையும் நித்திய வாழ்வையும் அடையச் செய்தருளும். பிதா சுதன் பரிசுத்த ஆவிக்கு என்றென்றும் மகிமையும் துதியும் உண்டாவதாக" என்றுகூறி, அவர்களை மனமார ஆசீர்வதித்தார். எல்லாரும் ஒன்றாக "ஆமென்' என்று முடித்தார்கள். "நம் ஆண்டவரின் சமாதானம் உன்னிடம் எப்போதும் இருக்கக்கடவது" என்று சொல்லி, ஒவ்வொருவர் தலையின் மீதும் தமது கையைவைத்து மந்திரித்தார். பின்னர் தன் சீடர்களை நெஞ்சோடு அணைத்து அவர்களுக்கு அரிய அறிவுரைகளைப் போதித்தபின் அவர்களைவிட்டுப் பயணமானார்.

மக்களோ பெரிதும் மனங்கலங்கி அழுதனர்; அவரோடு சிறிது தூரம் சென்று 'முத்தப்பரே! தோமை முத்தப்பரே! எங்களை மறக்க வேண்டாம். இறைவனிடம் எங்களுக்காகப் பரிந்துபேச நினைவுகூரும்" என்று மன்றாடினர்.

பிறகு சீத்தாராமன் ஏற்பாடு செய்திருந்த இரு வெண் காளைகள் பூட்டப்பட்ட வண்டியில் ஏறிக்கொண்டு அவனோடு மயிலாப்பூர் புறப்பட்டார். பீட்டர்ராபனும், தோமாராபனும், அவரோடு ஏழுமைல் தூரம் சென்று பயணம் அனுப்பிவிட்டுத் திரும்பினர். கிறிஸ்தவர்களோ ஆழ்ந்த வேதனையில் மூழ்கியிருந்தனர். திரும்பத் தம்மைப் பார்க்கமாட்டார்களென்று தோமையார் சொன்னசொல் அவர்கள் மனத்தை வெகுவாக வாட்டி வதைத்துக்கொண்டிருந்தது.

# 9 ஆம் அதிகாரம்

## மயிலாப்பூர்

**இந்நகரானது** பண்டைக் காலத்தில் புகழ்பெற்றிருந்தது. பழங்காலத்து வரலாற்று ஆசிரியர் அதை மயிலாப்பூர் என்றும் காலாமீனூர் என்றும் அழைத்திருக்கின்றார்கள். இரு பெயர்களும் ஓர் ஊரையே குறிப்பிடுகின்றன என்பது பொருந்தும். ஏனெனில், ஒரு ஊருக்கு இரு பெயர்கள் இருப்பது புதிது அல்ல; அதோடு அவ்விரு பெயர்களும் ஒரே பொருளைத் தருகின்றன. காலாமீனூர் என்றால் "காலா" எனும் ஒருவித மீன் மிகுந்துள்ள ஊராகும். மயிலாப்பூர் என்றாலும் மீன்கள் மிகுந்த ஊர் என்றே பொருள். "மயிலை' என்னும் சொல்லுக்கு மீன் என்றும் பொருள்.

பல்வளங்கள் செறிந்து செழித்திருந்த பூமியாய் இருந்ததால் மயிலாப்பூருக்கு வியாபாரத்தின் பொருட்டுக் கப்பல்கள் பல வந்துகொண்டிருந்தன. மேற்றிசை நாடுகளிலிருந்து வணிகர்கள் குடியேறியும் இருந்தனர். அவர்கள் பல மதத்தினராகவும் இருந்தமையால் அத்தகையினோர் மதக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு பல கோவில்களும் இருந்தன. ஒரு காலத்தில் 1300 கோவில்கள் அங்குப் பரவிக்கிடந்தன என்று சொல்லப்படுகின்றது. போர்த்துக்கீசியர் அங்கு வந்தபோது அக்கோவில்களைக் கவனிப்பாரின்றி அவை அனைத்தும் அழிந்து பாழ்பட்டு அவற்றின் அடையாளங்கள் மட்டுமே காணப்பட்டனவாம். அங்கு நடத்த சண்டைக்குப் பின் அந்நகரானது அழிந்து போனது. அங்கிருந்த கிறிஸ்தவர்களை அடியோடு தொலைக்கத் தலைப்பட்டனர். இக் கொடுமையினின்று தப்பித்துக்கொள்ளும் வண்ணம் கிறிஸ்தவர்கள் மயிலை நகரத்தைவிட்டு மலையாளதேசம் போய் அங்கு குடியேற வேண்டியதாயிற்று.

இச்சிறந்த நகரிலேயே தோமையாருடைய சடலம் அடக்கம் செய்யப்பட்டதென்பது பாரம்பரை. 1293ஆம் ஆண்டு மார்க்கப்போலோவும் முத்திப்பேறுபெற்ற ஒடரிக் என்பவரும் மயிலாப்பூரைத் தமிழர் வசிக்கும் இடம் என்று கூறியுள்ளனர். சிரியா நாட்டு வணிகர் அம்ரு (1340) என்பவர் அந்நகரை 'மயிலன்' என்றும், மரிக்நோலி அருளப்பர் (1349) 'மிராப்போலிஸ்' என்றும்; நிக்கோலாஸ் தெ கோந்தி (1430) 'மாலெப்பூர்' என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

# 10 ஆம் அதிகாரம்

## மயிலேக்கு வருதல்

*சீத்தாராமனும்* தோமையாரும் நெடுநாள் கடும் பயணஞ் செய்து கடைசியாக மயிலாப்பூரை அடைந்தனர். உடனே சீத்தாராமன் அப்போஸ்தலரைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்ருன். அவர் அவனது இல்லத்தை நெருங்கியதும், பேயானது அவனது மனேவியையும் மகளே யும் அதிக அல்லல் படுத்த ஆரம்பித்தது. உள்ளே சென்ற வுடனே இன்னும் அதிகமாக அவர்களே வாதித்ததுமன்றிப் பெருங் கூச்சலிட்டு, இயேசுவின் அப்போஸ்தலராகிய தோமையாரே! இதற்குமுன் ஒரு மாகாணத்திலிருந்து எங்களேத் துரத்தினீர். அதைவிட்டு இங்கே வந்து தங்கிேனும். இப்போது இங்கிருந்துமா எங்களே ஓட்டப் பார்க்கின்றீர் ?" என்று கூவினது. நாராங்கோட்டையில் ஒரு பெண்ணிடமிருந்து முன்னொருமுறை ஓட்டப்பட்ட பேய் அதுவே என்று அப்போஸ்தலர் அறிந்துகொண்டார். பேயை நோக்கி, அதிகாரத் தொனியுடன் "ஓ, அசுத்த அரூபியே! நீ அறிந்தபடியே நான் இயேசுவின் ஊழியன்; அவரது பேரால் கட்டளேயிடுகிறேன். கடவுளின் படைப் பாகிய இந்நங்கையரை விட்டு ஓடிப் போவாயாக. இனி மேல் மனிதர்களுக்குத் தீங்கு விளேவிக்காமல் காட்டில் போய்த் திரிவாயாக" என்று கட்டளேயிட்டார். உடனே அப்பேய் அலறிக் கூச்சலிட்டு அப்பெண்களிடமிருந்து அகன்று போய்விட்டது. அப்போது அவர்கள் ஆட்டம் அடங்கிக் களேத்துப் போய் உணர்ச்சியற்றுக் கீழே விழுந்தார்கள். தோமையார் அவர்கள் கைகளேப்பற்றித் தூக்கிக் களேப்புத் தெளிந்து எழுந்திருக்கச் செய்தார். அவர்கள் முன்பாக வைக்கப்பட்டிருந்த உணவையும், தண்ணீரையும் சாப்பிடும்படிக் கூறினர். அவர்களும் அப்படியே செய்தனர். இவ்வளவு பெரிய உதவியைப் பெற்ற சீத்தாராமன், தோமையாரைத் தன் இல்லத்திலேயே

இருக்கச் செய்தான். இச் செய்தி எங்கும் பரவவே, நோயால் துன்பப் படுவோர் பலர் அவர் உதவியை நாடி வந்தனர். அவரும் நோயாளிகள் பலரைக் குணப் படுத்தினார். மேலும் ஓயாது உபதேசம் செய்தார். அதன் பயனாகப் பெருந்திரளான மக்கள் மனந்திரும்பினர்.

## பெரும் மரக் கட்டை

மயிலாப்பூர், கடற்கரை ஓரமுள்ள பட்டணம் என்றும், அங்கு பல வர்த்தகக் கப்பல்கள் வந்து போவது வழக்கமென்றும் ஏற்கனவே கூறியுள்ளோம். அங்ஙனம் இருக்க ஒருநாள் கரையோரம் ஒரு பிரமாண்டமான மரக்கட்டை வந்து ஒதுங்கியது. அதனால் கப்பல்கள் வழக்கமாகவரும் கரையண்டை வருவது முடியாது போயிற்று. இதை அறிந்த அரசன் அக்கட்டையை உடனே கரைமேல் கொண்டு வரக் கட்டளையிட்டான். அதற்காகப் பெரிய யானை ஒன்றும் பல கூலி ஆட்களும் கொண்டு வரப்பட்டார்கள். அரசனும் அங்கு வந்திருந்தான். ஆட்கள் தண்ணீரில் இறங்கி யானையின் உதவியைக் கொண்டு தங்களால் ஆன முயற்சியை எல்லாம் செய்து முயன்றும், மரம் சிறிதும் அசைவதாகத் தோன்றவில்லை. இதைக் கண்ட அரசன் தங்கள் தெய்வத்தால் சாதிக்கக் கூடுமென்று கருதி, பூசாரிகள் பலரைக் கொண்டுவந்து தேவ ஆராதனைகள் நடத்தக் கட்டளையிட்டான். அவர்களும் தீபதூபம் காட்டி நைவேத்தியங்கள் செய்து, தேவர்களை இறைஞ்சினார்கள். ஒன்றும் பலிக்கவில்லை அதற்குப்பின் மந்திரவாதிகளை அழைப்பித்து, அவர்கள் தங்கள் மந்திர பலத்தால் காரியத்தைச் சாதித்துத் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டும்படிக் கற்பித்தான். அவர்கள் வந்து ஏராளமான ஆடு கோழிகளைப் பலியிட்டும் கை கூடவில்லை. இதைப் பார்த்த அரசன் மிகவும் சினந்து, "நீங்கள் எல்லோரும் பயனற்ற பேதைகள்; ஒன்றும் செய்ய இயலாத வீணர்கள்; பெரும் பொய்யர்கள்; உங்கள் மந்திரங்களும் பொய். உங்களால் முடியாததை நான் முடிக்கிறேன் பாருங்கள்" என்று சபதம் கூறி, 300 யானைகளையும், ஆயிரக் கணக்கான படை வீரர்களையும்

கொண்டு வந்தான். யானைகளெல்லாம் மரத்தை முன்னின்று இழுக்க, மனிதர் பின்னின்று தள்ள ஒரு நிமிடத்தில் கரையேறிவிடும் என்று அரசனும் அங்குக் கூடியிருந்த திரளான மக்களும் எண்ணினர். ஆனால் யானைகளும் பிறரும் கடும் முயற்சி செய்தும் கட்டையானது கடுகளவும் நகரவில்லை. இதைக்கண்ட அரசன் ஏமாற்ற மடைந்து, வெட்கி, இன்னது செய்வதென்று தெரியாமல் ஏக்கங் கொண்டிருந்தான்.

அச்சமயம் தோமையார் அங்கு சென்றார். நடந்த வற்றைக் கேட்டும் பார்த்தும் தெரிந்துகொண்டபின் மன்னனாகிய மஹாதேவனை அணுகி, "அரசே! நான் ஒரு கோவில் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு மரம் தேவையான படியால் கடற்கரையில் ஒதுங்கியுள்ள மரத்தை எனக்குக் கொடுத்தருள்வீராக. நானே அதைக் கரை சேர்த்து எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று வேண்டினர். இங்கிருக்கின்ற யானைகளையும் ஆட்களையும்விட நீ அதிக பலசாலியென்று நினைக்கின்றாயா? அவர்களால் முடியாததை உன்னால் செய்ய முடியுமானால் வேண்டுகோளின்படிச் செய்துகொள்ளுவதில் எனக்குத் தடையில்லை" என்று பரிகாசச் சிரிப்புடன் பகன்றான் அரசன். இதைக் கேட்டதும் தோமையார், "நானோ வயதானவன்; வலிமையற்றவன். ஆயினும் நான் வணங்கும் தேவன் வல்லபமுள்ளவர். அவருடைய வல்லமையை இப்போது காண்பீர்'' என்று உரைத்துத் தமது இடுப்பிலிருந்த கச்சையை அவிழ்த்து, அங்கு நின்ற கூலியாட்களில் ஒருவனிடம் கொடுத்து, ஒரு நுனியால் மரத்தைக் கட்டி மறு நுனியைக் கையிற்பிடித்து இழுக்கும்படிக் கூறினர். அவன் மரத்தைக் கட்டினவுடன் அப்போஸ்தலர் வானத்தை நோக்கி ஆண்டவரை வேண்டிய பின், கட்டையின்மேல் சிலுவை அடையாளம் வரைந்து, "இப்போது இழுப்பாயாக" என்றார். அவன் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, நம்பிக்கையுடன் கச்சையைப் பிடித்து இழுத்தான். அனைவரும் திடுக்குற்று வியக்கும்படிச் சிறிதும் தடங்கலின்றி அக்கட்டை கரைவந்து சேர்ந்தது.

மேலும் அவன் அதைத் தோமையார் கோவில் கட்டக் குறித்திருந்த இடத்திற்கே இழுத்துக் கொண்டுபோய் போட்டான்.

இதைக் கண்கூடாகப் பார்த்த அரசனே பிரமிப்படைந்து பேராச்சரியத்தால் மலைத்துப் போனான். பூசாரிகளையும் மந்திரவாதிகளையும் பார்த்து, ''நீங்கள் மெய்யாகவே பொய்யர்கள், வீணர்கள்'' என்று சினந்து கூறிவிட்டு, அப்போஸ்தலரை அணுகி அவரை வணங்கி, "ஓ! அருளுடையாரே! நீரே வல்லமையுள்ளவர். உமது விருப்பப்படி கோவில் கட்டிக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய பொருள் உதவியும் அளிப்பேன்'' என்று அவருக்குப் பணிவுடன் வாக்களித்தான்.

பின்னர் அப்போஸ்தலர் சீத்தாராமன் வீட்டிற்குப் போயினார். பெருந்திரள் அவரைப் பின்சென்றது. தமது அதிமுக்கிய வேலையாகிய போதனையைத் தொடர்ந்து நடத்தி வருகையில், மலையாளத்தில் சாந்திப்புஸ் மறை ஆயர் இறந்துபோனார் என்னும் துக்க செய்தி எட்டியது. தோமையார் அதிக கவலைக்குள்ளாயினார். ஆயினும், உடனே பீட்டர் ராபானை வரவழைத்து, அவருக்கு அபிஷேகம் பண்ணி அவரை ஆயராக நியமித்து மலையாளத்துக்கு அனுப்பினார்.

## அரசகுல உறவு

பட்டணத்தில் அரசகுலத்தைச் சேர்ந்த ஒரு மாது இருந்தாள். அவளை அவள் உறவினர்கள் "சின்ன ஆச்சி' என்றழைப்பர். ஆறு ஆண்டு காலம் கண்குருடாய் அவதிப் பட்டாள். அப்போஸ்தலர் செய்யும் புதுமைகளைக் கேள்விப் பட்டதும் அவரை அணுகித் தனது கண்கள் பார்வை பெற அவர் உதவி செய்ய வேண்டினாள். அவளது வேண்டுகோளுக்கு இரங்கி அப்போஸ்தலர் அவளை மந்திரிக்க, அவள் கண்கள் திறக்கப்பட்டன. அதனால் அவள் பேரானந்தம் அடைந்தாள் என்று சொல்லவும் வேண்டுமா? அவள் தனக்குக் கிடைத்த பெரும் உதவியை எங்கும் விளம்பரப் படுத்தினாள். ஒருநாள் அவளுடைய தங்கை மகளும் அரசன்

மஹாதேவனின் மைத்துனனுகிய கிருஷ்ணன் மனைவியுமாகிய 'மகுதானி என்பவள் அவனைப் பார்த்ததும் வியப்புற்று "சின்னுச்சி! உங்களுடைய கண்கள் இப்போது நன்ருகப் பார்வையடைந்து விட்டனவே; மருந்தொன்றும் இல்லாமலே குணமாயிற்ருமே. உங்களுக்குப் பார்வை கொடுத்தவர் ஒரு கடவுளாகத்தான் இருக்கவேண்டும்'' என்ருள்.

சின்னுச்சி: அம்மா! எத்தனையோ பேர் அவர் சலுகையை அடைந்திருக்கிருர்கள். இயேசு கிறிஸ்துவின் பெயரை உச்சரித்துப் பலரைக் குணப்படுத்தியிருக்கிருர்.

மகு: அப்படியானுல் நானும் அவரைப் போய்ப் பார்க்கலாமா?

சின்: அதற்கென்ன தடை? நாளைக்கே போகலாம், அவர் மக்களுக்குப் போதித்துக் கொண்டிருப்பார். பெண்கள் இருக்குமிடமாகப் போ; அவரைக் கண்கூடாகப் பார்ப்பாய். அவரது இனிய மொழிகளையும் கேட்பாய்!

அடுத்த நாள் தனது பல்லக்கில் ஏறிக்கொண்டு சீத்தாராமன் வீடு நோக்கிச் சென்ருள் மகுதானி மக்கள் திரள் வீடு நிறையவும் வெளியிலும் இருந்தது. மகுதானிபல்லக்கை விட்டு இறங்கினுள். உள்ளே செல்ல வழியில்லை; இதைக் கண்ட அவளுடைய வேலையாட்கள் மற்ற ஆட்களை அடித்துப் பின்தள்ளி மகுதானிக்கு வழி விடும்படி துன்புறுத்தினர்.

இதை அறிந்த தோமையார்.

ஏழைகளை வதைக்காதீர்கள். உபதேசம் கேட்க வருகிறவர்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள். அவர்கள் என் அண்டையிலிருக்கட்டும்'' என்று அழுத்தமாகச் சொன்னுர். இதைக் கேட்ட மகுதானி தன் ஆட்களை அடக்கிவிட்டுக் கூட்டத்தினூடே விரைந்து சென்று, அப்போஸ்தலர் பாதத்தில் குப்புற வீழ்ந்து, "ஆண்டவரின் அப்போஸ்தலரே! எங்களை மன்னியும். நாங்கள் அறியாது செய்துவிட்டோம்" எனறு மன்ருடினுள். உடனே அவளை எழுந்திருக்கச் செய்து

"மகளே! ஆண்டவரின் சமாதானம் உனக்கு உண்டாவதாக! உனது உயர்ந்த நிலைமையின் பேரிலாவது அல்லது செல்வத்தின் மீதாவது நம்பிக்கை வைக்காதே! அவை புகைபோல் தோன்றி மறைந்துபோகும் தன்மையன. ஆனல் அழியாத செல்வத்தைத் தேடுவாயாக" எனறூர். அதற்குப்பின் தமது உபதேசத்தைத் தொடர்ந்து செய்தார். ஒரே கடவுளாகிய சிருஷ்டிகரையும், அவர் ஒருவரையே வணங்குதல் அவசியம் என்பதையும் பற்றி விவரமாகச் சகலரும் வியப்புறும் வண்ணம் பேசி முடித்தார். மாலேயானதும் அங்கு கூடியிருந்தோர் அனேவரையும் ஆசீர்வதித்தனுப்பினூர். கிருஷ்ணன் மனேவியின் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந்து: "மகளே! சமாதானமாகப் போய் வா! நம் ஆண்டவர் உன்னேத் தம் அடியாளாகத் தெரிந்து கொள்வாராக! இயேசு உன்னேக் காப்பாற்றுவார். போய் வருவாயாக!" என்று ஆறுதல் சொல்லியனுப்பினூர். அவள் தன் இல்லந் திரும்பியதும் தன் அறையினுள் தனித்திருந்து, அப்போஸ்தலர் சொன்னவற்றைப் பற்றித் தியானித்து மனம் உருகிக் கண்ணீர் சிந்திக் கடவுளேப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

அரசன் மஹாதேவனின் கிட்டின உறவினன் கிருஷ்ணன். அவன் வெளியே போயிருந்து வீடு வந்ததும், குளித்துவிட்டுச் சாப்பாட்டு அறைக்குச் சென்றூன். அவனது மனேவி அங்கில்லே. எங்கேயென்று கேட்டான். அவள் தாதியர், "தலேவிக்கு வர விருப்பமில்லேயாம்" என்றூர்கள். இதைக்கேட்ட கிருஷ்ணன் தன் மனேவியின் அறைக்குச் சென்று "கண்ணே! ஏன் இன்று கவலேயாய் இருக்கின்றூய்?" என்று வினவினூன்.

மனே: உடம்பு அலுப்பாயிருக்கின்றது.

கிருஷ்: அந்த மாய வித்தைக்காரனேப் பார்க்கப் போனதினூலா?

மனே: அதனூல் அல்ல.

கிருஷ்: பின் எதனுல்? சொல்.

மனே: எனக்கே தெரியாது.

கிருஷ்: விபரீதம்! நீ வெளியிற் போனதே காரணம். என்னன்பே! உன் நிலைமையைச் சிறிதும் எண்ணுது அம்மந்திரவாதியிடம் போகலாமா? வீட்டில் கௌரவமாக உன் தாதியருடன் கூடி விளையாடிக் காலத்தைப் போக்குவதை விட்டு, அவனிடம் போனது நம் நிலைமைக்குக் குறைவன்ருே? போனது போகட்டும். எழுந்திரு; என்னேடு உணவு கொள்; வா. உன்னை விட்டு நான் சாப்பிட முடியாது.

மனே: எனக்கு மிக்கக் கலக்கமாக இருக்கின்றது. என்னைத் தொந்தரவு செய்யாது விட்டுப் போக உம்மை மன்ருடுகிறேன்.

கிருஷ்: உன்னுடன் மகிழ்வாகச் சாப்பிடுவதற்காக வன்ருே அரசனது அழைப்பையே ஏற்றுக் கொள்ளாது இங்கு வந்தேன். நீயோ, நான் வருந்திக் கூப்பிட்டும் வரமாட்டேன் என்கின்ருய்! என்னுடன் சாப்பிட உனக்கு விருப்பமில்லையா?

மனே: தயவு செய்து என்னை மன்னியுங்கள். எனக்கு என்னவோ மனது நன்ருயில்லை.

கிருஷ்ணன் அவளை விட்டுவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கச் சென்ருன். இரவு கழிந்தது. விடிந்ததும் கிருஷ்ணன் தன் காலைக் கடனை முடித்து விட்டு, அரசனைச் சந்திக்கப் போய் விட்டான். மகுதானியோ அப்போஸ்தலரைத் தரிசிக்கப் புறப்பட்டாள். சீத்தாராமன் வீட்டில், விடியும் முன்னரே வந்து கூடிய மக்களுக்குத் தோமையார் போதித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் மக்களைப்பார்த்து "மக்களே! நேற்று இவ்விடம் வந்து நமது பிரசங்கத்தைக் கேட்டபின் இயேசுவை முழு மனத்தோடு விசுவசிக்கும் குறிகளுடன் தோன்றிய நங்கை யார், உங்களுக்குத் தெரியுமா?"

என்று கேட்டார். அதற்குச் சீத்தாராமன், "அவள் பெயர் மகுதானி அரசகுலத்தைச் சேர்ந்தவள். அவள் கணவன் கிருஷ்ணன்; அரசனின் மைத்துனன். அவன் கெட்டவன். அரசனைத் தன் கைவசப்படுத்தி வைத்திருக்கின்றான். அரசன் அவன் சொல்லைத் தட்டமாட்டார். அவனைப் பெரிதும் மதித்துப் போற்றுகிறார். கிருஷ்ணனே மகுதானி மீது மிக்க அன்புள்ளவன். அவளைப்பற்றி எங்கும் புகழ்வான். அவளைப் போல் அழகும் குணமும் அமையப்பெற்ற வேறொரு பெண் அகிலம் முழுதும் அலைந்து தேடினாலும் அகப்படுவது அரிது என்று அரசனிடமே கூறியுள்ளான் அவளும் தன் கணவனை உள்ளன்புடனே நேசிக்கின்றாள். அவன் சொல்லை அணு வளவும் தட்டமாட்டாள். நீர் போதிப்பதெல்லாம் அவனுக்கு விபரீதமாயிருப்பதுமன்றி அவற்றை வெறுக்கவும் செய்வான். ஆகையால், அவன் மகுதானியை உமது போதனைப்படி நடக்க விடமாட்டான்" என்று பதிலிறுத்தார். இதைக்கேட்ட தோமையார் "நாம் அவநம்பிக்கைப்படலாகாது. ஆண்டவர் அவளுக்கு அருள் அளித்திருந்தால், விசுவாசத்தின் வித்து அவள் இருதயத்தில் வீழ்ந்திருந்தால், இவ்வுலக ஆசைகளையும் வெறுப்பாள். மரணத்துக்குக் கூட அஞ்சாள்" என்றார். அப்போஸ்தலர் இவ்வாறு பேசி முடித்தும் முடியாததுமாயிருக்கும் நேரத்தில் மகுதானி அங்கு வந்தாள்; அவரது கடைசிவார்த்தைகள் அவள் காதில் விழுந்தன. உடனே அவரண்டை சென்று அவரது திருவடியில் விழுந்தாள், "சுவாமி! உமது போதனைகளெல்லாம் என் இருதயத்தில் ஆழப்பதிந்துவிட்டன உம்மாலேயே விசுவாச விதை என் இருதயத்தில் விதைக்கப்பட்டு உள்ளது அது அங்கு பலன் அளிக்க உம்முடைய உதவி தேவை. இயேசு கிறிஸ்துவின் அன்பிற்கு என்னைத் தகுதியுள்ளவளாய் ஆக்குவீராக'' என்று பணிவுடன் வேண்டினாள். தோமையார் அவளை ஆசீர்வதித்தபின் தமது பிரசங்கத்தைத் தொடர்ந்து சொன்னார். மகுதானி ஒவ்வொரு வார்த்தையையும் கவனத்துடன் மனதில் பதித்தாள். கிறிஸ்து மட்டில் அவளுக்கு அன்பு அதிகரித்தது. விசுவாசத்தில் உறுதி அடைந்தாள். மாலை நேரமாகிவிடவே தனது இல்லம் புறப்பட்டாள்.

கிருஷ்ணன் நடுப்பகலில் தனது வீட்டிற்குச் சென்றான். மனைவி அங்கில்லை. இல்லாள் எங்கேயென ஆங்கிருந்த பணிப்பெண்களை வினவினான். "அந்த அந்நிய மனிதனைக் காணப்போன அம்மாள் இன்னும் வரவில்லை. அங்கேயே இருக்கிறார்கள் போலும்' என்றாள் ஒருத்தி. இதைக் கேட்டதும் அளவற்ற கோபம் கொண்டான். முன்னமேயே இதைப்பற்றித் தனக்கு அறிவிக்காததற்காக ஏவலாட்கள் மீது சீறினான். மகுதானியின் வருகைக்காக ஆத்திரத்தோடு காத்திருந்தான். மாலை நேரத்தில்தான் மகுதானி வீடு வந்தாள். அவளைக் கண்டதும் கடுங்கோபங் கொண்டு, இது வரையில் எங்கிருந்தாய்?'' என்று கேட்டான். "நான் வைத்தியரிடம் போயிருந்தேன்'' என்று கூறினாள். கிருஷ்ணனோ, "ஓ! அந்த மாயவித்தைக்காரனிடமோ? அவனையா வைத்தியனென்று அழைக்கின்றாய்? அதுவும் விந்தைதான்'' என்றான். அதற்கு மகுதானி, '' உண்மையில் வைத்தியரே' மற்ற வைத்தியர்களெல்லாரும் ஒருநாள் அழிந்து போகும் உடல் வியாதியைக் குணப்படுத்துகிறார்கள். அந்த உத்தமரோ எக்காலமும் அழியாத ஆத்தும நோய்களைக் குணப்படுத்துகிறார்" என்றாள். இதைக்கேட்டுக் கவலையும் கோபமும் கொண்டான் கிருஷ்ணன். மனைவியை மனத்தில் வெறுத்தான். அப்போஸ்தலரைப் பகைத்தான். ஆனால் வெளியில் காட்டவில்லை. ஏனெனில், மகுதானி அதிக செல்வமும் செல்வாக்கும் உடையவள். ஆகவே அவளை நோக்கி, "என் அருமைக் காதலியே! அந்த அந்நியன் பற்பல மாய வித்தைகள் செய்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அவற்றில் ஈடுபட்டு ஏமாந்து போகாதே அவன் ஓர் அறிவிலி, மாயக்காரன். அவன் வார்த்தைகளை நம்பாதே" என்றான். மகுதானி அவன் சொன்னதை முதலாய்க் கவனியாது கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் கிருஷ்ணன் கோபத்துடன் எழுந்து தனிமையாக உணவறைக்குச் சென்றான்.

## அப்போஸ்தலர் சிறையில் அடைபடுகிறார்

காலைக் கதிரவன் எழுந்தது கிருஷ்ணன் மனக்கவலையோடு துயில் விட்டெழுந்தான். கேவலமான ஆடை

அணிந்துகொண்டு அரசனிடம் சென்றான். மஹாதேவன் அவனைப்பார்த்ததும் "கிருஷ்ணா! உனக்கு நேர்ந்ததென்ன, ஏன் இத்தகைய உடையுடன் வந்திருக்கிறாய்?" எனக் கேட்டான்.

கிருஷ்: "அரசே! தயவுசெய்து என் மனைவி மகுதானியைப் போய்ப்பார்க்க அரசிக்கு உத்தரவு அளித்தருளும். ஏனெனில், அவள் மந்திரவாதியின் மாயவலையிற் சிக்குண்டு கிடக்கின்றாள். என் சகோதரி அவளது மன மயக்கத்தை மாற்றி நல்வழிக்குக் கொண்டுவரக் கூடுமென நம்புகிறேன்"

மஹா: "தாமதம் வேண்டாம் கிருஷ்ணா! உடனே உன் சகோதரியை அழைத்துச் செல். அவளுடைய வார்த்தைகள் உன் மனைவியைச் சரியான வழிக்குத் திருப்பி விடும் என்று நானும் நம்புகிறேன்."

கிருஷ்ணன் அரச சந்நிதிவிட்டு விலகினதும். சீத்தாராமனை அழைத்துவரக் கட்டளையிட்டான் அரசன். சேவகர் விரைந்து சென்று, அவனது இல்லம் புகுந்தனர். அப்போஸ்தலர் பக்கத்தில் சீத்தாராமனும் மகுதானியும் மௌனமாயிருந்து தெய்வீக உரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சேவகரில் ஒருவன் அதிகாரத் தொனியுடன், "சீத்தாராமா! என்ன செய்கிறாய்? அந்த மாயவித்தைக் காரனோடு உனக்கென்ன வேலை? உன் நடத்தையைக் கேட்டு அரசன் கடுங்கோபங் கொண்டுள்ளார் வேண்டுமானால் உன் தலையையும் வெட்ட எத்தனித்துள்ளார். உன்னைக் கையோடு கொண்டு வரக் கட்டளையிட்டிருக்கிறார். உடனே எங்களோடு வருவாயாக" என்று உரைத்தான். இதைக்கேட்ட சீத்தாராமன் அவர்களிடம் மறுவார்த்தை பேசாது, தோமையாரை நோக்கி, "சுவாமி! என்னை ஆசீர்வதித்தருளும். எனக்காக இறைவனை மன்றாடும்" என்று கெஞ்சினான். தோமையாரும் அவனுக்கு ஆறுதலாக "மகனே! அஞ்சாதே! கடவுள்மீது உன் நம்பிக்கையெல்லாம் வைத்திரு. உனக்குக் குறை ஒன்றும் நேராது.

அவரே நம்மைப் பாதுகாப்பவர். அவர் திருவுளமின்றி ஒருவரும் நமக்குத் தீங்கிழையார்" என்ருர்.

சீத்தாராமன் தனக்கு ஆபத்துக் காத்திருக்கிறதென்று ஒருவாறு அஞ்சினபோதிலும், தைரியத்தோடு அரசன் முன் வந்து மரியாதைசெய்து நின்ருன். அரசனே அடங்காக் கோபத்தோடு, "சீத்தாராமா! உன் வீட்டில் வந்திருக்கும் மாந்திரிகன் யார்? அவனன்ருே என் அரசில் குழப்பம் உண்டுபண்ணி, என் குடிகளை ஏமாற்றித் திரிகிருன். நீ அத்தகைய மாயக்காரனுக்கு இடங்கொடுப்பது தகுமா?" என்று வினவினுன். அதற்குச் சீத்தாராமன் "அரசே! அவர் யார் என்று உமக்குத் தெரியவில்லை. என் மனைவியும் மகளும் பேய் பிடித்து இன்னல் பட்டது உமக்குத் தெரிந்ததே, பல வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்து பார்த்தேன். பூசாரிகள் பலர் தங்கள் மந்திரத்தால் குணப்படுத்த முயன்ருர்கள். ஒன்றும் பலிக்கவில்லை. அப்போது இம்மகாத்துமாவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஈசன் அவர் கேட்பதை அளிப்பதாக அறிந்தேன். ஆவல் மிகுந்து ஓடினேன் அவரிடம்; என் குறை தீர்க்க வரும் வண்ணம் வேண்டினேன். அவரும் வந்தார். என்னருமைக் கண்மணிகளைப் பசாசின் அலைக்கழிப்பினின்று காப்பாற்றிஞர். என்னைச் சமாதானத்தில் நிலை நாட்டினுர்" என்று பணிவுடன் பகர்ந்தான்.

இவ் வார்த்தைகள் அரசனைச் சாந்தப்படுத்தவில்லை. சேவகர்களை அனுப்பி அப்போஸ்தலரையும் பிடித்துவரும் படிக் கட்டளையிட்டான். அவர்களும் விரைந்து சென்ருர்கள் சீத்தாராமன் வீட்டிற்கு. அங்கு பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் மத்தியில் அப்போஸ்தலர் போதித்துக்கொண்டிருந்தார். கூட்டத்தைப் பார்த்ததும் பயந்த சேவகர் அப்போஸ்தலரைப் பிடிக்காது அரண்மனைக் குத் திரும்பினுர்கள். வந்ததும், "அரசே! நாங்கள் அங்கு போனேம். ஆனல் யாதும் செய்யத் துணியவில்லை. ஏனெனில், மக்களோ பெருங்கூட்டமாய் இருக்கின்றனர். திருமதி மகுதானியம்மாளும் அங்கேயே இருக்கிருர்கள்.

எல்லாரும் அவர் பிரசங்கத்தை ஆவலுடனும் அன்புடனும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இச்சமயத்தில் யாராவது அவர்மேல் கைவைப்பாரானால் அவரைச் சூழ்ந்திருக்கும் மக்கள் அவர்களைச் சும்மா விடமாட்டார்கள். ஆதலால் கும்பலுக்கு அஞ்சித் திரும்பிவிட்டோம்" என்றனர். இதைக் கேட்டவுடன் கிருஷ்ணன் இருக்கையை விட்டெழுந்து, "அரசே! என் பின்னால் சில சேவகர்களை அனுப்புங்கள். நான் போய் அவனையும் அவனால் புத்தியிழந்து அலையும் மருதானியையும் இப்பொழுதே இங்குக் கொண்டு வருகிறேன்'' என்று இரைந்தான்.

அவன் விருப்பத்திற்கு அரசன் இணங்கினான்; எனவே கிருஷ்ணன் ஆத்திரத்துடன் சீத்தாராமன் வீட்டுக்குச் சென்றான். அப்போஸ்தலரைக் கண்டான். ஆனால் மருதானி அச்சமயம் வீடு திரும்பிவிட்டாள். அப்போஸ்தலரை நெருங்கி, "ஓ! மாந்திரிகனே! உனது மாயவித்தை உனக்கென்ன உதவி செய்யப் போகிறதென்று பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே அவர் கழுத்தில் கயிறிட்டுப் பிணித்து, "நீ போதிக்கின்ற கிறிஸ்து இப்போது உன்னை என் கையினின்று விடுதலையாக்கட்டும்'' என்று ஏளனஞ்செய்து அரசன் சமுகத்துக்குத் தோமையாரை இழுத்துக்கொண்டு போனான்.

அரசன் அப்போஸ்தலரைப் பார்த்தான், கடுஞ்சினங் கொண்டான். கர்ச்சித்துக்கொண்டு, "நீ எச்சாதியான்? எந்நாட்டான்? எந்தக் கடவுள் பேரால் அற்புதங்கள் செய்கின்றாய்?'' எனக் கேட்டான். அதற்குத் தோமையார், "அரசே! என் இறைவனே உம் இறைவன். அவரே இகத்தையும் பரத்தையும் படைத்தவர். அவர் ஒருவரையே நாம் எல்லோரும் ஆராதிக்க வேண்டும். அவரை அறிய வேண்டும். மறுப்பது முற்றுந் தவறு'' என்று பயமின்றிப் பகர்ந்தார். அரசனோ அதை அணுவளவும் கவனியாமல் அவரை விலங்கிட்டுச் சிறைக்கூடத்திற்கு அனுப்பினான். சேவகர் அவரைச் சிறையிலிட்டுக் கதவை மூடினர். அப்போஸ்தலர் முழந்தாளிட்டு இயேசுவுக்காகப் பாடுபடக்

கிடைத்தது பெரும் பாக்கியம் என்று கடவுளுக்குத் தோத்திரம் புரிந்தார்.

கிருஷ்ணனும் மஹாதேவனும் ஒன்றுகூடி அவரை எவ்விதத்தில் தொலைப்பதென்று திட்டமிட்டார்கள். ஒரு பக்கம் அவரைக் கொலைசெய்யத் தீர்மானித்தனர் மறு பக்கம் மக்களுக்கு அஞ்சினர். ஏனெனில் அவரால் பலர் மனந்திரும்பியிருந்தனர்; பலர் அவர்மீது பற்றுதலாய் இருந்தனர்; அவரைத் தெய்வீக அருள் பெற்றவர் என்று கொண்டாடினர்.

## மருதானியும் சீத்தாராமன் குடும்பத்தாரும் மனந்திரும்புகிறார்கள்

அப்போஸ்தலரைச் சிறையிலிட்டதை அறிந்து அணை கடந்த மகிழ்ச்சியடைந்தான் கிருஷ்ணன். இணையில்லா இன்பத்துடன் இல்லஞ் சென்றான். இனிமேல் தன் மனைவி புதுக்கொள்கைகளையெல்லாம் விட்டு விட்டுப் பழைய வழிக்கு வந்துவிடுவாள் என்று மனப்பால் குடித்தான். அவளுடைய அறைக்குச் சென்றான். மருதானி மனவருத்தத்தால் முகம் வாடியிருப்பதைக் கண்டான். "என் கண்ணே! என் ஆருயிர்க் காதலி! மருதானி! ஏன் ஏக்கங் கொண்டிருக்கிறாய்? உன் மனத்தில் குடிகொண்டிருக்கும் கடுங் கவலைதான் என்ன? அந்த மாந்திரிகனின் நினைவை அறவே ஒழித்துவிடு. அவன் இப்போது சிறையிலிருக்கின்றான். நீ இனிமேல் அவனைப் பார்க்கமுடியாது" என்று அவளுக்கு ஆறுதல் சொல்லிப் பார்த்தான். அதற்கு எதிராக அவளது மனம், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியதுபோல் பெரிதும் நொந்து வாடியது. இதைக் கண்ட கிருஷ்ணன், கோபமும் கவலையும் கொண்டு அவளை விட்டகன்று படுக்கை அறைக்குப் போனான். மருதானியோ தெண்டனிட்டுத் தரையில் வீழ்ந்து ஜெபித்து, தனது சீவியத்தைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தனள்.

இந்நிலையில் அவளுடைய செவிலித்தாய் அங்கு வந்தாள். மகுதானி கண்ணீர்விட்டுக் கலங்கிக் கிடப்பதைக் கண்டு "மகளே! ஏன் இக்கோலம்? உன் அழகிய முகம் வாடியிருப்பதேன்? என்ன விபரீத எண்ணங்கள் உன் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன?" என்று வினவினாள். அதற்குப் பதிலாக, "ஓ! அம்மணி! என் தாயே! விபரீதம் ஒன்றுமில்லை. உண்மை எனக்கு இப்போது தெளிவாயிருக்கின்றது. தன்னைப் படைத்த மெய்யங் கடவுளை ஒருவன் அறிவது எப்படி விபரீதமாகும்? நீயும் நம் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து அவரைப் பின்பற்றும்படியாகவும், சிறையில் அடைபட்டிருக்கும் அப்போஸ்தலர்மீது உனக்கு அநுதாபமுண்டாகும்படியாகவும் கடவுள் அருள் செய்வாராக!" என்று மொழிந்தாள் மகுதானி "நீ சொல்வது உண்மையென்று எனக்குத் தென்பட்டால் ஐயமற உன்னைப் போலவே நானும் விசுவசிப்பேன்'' எனப் பதிலளித்தாள் செவிலித்தாய் இது மகுதானிக்கு ஆறுதலளித்தது. உடனே தான் கேட்ட தெய்வீக உண்மைகளையெல்லாம் விவரமாக விளக்கினாள். அவற்றைக் கேட்ட செவிலித்தாய் இயேசுவை விசுவசித்தாள்.

இதற்குப்பின் மகுதானி இருபது வெள்ளி நாணயங்களை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு வெளியே புறப்பட்டாள். ஏனெனில், அக்காசுகளைக் கொண்டு காவற்காரர்களுக்குக் கைக்கூலி கொடுத்து, அப்போஸ்தலரைப் பார்க்க அனுமதி பெறலாமென்று எண்ணியே மகுதானி நடந்து சென்றாள். அப்போஸ்தலர் குறுக்கே வந்தார். பார்த்ததும் ஏதோ, உருவெளித் தோற்றமோ என்று பயந்து பின்னடைந்தாள். அப்போஸ்தலர், "மகளே! அஞ்சாதே, நீ தேடிப்போகிறவன் நான்தானே. இயேசுவின் இரக்கத்திற்குக் கங்குகரையில்லை. அவர் ஒருபோதும் உன்னைக் கைவிடார்".

மகுதானி: சுவாமி! தேவரீர் எங்குச் செல்கின்றீர்? உம்மைச் சிறையினின்று விடுவித்தவர் யார்?

தோமை: இயேசுவே காவலருக்கு அயர்ந்த தூக்கத்தைக் கொடுத்துச் சிறைக் கதவைத் திறந்தருளினார்.

மகு: ஆண்டவரின் அப்போஸ்தலரே! என் தலையில் இரட்சணிய நீரை வார்த்து நான் தெய்வீக விருந்தைப் புசிக்கக் கிருபை செய்வீராக.

தோமை: அப்படியே ஆகக்கடவது. உன் இல்லம் போவோம், வா.

இருவரும் கிருஷ்ணன் வீட்டை அடைந்தனர். மகுதானி தன் செவிலித்தாயை எழுப்பி, "தாயே என் குழந்தைப் பருவம் முதல் என்னை நேசித்தாய்; எனக்குப் பல உதவிகள் செய்தாய்; ஆனால் நான் இப்போது கேட்பது பெரிய உதவி. தயை செய்வாயாக.

செவிலி: கண்ணே! உனக்கென்ன தேவை? உடனே சொல்.

மகு: ஒருவருக்கும் தெரியாதபடி ஒரு ரொட்டியும் கொஞ்சம் திராட்சை இரசமும் தண்ணீரும் கொண்டு வருவாயா?

செவிலி: அப்படியே ஆகட்டும், அம்மணி, என் கண்மணி. ஒரு உரொட்டி மாத்திரமா; வேண்டிய மட்டும் ஏராளமாக அப்பமும், பெரிய பாத்திரம் நிறைய இரசமும் கொண்டுவருகிறேன்.

மகு; நீ சொல்லுகிற அளவு அவசியமன்று. ஒரு உரொட்டியும் கொஞ்சம் இரசமுமே போதுமானவை.

செவிலி: அப்படியே செய்கிறேன், என் கண்ணே.

சற்றுநேரத்திற்குள் தேவையானவை. வந்து சேர்ந்தன. தோமையார் தண்ணீரை மந்திரித்து மகுதானிக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அப்புறம் திருப்பலிபூசை நிறைவேற்றி அப்பூசையிலேயே புது நன்மையும் கொடுத்தார்.

இதைக்கண்ட செவிலி தனக்கும் ஞானஸ்நானம் தந்தருள வேண்டுமென்று மன்றடினள். அப்போஸ்தலர் அவள் விருப்பப்படியே செய்தார். இரு பெண்களுக்கும் ஆறுதல் சொல்லி அவர்களைத் திடப்படுத்திவிட்டுக் கடைசியாக, "கடவுள் அருள் உங்களோடு எப்போதும் இருப்பதாக!" என்று ஆசீர்வதித்துவிட்டுச் சிறைக்கூடம் திரும்பினர். கதவுகள் திறந்தன; காவற்காரர் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தனர். உட்புகுந்தார்; கதவுகள் தாமே சாத்திக்கொண்டன.

தனது இல்லத்திற்கு அப்போஸ்தலர் வந்துபோனதைப் பற்றி அறிந்ததும் கிருஷ்ணன் மிக்கக் கோபத்தோடு அரசனிடம் சென்று நடந்த நிகழ்ச்சியை நவின்றான். மஹாதேவனே அடிபட்ட நாகம்போல் சீறி, "அம்மந்திரவாதியைச் சும்மாவிடலாகாது. இப்பொழுதே கொண்டுவந்து உயிர்வதை செய்யவேண்டும்" எனக்கதறினன். அதற்குக் கிருஷ்ணன், "அண்ணலே! ஆத்திரம் வேண்டாம்; சற்றுப் பொறும். அவனைச் சிறையினின்று கொண்டுவந்து தக்கபடி தண்டிப்போம். பயமுறுத்தினல் நம் சொற்படி அவன் நடக்க இணங்கலாம். அப்போது மகுதானியிடம்போய்ப் பேசி நம் தேவர்களையே தொழும்படி செய்யக்கூடும். ஆதலால் அவனை அழைத்துவரக் கட்டளையிடுவீராக'' என்று வேண்டினன். அரசன் அப்படியே கட்டளையிட்டான். தோமையாரும் சிறையினின்று கொண்டுவரப்பட்டார். அருகிலிருந்த மற்ற மறியற்காரரோ வெகுவாகக் கவலைப்பட்டார்கள். ஏனெனில், அப்போஸ்தலர் அவர்கள் அனைவருக்கும் அன்புடன் ஆறுதலளிக்கும் மருந்துபோலிருந்தார்,

## அரசன்முன் அச்சமின்றி நிற்கிறார் தோமையார்

அரசன்: ஏன் விபரீதமானவைகளைப்பற்றிப் போதிக்கின்றாய்? நீ சொல்வதை எங்கள் தேவர்கள் பகைக்கிறார்கள். என் குடிகள் வெறுக்கின்றார்கள். அவற்றில் மேலானது ஒன்றும் இல்லையே.

தோமை: தீமையான எதையும் போதிக்கின்றேனே?

அர: அதிருக்கட்டும்; நான் உன்னை விடுதலையாக்குகிறேன். நீ சென்று என் உறவினனாகிய கிருஷ்ணனின் மனைவியைப் பழைய வழிக்கு வரும்படி மட்டும் செய்துவிடு. நீ ஒரு மந்திரவாதியே; நீ அவளுக்கு மருந்திட்டிருக்கின்றாய். அதை எடுத்துப்போட உனக்குச் சக்தியிருக்குமென்று நம்புகிறேன். தாமதமின்றிப் போய் நான் சொல்வதுபோல் செய். அப்படியின்றேல் உன் உயிருக்கு உலை வைப்பேன். எச்சரிக்கை!

தோமை: அரசே! நான் என்னுயிரை மதிப்பதில்லை. இது இன்றில்லாவிடினும், என்றாவது ஒருநாள் இவ்வுடலை விட்டுப் போகவேண்டியதே. ஆனால் நான் போதிக்கும் வாழ்வோ நித்தியமானது. ஆகையால் உமது ஆத்திர மொழிகளுக்கு நான் அஞ்சேன்.

அர: உன் அதிகப் பிரசங்கத்தை அடக்கு. உடனே போய் நானிட்ட கட்டளையை நிறைவேற்றுவாயாக.

அரசன் இவ்வாறாக, அதட்டி உரைத்துவிட்டு உள்ளே சென்றான். அப்போஸ்தலர் அரசன் அவையை விட்டு அகன்றுபோய்ச் சீத்தாராமன் வீடு சேர்ந்தார். தோமையாரைக் கண்ட சீத்தாராமன் உள்ளம் பூரித்து, "சுவாமி! தேவரீர் வந்தது தெய்வாதீனமே! என் மனைவியும் மகளும் நானும் இயேசுவை நம்புகின்றோம். அவரையே பின்பற்றத் தீர்மானித்து விட்டோம். அவருடைய திருமந்தையில் எங்களைச் சேர்த்தருளும். உம் கைகளால் எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தருள்வீராக" என்று கெஞ்சி மன்றாடினான். அவர்களுக்கு இன்னொருமுறை உபதேசித்தபின் ஞானஸ்நானம் கொடுத்தார். அதோடு திவ்யபலிபூசையும் அங்கேயே நிறைவேற்றி, மூவருக்கும் புது நன்மையும் அளித்தார். அவர்கள் ஆனந்தக்கடலில் ஆழ்ந்திருந்தனர்.

## பிடிக்கப்போனவர் பிடிபட்டனர்

அப்போஸ்தலரை அனுப்பிவிட்டு அரசன் இரா உணவு அருந்தச் சென்ருன். அங்கே அரசி திருப்பதி என்பாள் அரசன் வருகைக்காகக் காத்திருந்தாள். உடனே அரசன் அவளிடம் கிருஷ்ணன் மனேவிக்கு நிகழ்ந்ததை விரிவாகச் சொல்லி, அதன் பொருட்டு அவள் தமையன் எவ்வளவு துயரம் அடைத்திருக்கின்ருன் என்பதை விவரித்தான். பின்னர், "என் காதலி! திருப்பதி! உன் அண்ணனுக்கு ஆறுதல் நீதான் வருவிக்கக்கூடும். நீயும், நம் மைந்தன் விஜயனும் போய் மகுதானியைப் பாருங்கள். உன்னுடைய நயமொழிகளால் அவள் மனத்தை மாற்றலாம். நீ போய் முயல்வாயாக" என்று அரசியை ஏவினன். அரசனது விருப்பத்திற்கு இணங்கி மறுநாள் காலே திருப்பதியும் அவள் மகன் விஜயனும் மகுதானியைத் தேடிப்போயினர். திருப்பதி மகுதானியைக் கண்டதும் கட்டியணேத்து முத்த மிட்டாள்; அன்பு காட்டினள்; நல்வார்த்தையாடினள். பின்பு தான் வந்த காரணத்தைப்பற்றிப் பின்வருமாறு பேசத் தொடங்கினள்: "மகுதானி! என் அருமை அண்ணியே! உன்னேப்பற்றி ஊரெல்லாம் பலவாருகப் பேசுகின்றனரே. உன்னே இவ்வாறு மயக்கினது யார்? உன்னல் அரசருக்கு ஆருத்துயர் உண்டாயிருக்கின்றது. அரசவை முழுவதுமே மனக் கலக்கம் ஏற்பட்டிருக்கின்றது. நான் மிகைப்படுத்திக் கூறவில்லே. விபரீத வேதத்தை உனக்குக் கற்பித்தது யார்?" என்று வினவினள். அவள் பதில் அளிக்குமுன் விஜயன், "அந்த மந்திரவாதி ஒரு விபரீதக் கடவுளேப்பற்றிப் பேசுகிருன். ஆனல் இகபரங்களேப் படைத்தவர் நம் தேவர்களன்றி வேறு எவராயிருக்கக் கூடும்?" என உரைத்தான். இதைக் கேட்டு மகுதானி சிறுவனே நோக்கிப் புன்னகை செய்து, திருப்பதியின் பக்கம் திரும்பி, "என் அன்புச் சகோதரியே! அவர் போதித்ததை நீ மட்டும் கேட்டிருப்பாயேயாயின் அவரைக் கடவுள் என்று கூடச் சொல்லுவாய். நம் உறவினர்களாகிய சின்ன ஆச்சி கண் பார்வையற்றுக் குருடியாய் இருந்தாள்

அல்லவா? அவர்தான் அவளுக்குப் பார்வையளித்தார்! வியாதிக்காரரைக் குணப்படுத்துகிறூர். இறந்தோர்க்கு உயிர் கொடுக்கிறூர். எல்லார்க்குமே நித்திய வாழ்வின் மார்க்கத்தை தெளிவாகக் காட்டுகிறூர். இவ்வுலக வாழ்வு சொற்பக்காலம். மறு உலக வாழ்வோ நீடூழி காலம் என்று எண்பிக்கின்றூர். அவர் செய்யும் அற்புதங்களைப்பற்றி நான் சொல்லுவதை நம்ப உனக்கு ஐயமுண்டானுல், அரசனது படைத் தளகர்த்தன் சீத்தாராமனைக் கேட்டுப்பார். அவன் மனைவியையும் மகளையும் குணப்படுத்தியவர் அவரே. பின்னொருகால் சீத்தாராமனின் மகன் இறந்து போனுன். உடனே அவன் உறுதியான நம்பிக்கையுடன் அப்போஸ்தலரைக் கொண்டுவரச் சிறைச்சாலைக்குப் போனுன். பிரமாணிக்கத்தின் பேரில் காவற்காரர் அப்போஸ்தலரை வெளிவிட்டார்கள். வீட்டிற்கு அழைத்து வந்தான். அங்கு வந்ததும் சிறிது நேரம் செபஞ்செய்த பின்னர் குழந்தையின் கையைப் பிடித்துத் தூக்கினுர் அப்புனிதர். இறந்து போயிருந்த மைந்தன் மறுபடியும் உயிர்த்தான். இப்போது முழுசுகத்துடன் இருக்கின்றூன். அரசர் அவரை இப்பொழுது சிறையிலிருந்து வெளியிட்டிருப்பதால், தன்னைத் தேடி வருகிறவர்களுக்குச் சத்திய வேதத்தைப் போதிப்பதுமின்றி பிணியாளிகளையும் குணப்படுத்திக்கொண்டிருக்கிறூர்'' என்றுரைத்தாள்.

அரசி இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு, "அப்படியானுல் நாம் போய் அவரைப் பார்க்கலாம் அல்லவா?'' என்றூள். உடனே இருவரும் அப்போஸ்தலரைப் பார்க்கச் சீத்தாராமன் வீடு சென்றூர்கள். வாயிலில் ஒரு குஷ்டரோகி இருந்தான். அவனை உள்ளே விடாது தடுத்தார்கள் மக்கள். மகுதானியும் திருப்பதியுமே உள்ளே அனுப்பப்பட்டனர். அப்போஸ்தலர் அங்கு வந்துள்ள நோயாளிகளைக் கண்காணித்து, அவர்களைக் குணப்படுத்தி அவர்களுக்கு அன்புடன் ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார். இதைக் கண்ட திருப்பதி தன்னை அறியாமலே, "இத்தகைய மீட்பு அலுவலை நம்பாதவர்களைக் கடவுள் சபிப்பாராக!" என்று கூவினுள்.

மகுதானியோ அப்போஸ்தலரைப் பார்த்து, "சுவாமி, வாசலண்டை ஒரு குஷ்டரோகி வந்திருக்கின்ருன், அவனை உள்ளே வரவிடாது தடுக்கின்ருர்கள்" என்ருள். "மீட்பு அடைய விரும்புவோர் எவராயினும் அவரைத் தடுப்பது தருமம் அன்று. அவன் உடனே உள்ளே வரட்டும்" என்று பாவுல் சீத்தாராமனுக்கு உத்தரவிட்டார். அப்படியே குஷ்டரோகி கொண்டுவரப்பட்டான். அப்போஸ்தலர் அவன் தலையின்மீது தம் கையை வைத்து, "உம் திருக்குமாரன் இயேசுவின் பேரால் குருடர்களுக்குப் பார்வையும், செவிடர்களுக்குக் கேள்வியும், குஷ்டரோகிகளுக்கு ஆரோக்கியமும், இறந்தோர்க்கு உயிரும் அளிக்க வல்லமை கொடுத்த இறைவா, இந்த நோயாளியைக் குணப்படுத்த உம் வானதூதர்களில் ஒருவரை அனுப்பும். அப்போது தேவரீரே மெய்யான கடவுளென்றும், உம்மையன்றி வேறே கடவுள் இல்லையென்றும் இவர்கள் கண்டுபிடித்து, நீரே சர்வ வல்லவரென்று நம்பி, உம்மையே ஆராதிப்பார்கள். தேவரீரோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவருமாயிருக்கிற எங்கள் இரட்சகரான இயேசுவையும் ஆராதிப்பார்கள். இவ்வண்ணமே கிருபை செய்தருள்வீராக. ஆமென்" என்று செபித்தார். செபம் முடிந்தவுடனே ஒரு இளைஞன், கண்களைப் பறிக்கும் தோற்றத்தோடு கூட்டத்தினுள் தோன்றினுன். குஷ்டரோகியைக் கை தூக்கி எடுத்துச் சற்று விலகிச் சென்று, தன் கைகளால் அவனுடைய புண்களைத் தடவினுன். உடனே அக்குஷ்டரோகி ஆரோக்கியமடைந்தான். அவனை அப்போஸ்தலர்முன் கொண்டுவந்து நிறுத்திவிட்டு அவ்வாலிபன் மறைந்து போயினன். "மெய்யாகவே வானதூதர் வானுலகிலிருந்து நம் மத்தியில் வந்தார்" என்று எல்லாரும் கடவுளைப் போற்றித் துதித்தார்கள். தோமையார் குணமடைந்த மனிதனுடைய விருப்பப்படி அவனுக்கு ஞானுபதேசம் செய்த பின்னர் ஞானஸ்நானங் கொடுத்தார்.

இவைகளையெல்லாம் கண்கூடாகக் கவனித்துப் பார்த்திருந்த திருப்பதியோ தன்னை அடக்கமுடியாமலே தோமை

யாரை அணுகி அவர் பாதத்தில் தெண்டனிட்டு விழுந்து, "மெய்யான கடவுளின் அப்போஸ்தலரே! எனக்கும் நித்திய சீவியவழியைக் காட்டியருளும்" என்று மன்ருடினுள். சர்வேசுரனின் கருவூலம் சதா திறந்தேயிருக்கின்றது. அவரை நம்பினேர் ஏராளமாய் அதினின்று பங்கடையலாம். நீயும் அவரை நம்புவாயாகில் அவருடைய அருட்சாதனங்கள் உனக்கும் தாராளமாக வழங்கப்படும்'' என்ருர். "உமமுடைய தேவனைவிட வேறு தேவன் இல்லவேயில்லை. அவருடைய அடியாளாக என்னைத் தயைசெய்து தேவரீர் ஏற்றுக் கொள்ளும்'' என்று உருக்கமாக வேண்டிக்கொண்டாள். அப்போது அப்போஸ்தலர் அவளை ஆசீர்வதித்தார். சற்று மௌனமாயிருந்த பிற்பாடு, "மக்களே! இயேசு என்னை அழைக்கின்ருர். நான் அவர் திருச்சமுகம் அடையும் காலம் கிட்டிவிட்டது. ஆகையால் ஞானஸ்நான நீரையும் பரிசுத்த ஆவியின் வரங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்ருர் தோமையார். பின்னர், கடவுளைப் பிரமாணிக்கமாய்ச் சேவிக்கவும், திருச்சபையை நேசிக்கவும், குருக்களை மதிக்கவும், ஞாயிறுதோறும் பலிபூசை ஒப்புக்கொடுக்கவும், ஆண்டவருடைய அருள்வாக்கைக் கேட்கவும் வேண்டிய அவசியத்தைப்பற்றிப் போதித்து முடித்ததும், தகுதியுள்ளோராயிருந்தோருக்கு ஞானஸ்நானமும் உறுதிப் பூசுதலும் கொடுத்தார். அன்னேர் அனைவரும் தேவ ஆசீர்வாதம் பெற்றுத் தத்தம் இல்லங்களுக்கு ஏகினர்.

## இயேசுவின் ஊழியர் சிறையிடப்பட்டனர்

மகுதானியை மனந்திருப்புவதற்காகச் சென்ற மனைவி திருப்பதி வெற்றியுடன் திரும்பி வருவாளென்று ஆவலுடன் அரசன் அன்று முழுவதும் காத்தவண்ணம் இருந்தான். அவள் இல்லாததால் உணவும் அருந்தவில்லை திருப்பதியோ கடைசியாக மாலைப்போதில் அரண்மனை வந்து சேர்ந்தாள். காதலியைக் கண்டதும், "கண்ணே! நீ போய் எவ்வளவு நேரமாயிற்று. காலையிலிருந்து மாலைவரையில் மகுதானியோடு என்ன செய்துகொண்டிருந்தாய்?'' என்று

வினவினுன். அவள் அரசன் கிஞ்சித்தேனும் எதிர்பாராத மறுமொழி அளித்தாள்: "அரசே, மகுதானி புத்தி தடுமாறியிருந்தாள் என்றே எண்ணியிருந்தேன். ஆனல் உண்மையை பார்க்கும்போது அப்படியில்லே. அவளே மெய் ஞானம் உடையவளாய் இருக்கிருள். எனக்கும் நித்திய வாழ்வின் மார்க்கத்தைக் காட்டியுள்ளாள். மீட்பின் பாதையைக் காண்பிக்கும் அப்போஸ்தலரைக் காணும் பாக்கியம் பெற்றேன். என் அன்பரே! உமது வாழ்வும் அரசும் நிலேயற்றவை. அவரிடம் செல்லுங்கள்; என்றும் நிலேயான இன்பவாழ்வு பெறும் வழியைக் காட்டுவார்" என்ருள் அரசி. மஹாதேவன் இதைக்கேட்டு தன்னே மீறிய கோபங்கொண்டு அரசியை உடனே ஓர் இருட்டறையில் தள்ளிச் சிறைப் படுத்தினுன். உடல் துடிக்க வெறி கொண்டவன்போல் சீறிச் சினந்து கிருஷ்ணனே அழைப்பித்தான். "உன் மனேவியின் மனத்தை மாற்ற எண்ணினேன். ஆனல் என் மனேவியை இழந்தேன்" என்ருன் அரசன்.

கிருஷ்: என்ன நேர்ந்தது அண்ணலே?

அர: அந்த மாயக்காரப் பாதகன் அரசியையும் தனது மந்திரத்தால் மயக்கிவிட்டான். திருப்பதியும் மகுதானியைப்போலவே பேதையாகி விட்டாள். அம் மாந்திரீகனேயே நம்பி அவன் போதிப்பதையே விசுவசிக்கின்ருள்.

கிருஷ்: அரசே! அவனேச் சும்மாவிடலாகாது. உடனே தொலேப்பதே சரி.

அப்போஸ்தலரையும் தன் மைந்தன் விஜயனேயும் சிறையிலிடக் கட்டளேயிட்டான் அரசன். கிருஷ்ணனே தனது கோபத்தை அடக்க இயலாதவனுய், மகுதானி, அவளது வயோதிகத் தாதி நாரி ஆகிய இருவரையும் அரண்மனேக்குக் கொண்டுபோய் அரசியோடு சிறையில் வைத்தான். இளேஞனுகிய விஜயன் தேவ ஏவுதலுக்கு ஈடுபட்டவனுய் அப்போஸ்தலரை விடுதலேசெய்ய யோசனே செய்துகொண்டிருந்தான்.

அதற்குள் அப்போஸ்தலர் கைவிலங்கோடு அரசன்முன் கொண்டுவரப்படவே, அவரோடு விஜயனும் வந்துற்ருன். தோமையாரை நோக்கி, "எங்கள் மனைவிமார்களை இழக்கச் செய்கிற கடவுள் எத்தகையவர்? மகுதானியைப் போய்ப் பார்த்து நயமொழிகளால் அவளைப் பழையவழிக்குக் கொண்டு வரும்படி திருப்பதியை அனுப்பினேன். அந்தோ! அவளும் அந்தப் படுகுழியில் வீழ்ந்துவிட்டாள். இதெல்லாம் என்ன விந்தை? உடனே பதில்சொல். இல்லாவிடில் உன் உயிரை மாய்த்துவிடுவேன்" என்ருன் அரசன். அதற்குத் தோமையார், "கடவுள் நித்தியர். அவரது கற்பனையை மீறுகிறவர்கள் நித்திய தண்டனை அடைவார்கள். ஓ! அரசே! நீர் என் உடலைக் கொலை செய்யக்கூடும். ஆனல் என் ஆத்துமத்தை அசைக்க உம்மால் ஆகுமா? கடவுள் ஒருவரே உடலையும் ஆன்மாவையும் நித்திய நெருப்புக்கு இரையாக்க வல்லவர்'' என்று பதிலுரைத்தார்.

## தோமையாருக்கு இழைத்த வாதனைகள்

மேற்கண்டவாறு தோமையார் சொன்ன மறுமொழியைக் கேட்ட அரசன் கடுங்கோபங்கொண்டு, இரண்டு இருப்புத் தகடுகளைக் காய்ச்சி, அவற்றின்மேல் அப்போஸ்தலரை நிற்கச் செய்யும்படி கட்டளையிட்டான். சற்றுநேரத்துக்குள் செக்கச்சிவக்கக் காய்ச்சப்பட்ட இரு தகடுகள் கொண்டுவரப் பட்டன. தோமையாரைப் பிடித்து அவற்றின்மேல் நிற்கச் செய்தார்கள். அவருடைய பாதங்கள் அவற்றின்மேல் பட்டன. என்ன வியப்பு! தரையினின்று தண்ணீர் சுரந்து பொங்கி எழும்பியது. காய்ச்சிய தகடுகள் குளிர்ந்தன. தண்ணீரோ சுனைபோல் பொங்கி எழும்பிப் பெருகிக் கொண்டிருந்தது. சேவகர் தோமையாரை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். அரசவை மண்டபம் முழுதும் வெள்ளப் பெருக்காயிற்று. அரசன் திடுக்கிட்டுப் பயந்து, அப்போஸ் தலரைப்பார்த்து, "எங்களுக்கு ஆபத்து வரும் போலிருக் கின்றது. நாங்கள் அகால மரணத்துக்கு உள்ளாகாதபடி, உன் கடவுளைப் பிரார்த்திப்பாயாக. அவர் எங்களைக் காப்

பாற்றட்டும்'' என்று சொன்னான். உடனே தோமையார் தம் விழிகளை மேல்நோக்கி, "என் நேச இறைவா, ஐம் பெரும் பூதங்களில் ஒன்றாகிய தண்ணீரை அடக்கும். இந் நீர்ப் பெருக்கை நீக்கும். இம்மனிதரின் பயத்தைப் போக்கும். இவர்களில் சிலராவது உம்மை விசுவசிப்பதால் இரட்சிக்கப் படுவார்களாக'' என்று மன்றாடினார். மரியாதை யுடன் மௌனமாயிருந்தனர் எல்லாரும். தண்ணீரும் கொஞ்சங் கொஞ்சமாக வற்றிப்போகத் தரை உலர்ந்து காணப்பட்டது. இதைப் பார்த்தோர் வியப்படைந்தனர். தோமையார் அரசன் பக்கம் திரும்பி, "அண்ணலே! இப் போது கடவுள் இயற்றிய புதுமை என்னைக் காப்பாற்றும் பொருட்டல்ல. ஏனெனில், நான் அவருக்காக வாதனைப் பட மகிழ்ச்சியுடன் தயாராய் இருக்கிறேன். அதைச் சகிக்க வேண்டிய பலத்தையும் அவர் எனக்கு அளித்திருப்பார். ஆனால் இவ்வற்புதம் உமக்காகவே நடந்தது. நீர் கடவுளின் வல்லமையைக் கண்கூடாகக் கண்டு, அவரை நம்பி அவர் ஒருவரையே ஆராதிக்கும்படிக்கு இது நேர்ந்தது என்று அறிவீராக'' என்றார்.

இந் நிகழ்ச்சியைக் கண்ட அரசன் திகிலடைந்து திகைத்து நின்றான். கிருஷ்ணன் சற்றேனும் மனம் மாற வில்லை; அப்போஸ்தலரை அடியோடு தொலைத்துவிடவே அவன் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தான். குழப்பமடைந் திருந்த மஹாதேவனைத் தேற்றி, "அரசே! நாம் சிறு பிள்ளைக ளல்லர். பயப்படுவது நம் குலத்திற்கு ஏற்றதன்று. நம் தேவர்கள் நம்மைச் சோதிப்பார்கள். ஆதாலால் இம்மந்திர வாதியைச் சும்மா விடலாகாது. உடனே மரண வாதனை செய்தல் வேண்டும். இல்லாவிடில் நம்மையும் பாதாளத் தில் இழுத்துப் போடுவான்" என்றான். இவ்வார்த்தை களால் சிறிது தைரியம் பெற்ற அரசன், பெரும் நெருப்பு மூட்டி அதில் இவனைப்போட்டுச் சுட்டெரித்து விடுங்கள்'' என்றான். கிருஷ்ணனே வேறொரு யோசனை சொன்னான். "அரசே! அவனை நெருப்பில் இட்டால் திரும்பவும் தண்ணீர் சுரக்கச் செய்து, கொழுந்து விட்டெரியும் தீயையும் அணைத்து

விடுவான். அவன் நம் தேவதைக்குப் பலியிடட்டும். அப்போது அவன் நம்பும் கடவுள் அவன்மீது கோபங் கொண்டு அவனுக்குத் துணை செய்யமாட்டார்'' என்றான். இதைக்கேட்ட தோமையார் கிருஷ்ணனைப் பார்த்து நகைத்து ''நீ சொல்வது சரி! நீ வணங்கும் தேவர்களுக்கு நான் பலியிடுவேனானால், நான் வணங்கும் மெய்யங் கடவுள் என்னைக் கை விட்டு விடுவார் அது உண்மையே!'' என்று சொன்னார். அரசன் கிருஷ்ணன் சொல்லியதற்கிணங்கி, "சரி! சரி! அவன் கட்டாயம் காளிதேவிக்கே பலியிட்டுத் தீரவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

## பேயை அடக்குகிறார்

காளி கோவிலில் பெரும் கூட்டம். தோமையார் வரவை எதிர்பார்த்திருந்தனர். அரச அரண்மனையின் முன் மேள வாத்தியங்கள் முழங்கின. பல விருதுகள் வந்திருந்தன. நடனமாடுவோர் பேய் ஆவேசம் கொண்டவர்போல் ஆடினர். அரண்மனை அதிகாரிகள், சேவகர்கள் பலர் சூழத் தோமையார் காளி பீடத்திற்குக் கொண்டுவரப்பட்டார். அரசனும் உடன் வந்தான். காளி கோவிலை அடைந்தனர். கூடியிருந்த மக்கள் பரபரப்புடன் பார்த்தார்கள். அப்போஸ்தலரோ அமைதியுடன் படியில் ஏறிச் சிலையண்டை சென்றார். பலியிடப் போகிறார் என்று எல்லாரும் கெக்கலி கொட்டிக் கூச்சலிட்டுப் பெரும் ஆரவாரம் செய்தனர். அவரோ சிலையைப் பார்த்து, "நான் சொல்வதைக் கேள். இந்த மக்களில் எவரையும் தொல்லைப்படுத்தக் கூடாது. இயேசுவின் பேரால் இக்கட்டளையைக் கொடுக்கிறேன்" என்றார். கூடியிருந்த மக்கள் அப்போஸ்தலர் பேசிய சத்தத்தைக் கேட்டார்களே தவிர யாருடன் என்ன பேசினார் என்பது அவர்களுக்கு மறைபொருளாயிருந்தது. ஏனெனில் அவர் எபிரேய மொழியில் பேசினார். பக்கத்தில் நின்ற அரசன், "ஏ! என்முன் என்ன பிதற்றுகிறாய்? உனக்கென்ன துணிவு! உடனே காளி தேவதைக்குப் பலியிடு. இல்லையேல் உனக்குக் கிடைப்பது சாவுதான்" என்று சினந்து கூறினான். சற்றேனும் கலவரப்படாத அப்போஸ்தலர், "நானும்

ஒருவரை வணங்குகிறேன். நான் தொழுகிறவர் மெய்யங் கடவுள். இயேசு தேவன், நம் ஆண்டவர்". பின் சிலையை நோக்கி, இங்கு நிற்கும் மக்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாது நீயே அழிந்துபோ'' எனக் கட்டளையிட்டார். அவர் பேசி முடியுமுன்னரே சிலையானது நெருப்பில் இட்ட மெழுகுபோல் உருகித் தரையில் வழிந்தோடியது. இந்தக் காட்சியைக் கண்ணுற்றதும் அரசனும் கிருஷ்ணனும் பெரிதும் அவமானமடைந்து அரண்மனையை நோக்கி ஓடினர். அப்போது பெருத்த அமளி உண்டாயிற்று. கூடியிருந்த மக்களுள் பெரும்பாலோர் தோமையார் மட்டில் அன்பு கொண்டனர்.

அவருடைய எதிரிகள் அப்போஸ்தலரை எப்படியாவது தொலைத்துவிட வழிதேடினர். முந்தமுந்தக் குறிகாரனிடம் போய், தங்கள் எண்ணத்தை நிறைவேற்றத் தகுந்த வழி என்னவென்று வினவினர். அதற்கு அவன், "ஒரு நரபலி கொடுக்கவேண்டும். அதற்காக உயர்குலத்துச் சிசுவின் இரத்தம் சிலைமுன் சிந்தப்பட வேண்டும்'' என்ருன். இதைக் கேட்டதும் அரச அரண்மனைக்குரு தன் சொந்தக் குழந்தையையே கொன்று பலியிட்டான். இவ்வண்ணம் செய்துவிட்டு அரசனிடம் விரைந்தோடி அப்போஸ்தலரே குழந்தையைக் கொன்ருர் என்று அவர்மீது பழி சாட்டினுன். அரசன் அதிக ஆவேசம் கொண்டு, உடனே அப்போஸ்தலரைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர் வந்ததும், "ஏ! என்ன செய்தனை? உன் குற்றம் என்னவென்று கேட்டனையா? படுபாவி! பச்சைக் குழந்தையைப் படுகொலை செய்தாயே! பழி பாவத்திற்கு அஞ்சாத பாதகா! இந்தக் குற்றத்துக்கு என்ன பதில் சொல்லப் போகிருய்?" என்ருன் அரசன். தோமையாரோ அமைதியுடன், "அண்ணலே! தயவுசெய்து மரித்த குழந்தையின் பிணத்தை இங்குக் கொண்டுவரும்படி கட்டளையிடுவீராக'' என்று கேட்டார். அப்படியே குழந்தையின் பிணம் கொண்டுவரப்பட்டது. எல்லாரும் என்ன நேரிடப் போகிறதென்று பார்க்க ஆவலோடு காத்திருந்தனர். அப்

போஸ்தலர் மரித்த சிசுவின் அருகில் போய் நின்று அதன் கையைப் பற்றி, "குழந்தாய்! உன்னைப் படைத்த இயேசுவின் பெயரால் எழுந்திரு. அரசன்முன் உன்னைக் கொன்றது யார் என்று கூறுவாயாக" என்று மொழிந்தார். ஆச்சரியம்! உடனே குழந்தை உயிர்பெற்று எழுந்து அரசனைப் பார்த்தது, பின்னும் வாய் திறந்து, "என் உயிரைப் போக்கினவர் என் தந்தையே!" என்றது. எல்லாரும் திகைத்தார்கள். தன் குழந்தையைத் தானே கொன்று அப்போஸ்தலர்மீது அபாண்டமான பழி சுமத்தியவன் மீது மக்கள் வெறுப்புக் கொண்டனர்; அவனைப் பழிகாரனெனத் தூற்றினர்! அப்போஸ்தலரைப் போற்றினர்.

அரசனோ அச்சம் கொண்டவனாய், "அந்த மாந்திரிகனைச் சிறையில் இடுங்கள்; அவனை என்ன செய்வதென்று முடிவு செய்கிறேன்" என்று கூறி அவ்விடத்தைவிட்டு எழுந்து சென்றான்.

## தோமையார் மீண்டும் சிறையில்

அப்போஸ்தலரைச் சிறைக்கூடம் கொண்டு போகையில் அவரைப் பின்பற்றி விஜயனும், பாவுல் சீத்தாராமனும் போனார்கள். அவரோடு அங்கேயே தங்கினர். அவரது திருவடிக்கு அருகில் உட்கார்ந்து அவரது போதனைகளைக் கேட்டு இன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தனர். அவர் போதனைகளைக் கேட்டு தோமையாரை அரசன் விரைவில் கொன்றுவிடக் கூடுமென்னும் எண்ணம் அவரை விட்டுப் பிரியாதிருக்க இவ்விருவரையும் தூண்டிற்று. அவரும் இவர்களுக்கும் அங்கு வந்துற்ற பிறருக்கும் ஞானோபதேசம் சலியாது தெளிவாக உரைத்து வந்தார்.

ஒருநாள் பெருந்திரளான கிறிஸ்தவர்கள், காவற்காரர்களை வசப்படுத்திக்கொண்டு சிறைச்சாலையின் உள்ளே அப்போஸ்தலரிடம் வந்தார்கள். அவர்களை மனம் உவந்து ஆசீர்வதித்து, "மக்களே! நான் போதிக்கும் கடவுளையே விசுவசியுங்கள். நான் உங்களுக்குத் தெரியப்படுத்திய

இயேசுவையே நம்பியிருங்கள். அண்டினோரை ஆதரிப்பவரும், சேவிப்போரைக் காப்பவரும், கவலைப்படுவோருக்கு ஆறுதலும், துன்பப்படுவோருக்குத் தேறுதலும் அவரே. அவரையன்றி எவரும் மீட்பு அளிக்க முடியாது. அவரே உண்மை, அவரே வானக வீட்டின் வழி. அவரே அனைவருக்கும் ஒரே அடைக்கலம். ஆதலால் அவரையே விசுவசித்து நம்பி வழிபடுங்கள் ஆராதியுங்கள். நான் அவரை அக்களிப்புடன் வணங்குகிறேன். ஏனெனில் அவரிடம் போக எனக்கு மட்டற்ற ஆவல். நான் போகும் காலமும் நெருங்கி வருகிறது" என்று உரைத்தார்.

அதற்குப்பின் தம் கண்களை வானத்திற்கு உயர்த்தி' "என் தேவனே! என் ஆண்டவரே! என் ஏக நம்பிக்கையே! உமது திருவுளப்படி ஆகக்கடவது. என் கடைசிக் காலம் வரையில் என்னுடன் இருப்பீராக இந்நாட்டில் திராட்சைக் கொடியை நாட்டினேன். அது ஆழ்ந்து வேரூன்றி, கிளைகள் பல பக்கமும் விட்டு ஓங்கி வளர்ந்து, ஏராளமான கனிகள் கொடுப்பதாக! இந்த மக்கள் உம்மிடம் வரத் தகுதியுள்ளவர்களாகட்டும். கிறிஸ்துவான தேவனே! நான் தேடிய இவர்களுடைய ஆத்துமங்கள் தேவரீருக்கு விருப்பம் உடையவையாய் இருக்கட்டும் உம் கற்பனைகளை நிறைவேற்றினேன். உமது திருவுளப்படி இதுவரை நான் பின்வாங்கவில்லை. ஆகையால் வெற்றியின் முடியைத் தேவரீர் எனக்கு அளித்தருள்வீராக!" என்று உருக்கத்துடன் செபித்தார்.

அப்போஸ்தலரது முடிவு நெருங்கிவிட்டது என்று அரசகுமாரன் விஜயன் அறிந்ததும், அவரைப் பார்த்து, "சுவாமி! கிறிஸ்துவின் அப்போஸ்தலரே! நான் மெய்யான சர்வேசுரனின் பிள்ளையாகும்படி எனக்கு ஞானஸ்நானம் கொடுத்தருளும். எனக்கு இன்று இருபத்தோராவது வயது நிறைவாயிற்று. நான் திருமணம் செய்து ஐந்து ஆண்டுகளாகின்றன. இதுவரையில் குழந்தைகளில்லை. என் மனைவி மீனாட்சி நோயாளி; திமிர்வாதத்தால் வாதனைப்படுகிறாள். அவளுக்கு நடக்க முடிந்தால் தேவரீரைக் கண்டு உம் வார்த்தைகளைக் கேட்டு விசுவசிப்பாள். இங்கு உமது திரு

வடியிலே விழுந்து கிடப்பாள். உண்மையாகவே இரட்சணிய வழியைப் பின்பற்றுவாள், ஆனால் அவள் இங்கு வர முடியாத நிலையில் இருக்கிறாள். ஆகையால், தயவுகூர்ந்து எனது இல்லத்திற்கு எழுந்தருள்வீராக! என் நிர்ப்பாக்கிய மனைவியின்பேரில் இரங்கி அவளுக்கு ஆறுதல் அளியும். அவள் சரீர குணம் அடையாவிடினும் ஆத்தும நலமாவது அடைவாள் என்பது திண்ணம். ஆகவே, எனது இல்லத்திற்கு எழுந்தருளும் சுவாமி!" என்று கெஞ்சி மன்றாடினான். "என் மகனே! உன்னிடம் உயிருள்ள விசுவாசம் இருப்பின், கடவுளின் அற்புதச் செயல்களைக் கண்கூடாகப் பார்ப்பாய். தம் அடியார்களை அவர் கைவிடார். அவர்கள்மேல் இரங்குவார்" என்றுரைத்தார் தோமையார்.

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கையில் சிறைக்கூட வாசலுக்குச் சிலர் வந்தனர். திருப்பதி, மகுதானி நாரி ஆகிய மூவருமே அவர்கள். காவற்காரருக்குக் கைக்கூலி கொடுக்கவே வாசற்கதவுகள் திறக்கப்பட்டன. உட்சென்று, விஜயன், பாவுல் சீத்தாராமன், அவன் மனைவி, மகளோடு சேர்ந்து அப்போஸ்தலரின் போதனைகளைச் செவிமடுத்துக் கேட்டனர். "அரசன் மறியலில் வைத்திருந்த அறையினின்று உங்களை வெளிப்படுத்தினது யார்? பின்னும் இங்கு வரக் கதவைத் திறந்தது யார்." என்று வினவினார் தோமையார். "சுவாமி! தேவரீர் தாமே எங்களை வெளிப்படுத்தி, உம்மோடுகூட வரக் கற்பித்தீர். உம்மைப் பின்பற்றினோம். சிறைச்சாலைக்கு வந்ததும் எங்களை விட்டுவிட்டு உள்ளே புகுந்து விட்டீர். அதற்குப்பின் காவற்காரருக்குப் பணம் கொடுத்து நாங்கள் உள்ளே வந்தோம். இதோ உம்முன் நிற்கின்றோம். சுவாமி! ஒரு வேண்டுகோள். அரசனின் கோபம் தணியும்வரை தேவரீரை வேறிடத்தில் ஒளித்துவைக்க எண்ணியிருக்கின்றோம். தேவரீர் அதற்கு இணங்கவேண்டும்" என்று திருப்பதி எல்லார் பேராலும் கேட்டாள். அதற்குத் தோமையார், "மகளே! அதைப்பற்றிப் பிறகு பார்க்கலாம். இப்போது நீ அடைபட்ட விவரத்தைக் கூறு" என்றார். அரசி பின்வருமாறு விவரித்தாள். "சுவாமி! தேவரீர் எங்களை விட்டுப்

போய் ஒருமணி நேரத்திற்குப்பின் அரசர் நான் இருக்குமிடம் வந்தார். சினந்தார்; சீறிவிழுந்தார். 'காதலி! அம் மாந்திரீகன் உன்னை மருந்திட்டுப் பிடிக்கவில்லையென்று எண்ணுகிறேன். ஏனெனில், நான் கேள்விப்படுகிறது உண்மையாயின், ஏதோ தண்ணீரும் எண்ணெயும் அப்பமும் இரசமும் கொடுத்து மயக்குகிறுனும். ஆனால் உனக்கு இதுவரை அவன் அப்படிச் செய்யவில்லை என்றும், நீ இன்னும் அவன் மாயவலையில் சிக்கவில்லை என்றும் நம்புகிறேன். ஆதலால் வெள்ளம் வருமுன் அணைகட்டுவது அவசியம். உன் பேதமையை விட்டுவிடு. நான் உன்னை வாதிக்கமாட்டேன். முன்போலவே நேசிப்பேன்' என்ருர். நான் அதற்கு, "அரசே! என் சரீரத்திற்குத் தீங்கிழைக்க உம்மால் முடியும். ஆனல் என் ஆத்துமத்தை அபகரிப்பதோ இயலாத காரியம். உமக்காக அந்த விலைமதிக்கப்படாத மாணிக்கத்தை இழக்கமாட்டேன்'' என்றேன். இதைக் கேட்ட மன்னன் மனங்கலங்கிக் கோபாவேசத்துடன் மறுவார்த்தை பேசாது, என்னை இருட்டறையில் பூட்டிவைத்தார். என் தமையன் கிருஷ்ணனின் மனைவி மகுதானியையும், நாரியையும் அங்குக் கொண்டுவந்துவிட்டார். எங்கள் ஒவ்வொருவர் இருதயமும் துடித்தது. ஆனல் நாங்கள் பயப்படவில்லை. தேவ ஒளி ஒளிர்ந்துகொண்டே இருந்தது. தேவரீரும் எங்களை மறக்கவில்லை. எங்கள் மத்தியில் தோன்றினீர். எங்களை இங்கு அழைத்துவந்தீர். சுவாமி! இதோ உமது சமூகத்துக்கு வந்துவிட்டோம்'' என்பதே. தோமையார் சற்றே மௌனமாயிருந்து, "இயேசுவே! உமக்கு என்றென்றும் துதியும் தோத்திரமும் உண்டாவதாக" என்று கடவுளைப் போற்றினர்,

அவர் பேசிக்கொண்டிருக்கையில் காவற்காரன் உள்ளே வந்து, ''இங்கிருக்கும் விளக்கை அவித்துவிடப் போகிறேம். இல்லையேல் உங்களை யாராகிலும் பார்த்து நாங்களே விட்டோமென்று அரசனுக்கு அறிவித்துவிடுவார்கள். அது எங்களுக்குக் கேடாய் முடியும்" என்று விளக்கை அவித்து விட்டுச் சென்றனன். தோமையார் அவர்கள் போனபின்,

"ஆண்டவரே! எங்களுக்கு வெளிச்சம் கொடும். இருளின் மக்கள் எங்களை அந்தகாரத்தில் விட்டு அகன்றனர். உம் அடியார்களுக்கு நித்திய ஒளியைக் கொடும். அதை எவரும் அவிக்கவும் முடியாது, எடுத்துப் போகவும் இயலாது!" என்று வேண்டினர். உடனே பகலைப்போல் சிறைக் கூடத்தில் ஒளி உண்டாயிற்று. அவர்கள் எல்லாரும் ஏகோபித்து இறைவனுக்குத் தோத்திரம் செய்தார்கள். காவற்காரரோ கிடுகிடுத்து அயர்ந்து ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

## விஜயன் வீட்டுச் செய்தி

தோமையார்: விஜயா! திருப்பலி பூசைக்கு வேண்டியவை என்னவென்று உனக்குத் தெரியும் அல்லவா? உடனே வீடு சென்று அவை யாவும் ஆயத்தம் செய்வாயாக.

விஜயன்: சுவாமி! இப்போது நடு இரவு. மேலும் கதவுகள் பூட்டப்பட்டுள்ளன. காவற்காரர் உறங்குகின்றனர். இங்கிருந்து வெளியே செல்வது எப்படி?

தோமை: நீ புறப்படு. கதவுகள் திறக்கப்படும். ஒன்றுக்கும் அஞ்சாதே.

அப்போஸ்தலர் சொல்லியபடி செய்தான். எல்லாம் வசதியாயிருந்தது. வெளிவந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டான் அந்நடுநிசியில் ஓர் இளம் பெண் அவனுக்கு எதிர்ப்பட்டாள். பார்த்துப் பயந்தான். சற்று நின்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு உற்று நோக்கினன். அவனுக்கு ஒரே திகைப்பு! அங்குத் தோன்றினவள் அவன் மனைவி மீனுட்சியே. "அன்பரே, எங்குச் செல்கின்றீர் இந் நேரத்தில்?" என்ருள்.

விஜ: "கண்ணே! மீனுட்சி! இதென்ன காட்சி! இது கனவோ நினைவோ? படுக்கையை விட்டு எழச் சக்தியற்றிருந்த நீ இங்கு நிற்பது எப்படி? எங்குச் செல்கின்ருய்? உனக்கு இம்மாற்றம் நேரிட்டது எவ்வாறு?

மீனு: அன்பரே! (யாரையோ சுட்டிக்காட்டி) இந்த இளைஞரைக் கடவுள் அனுப்பினர். அவர் என் நெற்றியைத் தொடவே முழுவதும் குணம் அடைந்தேன். இவர் அப்போஸ்தலரைக் காணும்படி எனக்குக் கூறினர் ஆகவே அவரிடம் செல்லப் புறப்பட்டேன்.

விஜ: உனக்கு உதவி செய்த உத்தமர் எங்கே? அவரை அணுகி அவருக்கு நன்றிசெலுத்த வேண்டாமா?

மீனு: என்ன? இதோ என் கையைப் பிடித்துக்கொண்டு நிற்கிருரே உமக்குத் தெரியவில்லையா? எனக்கு இன்னும் சற்று பலவீனமாயிருப்பதால் அவர் எனக்குத் துணையாக என்னைத் தாங்கி அழைத்துக்கொண்டு வருகிருர்.

இவர்கள் இவ்வாறு உரையாடிக்கொண்டு நிற்கையில் தோமையார் அங்குத் தோன்றினர். அவர் பின்னல் பாவுல் சீத்தாராமன், அவன் மனைவி, மகள், அரசி திருப்பதி, மகுதானி, நாரி ஆகிய ஐவரும் வந்தனர். மீனுட்சி அப்போஸ்தலரைக் கண்டதும் தெண்டனிட்டு விழுந்து "சுவாமி! என் பலவீனத்தை முன்னிட்டு எனக்குத் தொந்தரவு ஏற்படக் கூடாதென்று என்னைத் தேடி வருகிறீர்போலும். எவ்வளவு தயவு சுவாமி!'' என்று மனம் உவந்து நன்றி கூறினுள். பின்னர் நான்கு திக்குகளிலும் பார்த்துவிட்டு, "ஐயோ! தேவனின் தூதர் போய்விட்டாரே! நான் எப்படி நடப்பேன்" என்று திகைப்புடன் கூறினுள். ''பயப்படாதே மகளே! இயேசுகிறிஸ்து உனக்குப் பக்கத் துணையும் பாது காவலுமாய் இருப்பார்'' என்ருர் அப்போஸ்தலர். அவர் அவ்வாறு சொல்லி முடியுமுன் மீனுட்சி மான்குட்டியெனத் துள்ளி ஓடினுள். வீட்டுக்குச் சென்று அப்போஸ்தலரை வரவேற்க வாசற்படியண்டை தயாராய் நின்ருள். தோமையார் தன் வீட்டிற்கு வந்ததும் அளவற்ற மகிழ்வுடன் வரவேற்ருள்.

வீட்டினுள் சென்றதும் எல்லாரையும் பக்கத்தில் அழைத்துக் கண்களை மேலேஉயர்த்தி, "ஆண்டவரே! நீரே பலவீன

ருக்கு ஊன்றுகோல்; திக்கற்றவர்களுக்குத் துணை; துயர் உற்றோருக்குத் தேறுதல். தேவரீரை வணங்கித் துதிக்கின்றோம் உம் அடியார்களாக விரும்பும் விஜயன், மீனாட்சி, திருப்பதி ஆகிய இவர்களைக் காப்பாற்றும். உமது மந்தையில் சேர்ந்தபின் இவர்கள் உம்மையே நேசிப்பவர்களாய் இருக்கட்டும். இவர்கள் தவறிப்போகாவண்ணம் பார்த்துக் கொள்ளும். இவர்கள் ஒருபோதும் முன்வைத்த காலைப் பின் வையாது இருக்கக்கடவார்கள். எப்போதும் விசுவாசத்தில் நிலைத்திருக்க இவர்களுக்கு உமது அருளைப் பொழியும்" என்று செபித்தார்

பின்னர் விஜயனுக்கும், மீனாட்சிக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார் விஜயனுக்கு அருளப்பன் என்று பெயர் சூட்டினார். திருப்பலி பூசை ஆரம்பமானது. புதுக் கிறிஸ்தவர்களுக்குப் புது நன்மை அளித்தார். பூசை முடிந்ததும் எல்லாரையும் தமது அருகே அழைத்து, "மக்களே! என் கடைசி வார்த்தைகளைக் கேளுங்கள். நான் சீக்கிரம் உங்களை விட்டுப் பிரிந்துபோவேன். என் வாழ்வு முடிவிற்கு வருகின்றது. நான் வணங்கி வந்த இயேசு தேவன் என்னை அழைக்கின்றார். இறைவன் தம் அடிமையாகிய என்மூலமாகச் செய்த அற்புதங்களைக் கண்கூடாகக் கண்டீர்கள். அதனால் விசுவாசம் உங்களிடம் ஊன்றி வளர்ந்தது. சமயம் வரும்; அப்போது மனிதர் கையில் அகப்பட்டு ஒன்றும் செய்ய இயலாதவன் போலிருப்பேன். என்னை வாதிப்பார்கள், கொலை செய்வார்கள். அதனால் நீங்கள் அஞ்ச வேண்டாம். உங்களுடைய விசுவாசம் தத்தளியாது இருக்கட்டும். நான் பாடுபடுவதே தேவதிருவுளம். அதன்படி நடப்பதே என் விருப்பம். அவர் விருப்பப்படி நடப்பதே நான் பெற்ற பேறு" என்று உருக்கத்துடன் உரைத்தபின் அவர்களுக்குத் தனது மனம் நிறைந்த ஆசியை அளித்துச் சிறைக்கூடம் திரும்பினார். பெண்கள் அரசனது அரண்மனையில் உள்ள தங்கள் இடத்துக்குச் சென்றனர். மஹாதேவன் அப்போஸ்தலரைச் சாவுக்கு உள்ளாக்கப்போகும் செய்தி அவர்கள் மனத்தை வாட்டி வதைக்கலாயிற்று.

## சாவுக்குத் தீர்ப்பு

காவற்காரர் மஹாதேவனிடம் வந்து, "அரசே, இந்த மாந்திரிகனைக் காவல் செய்ய எங்களால் இயலாது. வேறு எந்த இடத்திற்காகிலும் அனுப்பிவிடும். தன் மந்திர பலத்தினால் தான் நினைக்கிறதுபோல் வெளியே போகிறதும், உள்ளே வருகிறதுமாய் இருக்கின்றான் நாங்கள் பூட்டி வைத்த கதவுகள் தாமாகவே திறக்கின்றன. எங்களை அறியாமலே பலர் உள்ளே நுழைகின்றனர். அரசியும் மகு தானியும்கூட அங்கே போகிறார்கள். எங்களால் இனி காவல் செய்ய முடியாது" என்று முறையிட்டார்கள். அரசன் திவானை அழைத்து, "அவர்கள் சொல்வதைக் கேட்டனையா மந்திரி!" என்றான். அதற்கு மந்திரி, "அண்ணலே! அவர்கள் சொல்வதை நான் நம்பவில்லை. ஏனெனில், இவர்கள் சொல்வதைப்பற்றி ஒருதரம் கேள்விப்பட்டதும், நானே சென்று, கதவுகளை அடைத்து முத்திரையிட்டு வந்தேன். அவை சற்றேனும் உடைபடாது அப்படியே இருக்கின்றன!" என்று பதிலுரைத்தான். மந்திரியை நம்பிய அரசன், காவற்காரர்களைக் கோபித்து, "நீங்கள் சொல்வது சுத்தப் பொய். தைரியமற்ற கோழைகள் நீங்கள்" என்றான். ஆனால் தாங்கள் சொல்வது முற்றிலும் உண்மை என்று காவற்காரர்கள் அறிந்திருந்தபோதிலும் அரசனை எதிர்த்துப் பேசுவது எப்படி என்று அஞ்சி வாளா இருந்து விட்டார்கள். அடுத்த நாள் அரசன் கொலு மண்டபம் அடைந்து சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். மந்திரி பிரதானிகள் முதலிய பரிவாரங்கள் தத்தம் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். அப்போஸ்தலர் கொண்டுவரப்பட்டார்.

அரசன்: நீ என் நாட்டிற்கு வந்த காரணமென்ன?

தோமை: மானிடருக்கு மீட்பின் வழியைக் காட்டவே இங்கு வந்தேன். மெய்யான கடவுளை எல்லாருக்கும் கற்பிக்கவே உமது நாட்டிற்கு வந்துள்ளேன்.

அர: நீ சொல்லும் மெய்யான கடவுள் யார்?

தோமை: பரலோக பூலோகங்களைப் படைத்தவரே உண்மையான கடவுள். அவரே என் தேவன்; அவரே உம் தேவனுமாம்.

இதைக் கேட்டுக் கண்டுபிடியாதவன்போல் இருந்தான். அவரைக் கொன்றுவிட அவன் முடிவு செய்துவிட்டான். ஆனால் அவர்மட்டில் இரக்கமுள்ள மக்கள் பெரும்பாலோர் இருந்தமையால் சற்று அஞ்சினான். அவ்விடத்தில் தீர்ப்பு சொல்லத் தயங்கினான். அவரை ஊருக்கு வெளியே கொண்டுபோகும்படி ஆணையிட்டான். எனவே அவரை அழைத்துப்போனார்கள். அரசனும் தனது பரிவாரத்துடன் பின் சென்றான். மக்கள் இல்லாத ஓர் இடத்தில் அவரை நிறுத்தி, மரணத் தீர்வையிட்டான். மலையின் உச்சியில் கொண்டுபோய் ஈட்டியால் குத்தி உயிரை மாய்த்துவிடக் கட்டளையிட்டான்.

## வேதசாட்சி முடி

சேவகர் அவரைக் கொலைக்களத்திற்குக் கூட்டிச் சென்றனர். விஜயனும் சீத்தாராமனும் கூடப்போயினர். வழியில் சின்னமலை ஒன்றிருந்தது. அதில் ஒரு குகை இருந்தது. அங்கு அப்போஸ்தலர் சென்று தியானம் செய்வது வழக்கம் கடைசியாக ஒருமுறை அங்குச் சென்று கடவுளைத் தியானிக்க விரும்பித் தோமையார் தன் விருப்பத்தை வெளியிட்டார். சேவகர் உத்தரவு அளித்தனர். ஆகவே குகைக்குள் சென்று செபித்தபின், சென்ற வழியே திரும்பாது சிறு துவாரத்தின் வழியே அற்புதமாக வெளியே வந்தார் சேவகர் பின்பற்றினர். அங்கிருந்து பெரியமலைக்கு வந்தனர். அதுவே குறிக்கப்பட்ட கொலைக்களம். அந்த இடமும் அப்போஸ்தலருக்குப் புதிதல்ல. அதற்குமுன் பலமுறை அங்குச் சென்று திருப்பலி நிறைவேற்றியுள்ளார். அதற்காக ஒரு பெருங் கல்லில் திருச்சிலுவை தீட்டி அதை அங்கு நாட்டியிருந்தார் அங்குச் சென்றதும், விஜயன் சேவகர் தலைவன் கையில் சிலநாணயங்கள் வைத்து, மாலைவரையில் அவர்கள் வேலையைத் தாமதிக்க வேண்டினான், அதற்குச் சம்மதித்தான் சேவகர்தலைவனும்.

தோமையார் விஜயனையும் பாவுலையும் தனியே கொண்டு போய்ச் சிலுவை செதுக்கப்பட்டுள்ள கல்முன் தூடைசித் தடவை திருப்பலி நிறைவேற்றினர். பாவுல் சீத்தாராமனை மறை ஆயராகவும், விஜயனை டீக்கனாகவும் திருநிலைப் படுத்தினர். நாள் முழுதும் செபத்திலிருந்தனர். கதிரவன் மறையும்போது அப்போஸ்தலரின் ஆவி ஆண்டவர் திருவடி செல்லத் தயாராய் இருந்தது. தோமையார் சேவகரிடம் போய், "உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆணை யின்படி உங்களது வேலையை நடத்தலாம்" என்று சொல்லி விட்டுச் சிலுவையின்முன் முழந்தாட்படியிட்டார்: தம் உயிரைக் கர்த்தருக்குக் காணிக்கையாக்கிச் செபித்த வண்ணம் இருந்தார். சேவகர்கள் ஈட்டியால் குத்தினர்கள். அப்போது அவர் உடல் சிலுவைக்கல்லின்மேல் விழ, அது அப்போஸ்தலரது இரத்தத்தால் நனைந்து போயிற்று. சேவகர் அவரது உடலை அங்கேயே விட்டுவிட்டுப் போயினர். டீக்கன் விஜயனும், பாவுல் மறை ஆயரும் அருகில்போய் அவர் குற்றுயிராயிருக்கக் கண்டனர். தோமையார் முன்னொருமுறை கைவிட்டுப் பார்த்த இயேசு வின் திருவிலாக் காயம் இருந்த இடத்திலேயே அவருக்கும ஓர் ஈட்டி பாய்ந்திருந்தது. அதை உருவி எடுத்தனர். இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. உடனே விஜயன் அவரைத் தனது வீட்டுக்குக் கொண்டுபோய் மருந்து கொடுத்துக் குணப்படுத்தப் பாவுல் ஆயரைக் கேட்டான். அதை அறிந்த அப்போஸ்தலர் ஈட்டியின் காயங்களால் கொடூர வாதைப்பட்டு, இறக்கும் நிலையில் இருந்தாலும், மெல்ல வாய்திறந்து, "மருந்தால் பலனில்லை. கிறிஸ்து என்னை அழைக்கின்றார்'' என்றார்.

இத்துயரச் செய்தி பட்டணத்திற்கு எட்டவே அப்போஸ் தலரால் ஞானதீட்சை பெற்றவர்களும், ஞானோபதேசம் ஊட்டப்பட்டவர்களும், அவருடைய அரியபுண்ணியங்களையும் அற்புதங்களையும் பார்த்தவர்களும் கேட்டவர்களுமாகிய திரளான மக்கள் பெரியமலைக்கு வந்து கூடினர். அவர்கள் எல்லாருக்கும், தமது மெல்லிய குரலால் விசுவாசத்தில்

திடஞயிருக்கும்படி அறிவுரை கூறி முடித்தவுடன். அவரது ஆத்துமம் இறைவனடி சேர்ந்தது.

## உடல் அடக்கம்

கூடியிருந்த திரளான மக்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்கத் தோமையாரின் உடல் மயிலாப்பூருக்குக் கொண்டு போக உத்திரவு அளிக்கப்பட்டது. அப்போஸ்தலரது இரத்தம் படிந்த தரையின் மீதிருந்த மண்ணை வாரி எடுத்து, ஒரு பாத்திரத்தில் பக்தியுடன் அடக்கி, மயிலாப்பூருக்குக் கொண்டுபோனர்கள். அங்கிருந்த கிறிஸ்துவர்களும் பிறரும் துயரத்துடன் சடலத்தின் வரவை எதிர்பார்த்திருந் தனர். வந்ததும் செப ஆராதனைகள் கோவிலினுள் நடந்தன. அதன்பின் அப்போஸ்தலரின் திரு உடலை அடக்கம் செய்தார்கள். அத்துடன் பெரிய மலையினின்று எடுத்து வந்த இரத்தம்படிந்த மண் இருந்த பாத்திரத்தை யும் புதைத்துவிட்டனர்.

ஊர்முழுவதும் பெரும் துக்கமாயிருந்தது. அப்போஸ் தலருக்கு அளிக்கப்பட்ட அநியாயமான தீர்ப்பையும், அவர் பட்ட கொடூர வேதனைகளையும், மரணத்தையும்பற்றியே எங்கும் பேச்சும் அழுகையுமாயிருந்தது. இப்படுகொலையை எண்ணி மக்கள் பெருந்துயரத்திலாழ்ந்தனர். அல்லும் பக லும் அப்போஸ்தலர் கல்லறைக்கு மக்கள் திரள்திரளாகச் சென்று தரிசித்தவண்ணமாயிருந்தனர். உயிருடன் இருக்கையில் எல்லாருக்கும் உதவிய உத்தமர் மரித்தபின் னர் நோயாளிகளை மறக்கவில்லை. அவரது கல்லறையைத் தரிசிக்கப்போன பல நோயாளிகள் குணப்பட்டனர். சிலர் ஆத்தும இருளிலிருந்து நீங்கிச் சத்திய வேதத்தில் சேரப் பாக்கியம் பெற்றனர். அவரை விலாவில் குத்தின சேவகன் மிகவும் மனம் வருந்தி ஞானஸ்நானம் பெற்ருன்.

அப்போஸ்தலரைப் பக்தியோடு நேசித்து வந்த டீக்கன் ஜான்விஜயனும், பாவுல் மறை ஆயரும் இராப்பகல் கல்லறைப் பக்கமே கவலையுடன் கூடியிருந்தனர். ஒருநாள்

தோமையார் அவர்களுக்குத் தோன்றி, "ஏன் இங்குத் தங்கியிருக்கிறீர்கள்? என் சரீரம் பூமியிலிருக்கின்றது. ஆனால் என் ஆத்துமம் நான் நம்பியிருந்த இயேசுவின் திருவடிக்குச் சென்று விட்டது நீங்கள் இவ்விடத்தில் சும்மா இருப்பது நன்றன்று; எழுந்திருங்கள் உங்களுக்கு அதிக அலுவல் இருக்கின்றது. போய் மக்களுக்கு சத்தியத்தைப் போதித்துக் கிறிஸ்தவர்களைத் திடப்படுத்துங்கள்; மற்றோரையும் மனந்திருப்புங்கள் சீக்கிரம் நீங்களும் என்னோடு இருப்பீர்கள்'' என்று உரைத்தார். மனத்திடனற்றவனாய் டீக்கன் விஜயன், "அப்போஸ்தலரே! உம்மை விட்டுவிட்டு நாங்கள் எப்படி இருப்போம்? ஆண்டவரின் மந்தையைக் காப்பது யார்? மீட்பின் பாதையை இனிமேல் இவ்வூராருக்குக் காட்டுபவர் யார்?'' என்று கேட்டான். அதற்குத் தோமையார், "மகனே! தைரியம் இழந்துவிடாதே. நம்பிக்கையாயிரு பல அல்லல்கள் நேரும். மந்தை சிதறுண்டுபோகும். ஆனால் திரும்பவும் கூடும். கடலின் அலைகள் நான் கட்டியுள்ள கோவில் சுவரின்மீது வந்து மோதும்போது மேற்கே இருந்து வீரர்கள் வருவர். அவர்கள் திருச்சபையை இந்தியாவில் உறுதியாக நிலைநாட்டுவர்" என்று தைரியமொழி கூறினார்.

## திருக்கல்லறை யாத்திரை

அப்போஸ்தலர் மயிலைக்கு வருமுன் கரங்கனூர் அரசனின் சகோதரன் பீட்டரை மலையாளப் பகுதியில் மறை ஆயராக நியமித்த செய்தி முன்கூறப்பட்டுள்ளது. இவர் ஒருநாள் பலிபூசை நிறைவேற்றிக் கொண்டிருக்கையில் தேவதூதன் அவருக்குத் தோன்றி, "இயேசுவின் அப்போஸ்தலராகிய தோமையார் விண்ணகம் போய்விட்டார்'' என்று விளம்பினார். பூசை முடிந்தபின் சிறுவன் ராபானையும் அழைத்துக்கொண்டு மயிலாப்பூருக்குப் புறப்பட்டார். இவர்களைப் பின்தொடர்ந்து பல கிறிஸ்தவர்களும் யாத்திரையானார்கள். உணவு, தண்ணீர் எதையும் பொருள்படுத்தாது பலநாள் பிரயாணம் செய்து திருத்தலத்தை நெருங்கியதும் ஓடிப்போய் அப்போஸ்தலர் கல்லறையைச் சூழ்ந்து பக்தி

யோடும் துயரத்தோடும் செபித்தார்கள். இவ்வாறு பத்து நாளாக மக்கள் மாறிமாறிக் கும்பல் கும்பலாக வேண்டி வந்தார்கள். பத்தாம்நாள் இரவு ஒருவித ஒளி தோன்றியது. எங்கும் அமைதியாயிருந்தது. அப்போது தோமையார் அவர்கள் மத்தியில் தோன்றி, இயேசுவை என்றும் நேசிக்கும்படியாகவும், விசுவாசத்தைத் தளரவிடாது இருக்கும் படியாகவும் புத்தி புகட்டினர். பின்னும் அவர்களை நோக்கி, "மக்களே! என் மரணத்தை நினைத்து செபிப்போரும், என் கல்லறைக்கு வந்து வேண்டுவோரும் சிறந்த வரங்கள் அடைவார்கள்" என்று வாக்களித்தார்; பின் எல்லாரையும் ஆசீர்வதித்தார். அதன்பின் அந்த அற்புதக் காட்சி மறைந்துபோனது. திருயாத்திரீகர்கள் மிகுந்த மகிழ்ச்சி யுடன் தம் நாடு திரும்பினர்.

## அரசன் அடிமையாகிருன்

அரசன் மஹாதேவன் தன் மனைவி திருப்பதியையும், கிருஷ்ணன் மனைவி மகுதானியையும் பற்பல விதத்தில் ஆக்கினைப்படுத்தினன். ஆனல் அவர்கள் விசுவாசத்தைக் கைவிடாது நிலையாய் இருந்தனர். எப்பேர்ப்பட்ட வாதனை களும் கிறிஸ்துவிடம் இருந்து அவர்களைப் பிரிக்கமுடிய வில்லை. அவர்களது துன்பகாலத்தில் ஆறுதல் அளிக்க ஒரு நாள் தோமையார் அவர்களுக்குத் தோன்றி, "மக்களே! கடவுள்மேல் முழு நம்பிக்கையாய் இருங்கள். சீக்கிரம் அவரது திருப்பெயர் மகிமைப்படுத்தப்படும். உங்கள் துன் பம் இன்பமாக மாறிவிடும்'' என்று உரைத்தார். இவ் வார்த்தைகளால் தேறுதலுற்ற இரு பெண்மணிகளும் அரசன் செய்துவந்த எல்லாவிதத் துன்ப வருத்தங்களையும் சோதனைகளையும் வீரத்துடனும் பொறுமையுடனும் சகித்துக் கொண்டு, கடைசிவரையிலும் கடவுளைக் கைவிடாது நின்ருர் கள். மஹாதேவனும் கிருஷ்ணனும் தம் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போவதைக்கண்டு மனஞ்சலித்து, அவர்களுக்கு மறுபடியும் யாதொரு தொல்லையும் கொடாது விட்டனர்.

அரசனின் இரண்டாவது மகன் கடும் வியாதியாயினன். தேர்ந்த வைத்தியர் பலரைக்கொண்டு சிகிச்சைகள் செய்வித்தும் குணப்படவில்லை. சிறுவனே சாவுக்குரிய வேதனைப் பட்டான். அரசன் ஆற்றெணுக் கவலையில் அமிழ்ந்தியிருந்தான். தன மூத்தகுமாரனாகிய விஜயன் கிறிஸ்தவனாகி விட்டபடியால் வியாதிவாய்ப்பட்டுள்ள மகனையே பட்டத்துக்கு உரியவனாகப் பாவித்துவந்தான் அரசன். ஆதலால் பட்டத்து இளவரசனுக்கு மரணங் கிட்டிவருவதைப் பார்த்து, அரசனின் மனம் இன்னது செய்வதென்று தெரியாமல் தாமரையிலைத் தண்ணீர்போல் தத்தளித்துக் குழம்பிப் பெரிதும் வாதைப்பட்டது.

"அப்போஸ்தலரது கல்லறையைத் திறந்து அவர் எலும்பு ஒன்றை எடுத்து என் மகன் கழுத்தில் போடுவேன். அப்போது அவன் சுகம் அடைவான்", என்று சொல்லிக் கொண்டே அப்போஸ்தலர் கல்லறையை நோக்கிப் பித்தம் பிடித்தவன்போல் ஓடினான். அப்படி ஓடுகையில் தோமையார் தோன்றி அவனை வழி மறித்து, "உயிரோடு இருக்கையில் என்னை நம்பாத நீ இறந்தபின் நம்புவதென்ன விந்தையோ? ஆயினும் மகனே! கலங்காதே! இயேசு உன் மட்டில் இரங்குவார். அவரது இரக்கத்தை நீயே கண் கூடாகக் காண்பாய்" என்று கூறினர். அரசனே இக் காட்சியைக் கண்டதும் திடுக்கிட்டுத் திகைத்தவனாய்த் தூண் போல் நின்றான். பின் தன்னுணர்வு அடைந்து தான் புறக்கணித்துவிட்ட தனது மூத்த குமாரன் டீக்கன் விஜயனிடம் விரைந்து சென்று, "மகனே! அப்போஸ்தலரது திருப்பண்டம் ஏதாகிலுங் கொடு. உன் தம்பி சாகும் நிலையில் உள்ளான். அப்போஸ்தலர் அவனைக் குணப் படுத்துவார்" என்று அலறிப்பதறி உரைத்தான். விஜயனும் விரைவாய்ச்சென்று செய்தியைப் பாவுல் மறை ஆயருக்குத் தெரிவித்து, இருவருமாகக் கல்லறைக்குப்போய் அதைத் திறந்து, வேதசாட்சியின் இரத்தம்படிந்த மண்ணில் சிறிது எடுத்து மஹாதேவனுக்குக் கொடுத்தார்கள்.

அரசன் அதை பய பக்தியுடன் பெற்றுக்கொண்டுபோய் சிறு துணியில் முடிந்து நோயாளியின் கழுத்தில் கட்டினான். அவனது படுக்கையின் பக்கம் முழுங்காலிட்டுக் கண்ணீர் சொரியக் கனிந்த இருதயத்தோடும் விசுவாசத்தோடும் "கிறிஸ்துவே! உம்மை விசுவசிக்கின்றேன்" என்று செபித்தவுடனே நோயாளி திடத்தோடு படுக்கையை விட்டு எழுந்தான். இந்த அற்புதம் மஹாதேவனின் விசுவாசத்தை மேலும் உறுதிப்படுத்தியது. தான் தோமையாருக்கு இழைத்த தீங்கு அனைத்தையும் நினைந்து உருகி நெஞ்சம் புண்ணாகினான்; எழுந்தான்; கோவிலைத் தேடி ஓடினான்; பாவுல் மறை ஆயர்முன் தெண்டனிட்டுக் குப்புற விழுந்து "ஆண்டவரே! நான் பெரும்பாவி! அருளாளராகிய பரிசுத்த அப்போஸ்தலரைக் கொலைசெய்தேன். ஆண்டவராகிய இயேசுநாதர் என் குற்றத்தைப் பொறுக்கும் வண்ணம் எனக்காக மன்றாடும். இன்றுமுதல் நான் இயேசுவின் அடிமை. என்னை ஏற்றுக்கொள்ளும்'' என்று பணிவுடன் வேண்டினான். பாவுல் ஆயர் அரசனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து சிலுவை என்னும் பெயரிட்டார். இதைக் கேள்விப்பட்ட கிறிஸ்தவர்கள் ஆனந்தமடைந்து உண்மையான கடவுளைப் பணிவுடன் புகழ்ந்து போற்றினார்கள். அதுமுதல் அப்பகுதியில் கிறிஸ்தவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று. கடவுளும் அவர்களை மிகுதியாய் ஆசீர்வதித்துக் காப்பாற்றி வந்தார்.

# 11 ஆம் அதிகாரம்

## அப்போஸ்தலரின் திருப்பொருள்கள்

*அப்போஸ்தலரின்* திருவுடல் அடக்கம் செய்யப் பட்ட பல ஆண்டுகளுக்குப்பின் அக்கல்லறையில் அகப்பட்ட பரிசுத்த எலும்புகள் 'எதெஸா' வுக்குக் கொண்டு போகப் பட்டன என்பது வரலாறு. ஆனால் அந்நிகழ்ச்சி எந்த ஆண்டு நிகழ்ந்தது என்று சரியாக வகுத்தறிவதற்குப் போதுமான சான்றுகள் அகப்படவில்லை சீரியக், லத்தீன் நூல்களை ஆராய்ந்ததில் அப்போஸ்தலரைக் கொன்று விட உத்தரவிட்ட அரசன் காலத்திலேயே அத்திருப் பொருள்கள் கொண்டுபோகப்பட்டனவென்று தெரிகின்றது. இதைவிட உறுதியான சாட்சி 'தூர்ஸ்' நகர் புனித கிரகோரியார் "வேதசாட்சி முடிபெற்றுப் பல ஆண்டுகளான பின் எலும்பகள் எதெஸாவுக்கு எடுத்து வரப்பட்டன" என்று சொல்லுவதாகும். எப்படியாயினும் கி. பி. 373ஆம் ஆண்டு இத் திருப்பொருள் எதெஸாவிலிருந்தது என்பது புனித எபிரெமினுடைய வார்த்தைகளால் விளங்கு கின்றது அங்கு வந்தது எப்படியெனின் கி பி 222 – 225 ஆண்டுகளில் 9ஆம் ஆப்கர் என்பவன் எதெஸாவின் அரசனாய் இருந்தான் அவன் கிறிஸ்தவனானபின், கத்தோலிக்கு வேதமே அரசின் வேதமாக அறிவிக்கப் பட்டிருந்தது அக்காலத்தில் மயிலாப்பூர் எதெஸா மேற்றிராசனத்தைச் சேர்ந்திருந்தது. அதோடு, அவ்வூர் சந்நியாசிகள் சிலர். மயிலாப்பூரில் மடம் நிறுவி வேத அலுவல்செய்து வந்தனர். அப்போஸ்தலர் கல்லறையைப் பாதுகாத்து வந்தவர்களும் அவர்களே. புனித தோமை யாரின் நடவடிக்கைகளையும், அவர் வேத சாட்சியானதை யும் கேட்ட அரசன், அவருடைய எலும்புகளை மிகவும் பக்தி யுடன் கொண்டாடும் பொருட்டுத் தனது நாட்டிற்கு எடுத்துப்போக விரும்பி, அதற்காக 'காபின்' எனும் ஒரு வர்த்தகனை மயிலாப்பூருக்கு அனுப்பினான். அரசனால் அனுப்பப்பட்ட தூதனானதால் சந்நியாசிகள் புனிதரின்

எலும்புகளை அவன் மூலமாக எதெஸாவுக்கு அனுப்பினார்கள். ஆனால் மயிலாப்பூரிலிருந்த சந்நியாசிகளுடையவும் கிறிஸ்தவர்களுடையவும் வேண்டுகோளின்பேரில், அப்போஸ்தலரைக் குத்தின ஈட்டியின் சிறுபாகமும், அதன் நுனியில் ஒட்டியிருந்த சிறு எலும்புத் துண்டும் அக்கல்லறையிலேயே விட்டு வைக்கப்பட்டன. பல நூற்றாண்டுகளுக்குப் பின் போர்த்துக்கீசியர் மயிலாப்பூர் வந்தபோது இத் திருப்பொருளின் மூலமாகவே அப்போஸ்தலரின் கல்லறையைக் கண்டுகொண்டனர்.

எதெஸா பட்டணத்தில் ஒன்பது நூற்றாண்டுகள் வரை அப்புனித எலும்புகள் இருந்தன பிறகு துருக்கியர் அடைந்துவந்த வெற்றியால் அப்பட்டணம் பாழாய்ப் போகுமெனக் கருதி, அத்திருப் பொருட்களுக்குச் சேதமும் அவமரியாதையும் நேரிடாவண்ணம், அங்கிருந்து இரண்டாம்முறை சிறிய ஆசியாவின் கடற்கரை ஓரத்திற்கு அப்பாலிருக்கிற ‘கியோஸ்’ என்னும் தீவுக்கு அவை கொண்டு போகப்பட்டன. பின்னர், மூன்றாம் முறையாக 1258ஆம் ஆண்டு 'லியோ அக்காஸ் யோலி' என்பவர் அவற்றை இத்தாலியாவின் எடிரியாட்டிக் கடற்கரை ஓரமாயிருக்கும் ‘ஒரட்டோனா’ என்னும் பட்டணத்திற்குக் கொண்டு போனார். அவ்விடத்தின் தலைமைக் கோயிலிலுள்ள புனித தோமையார் பீடத்தின் அடியில் வைக்கப்பட்டு, அங்கேயே அவை இன்று வரையிலும் மிகவும் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டுப் பெரிதும் பக்தியுடன் போற்றப்படுகிறது.

# மயிலை மாதா



சென்னை — மயிலையிலுள்ள இச்சுரூபம் கிழக்கு நாடுகளில் உள்ள மிகவும் அழகு வாய்ந்த சுரூபங்களில் ஒன்று. தூய தோமையாருக்குப்பின், இந்திய நாட்டின் அப்போஸ்தலர் என விளங்கும் புனித சவேரியார் இச்சுரூபத்தின்முன் பல இரவுகளைச் செபத்தில் செலவழித்தார்.

# 12ஆம் அதிகாரம்

## மயிலை திருத்தலங்கள்

### செந்தோம் — புனித தோமையார் பேராலயம்

**புனித** தோமையார் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையானது அக்காலத்திலேயே மிகுந்த பக்தியுடன் போற்றப்பட்டதுமன்றி, அதன்மீது நாளாவட்டத்தில் ஒரு கோயிலும், அதன் பக்கத்தில் ஒரு சந்நியாசி மடமும் ஏற் பட்டன. வாணிபத்தின் பொருட்டு வரத்துப் போக்கா யிருந்த அரபு நாட்டு வியாபாரிகள் அப்பாகத்தை, 'தோமை யார்வீடு' அல்லது தங்கள் மொழியில் அவ்விதப் பொருள் தரும் 'பெத்தோமா' என்று அழைத்து வந்தார்கள் என்பது வழிவழியாக வரும் செய்தி. இதனுல்தான் புனித தோமை யாரால் சத்திய வேதத்துக்குத் திருப்பப்பட்ட பூர்வீகக் கிறிஸ்தவர்களைப் பின்சென்றவர்களும், இடைவிடாது நடந்த வேத கலகங்களினுல் மலையாள நாட்டில் தஞ்சம் புகுந்த கிறிஸ்துவ மக்களும் இந்தியாவின் மேற்குக் கரையி லிருந்து இவ்விடத்திலுள்ள புனித தோமையாருடைய கல்லறையையும், அவர் வேத சாட்சியாக மரணமடைந்த தலத்தையும் பக்தியுடன் வணங்குதற்கு இன்னும் வந்து கொண்டிருக்கிருர்கள்.

போர்த்துக்கீசியர் இந்தியாவுக்கு 15ஆம் நூற்றுண்டின் இறுதியில் வந்தனர். புனித தோமையார் இந்நாட்டில் வந்து வேதம் போதித்தது, அற்புதங்கள் பல செய்தது, பெருந் தொகையினரை மனந்திருப்பினது, கடைசியாக வேதசாட்சியாகக் கொல்லப்பட்டு அடக்கஞ் செய்யப் பட்டது முதலிய விவரமான செய்திகள் அவர்களுக்குத் தெரியவந்ததும், மயிலாப்பூரிலுள்ள தோமை அப்போஸ் தலர் கல்லறையின் மீது காணப்பட்ட கோவிலை விரிவ் படுத்திச் சிறப்பித்தனர். அதைப் பக்தியுடன் வழி பட்டனர். தோமையார் பக்தியை வளர்த்துப் பெரியதோர் கோவிலையும் அதன் பக்கத்தில் கட்டினர்.

போர்த்துக்கீசியர் கொண்டிருந்த தெய்வ பக்தியினாலும், வாணிபத் தொழிலினாலும், அவர்களில் பலர் புனித தோமையார் கல்லறைக் கோவிலின் அருகே குடியிருப்பை ஏற்படுத்தினர். ஆகவே கொஞ்ச காலத்திற்குள் அவ்விடத்தில் ஒரு சிறிய ஐரோப்பியப் பட்டணம் உண்டாயிற்று இவ்வாறு உண்டாகிய இந்தப் புதுப் பட்டணமும, கிறிஸ்தவர்கள் மிகுந்திருந்த பழைய மயிலாப்பூர் முதலிய ஊர்களும், பாப்பானவரால் 1552ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட கொச்சி மறை மாவட்டத்தின் ஞான ஆளுகைக்கு உட்பட்டிருந்தன ஆனால் அதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் போர்த்துக்கல் தேசத்தை ஆண்டுகொண்டிருந்த இரண்டாம் பிலிப்பு என்னும் அரசர் எழுதிக் கேட்டுக் கொண்டதின் பேரில் ஐந்தாம் பாவுல் என்னும் பாப்பானவர் 1606ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் நாள் புனித தோமையாரின் திருமயிலை மறைமாவட்டத்தை ஏற்படுத்தினார்; அவ்விடத்திலுள்ள கோயிலை மறை ஆயரின் தலைமைக் கோவிலாக உயர்த்தினார். அது முதற்கொண்டு அது தனி மறை மாவட்டமாய் விளங்குகிறது.

மயிலாப்பூரில் தற்காலம் இருக்கும் புனித தோமையார் கோவிலானது, இந்திய நாட்டில் இறைவனது தோத்திரத் திற்காகக் கட்டப்பட்டிருக்கும் எழில் மிக்கப் பெருங் கட்டடங் களில் ஒன்று. இக் கோவிலானது 1896ஆம் ஆண்டு வணக்கத்துக்குரிய ஜோஸ் ரீட் டிசல்வா மறை ஆயரால், புனித தோமையார் கல்லறை அதன் நடுவில் அமையும்படி ஏற்பாடு செய்து கட்டப்பட்டது. 1906ஆம் ஆண்டு மயிலை மேற்றிராசனம் ஏற்பட்ட மூன்றாம் நூற்றாண்டுப் பெரு விழாக் கொண்டாட்டத்தின்போது, அக்காலத்தில் இருந்த மறை ஆயராகிய வணக்கத்துக்குரிய தோம் தெயதோனியுஸ் எம்மானுவேல் வியேரா டிகாஸ்ற்ரோ என்பவர் புனித தோமையார் கல்லறையை இன்னும் அதிகமாக மேன்மைப் படுத்த ஆவல் கொண்டு, கோவில் பூமிமட்டத்திற்கு ஏழடி ஆழமாகக் கல்லறையிருக்கும் இடத்தைச் சுற்றிலும் விசாலப் படுத்தினதோடு அக்கல்லறையின்மீதே திருப்பலிபூசை

செய்வதற்கு ஏற்ற வகையில் பல வண்ணச் சலவைக் கல்லினுல் செய்த ஒரு பலிபீடத்தையும், மேற்சொல்லிய கல்லறையின் தளவரிசையையும், அதன் சுற்றுச் சுவர்களையும் அலங்கரிக்கப் பளிங்கு போன்ற சுத்த வெண்மையான இத்தாலிய தேசத்துச் சலவைக் கற்களைக் கொண்டுவந்து அழகுபட அமைத்துள்ளார்.

## கல்லறை தரிசனம்

புனித தோமையார் கல்லறை ஆதிகாலந் தொட்டுப் பக்தியுடன் பாவிக்கப்பட்டு வந்ததுமன்றி, தூர நாடுகளிலிருந்து முதலாய் யாத்திரீகர் பொருத்தனைக்காக வந்துற்றனர் என்பதும் பாரம்பரை. கி. பி 1893ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தின் தென் பாகத்துக்கு அரசனுயிருந்த மகா மேன்மைப்பட்டம் பெற்ற பெரிய ஆலபர்ட் என்னும் ஆங்கிலோ சாக்ஸன் அரசர், 'தேன்ஸ்' என்பவர்கள் லண்டன் நகரை முற்றுகையிட்டபோது, புனித தோமையாரைக் குறித்துப் பிரார்த்தனை செய்துகொண்டாரென்றும், வெற்றியடைந்தபின் ரோமாபுரிக்கும் இக் கல்லறையிருக்கும் இடத்திற்கும் தன் ஸ்தானுதிபதி மூலமாய்க் காணிக்கைகளை அனுப்பினுர் என்றும், அநேக முறை உரோமாபுரிக்கும், மயிலாப்பூர் கிறிஸ்தவர்களுக்கும் உதவி செய்தார் என்றும் இங்கிலாந்து நாட்டிலுள்ள பெரிய "மியூஸியம்" என்னும் அரிய பொருட்காட்சி சாலையிலிருக்கும் சாசனங்கள் சான்று பகருகின்றன

1293ஆம் ஆண்டு இத்தாலிய நாட்டினராகிய, வெனிஸ் பட்டணத்தில் பிறந்த 'மார்க்கப்போலோ' எனும் யாத்திரைக்காரரும், 'கொர்விஞே' எனும் மலை நாட்டைச் சேர்ந்த ஜான் எனும் சந்நியாசியாரும் புனித கல்லறையைக் காணும்படியாகவே மயிலாப்பூருக்கு வந்தார்களென்று வரலாற்ருல் தெரிய வருகின்றது. அல்லாமலும் 1346ஆம் ஆண்டு 'ஜுவான் தெ மரிக்நோலி' என்னும் மறை ஆயரும், 1425ஆம் ஆண்டு 'நிக்கலோ தெ காந்தி' என்னும் டமரியஸ் பட்டணத்து வர்த்தகரும், இக்கல்லறையைக் காண இங்கு

வந்தார்கள். நிற்க, முத்திப் பேறு பெற்ற "ஒடெரிக்" என்பவர் 1324ஆம் ஆண்டு இக்கல்லறையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். மத்தேயு குமாரனுகிய அமிர் என்னும நெஸ்தோரியன் 1340ஆம் ஆண்டிலும் 1514ஆம் ஆண்டிலும் நெஸ்தோரியன் பிரிவினைச் சபையைச் சேர்ந்த தலைமைக் குருக்கள் தாங்கள் எழுதிய செய்திகளில் மயிலாப்பூரிலுள்ள தோமையாரின் கல்லறையைப்பற்றிப் பேசுகிருர்கள். இவர்களல்லாமல், இந்தியநாட்டு அப்போஸ்தலராகிய புனித சவேரியாரும் தாம் விரும்பியதை எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து அடையப் பற்பல சமயங்களில் மயிலாப்பூரிலுள்ள புனித தோமையாரின் பரிசுத்த கல்லறையை மிகுந்த பக்தியுடன் சந்தித்துப் பிரார்த்திக் கொண்டதாகவும் அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து தெரியவருகிறது.

இத்தகைய தரிசனங்கள் பழைய காலத்தவை மாத்திர மல்ல. இன்றையவரையில் ஓரோர் சமயங்களில் பல நாடுகளினின்று யாத்திரீகர்கள் வந்து அத்திருக் கல்லறையைத் தரிசித்துப் போவது வழக்கமாயிருந்து வருகின்றது. முக்கியமாக மலையாளப் பகுதியினின்று பெரும்பாலர் அடிக்கடி வருகின்றனர். ஐரோப்பிய நாட்டு யாத்திரைக்காரர்களும் வந்து தரிசித்துப் போகிருர்கள். புனித தோமையார் கோயிலிலுள்ள, வருகை தருவோர் புத்தகம் (Visitor's Book) இதற்குச் சரியான சான்று.

## திருப்பொருள்

போர்த்துக்கீசியர் மயிலாப்பூர் வந்துற்றபோது தோமையாரின் எலும்புகள் எல்லாமே கல்லறைக்குள் இருந்ததாக நம்பியிருந்தனர். இக்காலத்தில் நாம் அறியக்கூடிய அளவு, வரலாற்று விவரங்கள் அக் காலத்தவர்க்குத் தெரியாமையால், அப்படிப்பட்ட தவருன கருத்து அவர்களுக்கு உண்டானது. நாளாவட்டத்தில் பல சான்றுகளால் எலும்புகள் 'எதெஸா'வுக்குக் கொண்டுபோகப் பட்டன என்று கண்டுகொண்டனர். அவர்கள் கல்லறை

# தோமையார் திருப்பொருள்கள்



சென்னை - மயிலைப் பேராலயத்தில் புனித தோமையாரைக் குத்திய ஈட்டி முனையும், திருப்பொருள்களும் வைக்கப்பட்டுள்ள திருப்பீடம்.

யைத் திறந்து பார்த்தபோது ஒரு சிறு எலும்பும் அதில் படிந்திருந்த ஈட்டி முனையுமே இருந்தன. இப்பொருட்களை அவர்கள் எடுத்து மிகுந்த பக்தியுடன் வைத்துக் கொண்டாடி வந்தனர். இன்னும் அவை மேற்சொல்லப்பட்ட புனித தோமையார் கோயிலிலேயே இருக்கின்றன சுத்த வெள்ளியினால் வெகுவேலைப்பாடாகச் செய்யப்பட்ட ஒரு சுடர்பாத்திரத்தின் மத்தியில் கண்ணாடிக் கூட்டுக்குள் மேற்சொன்ன திருப்பொருட்கள் அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 21ஆம் தேதி கொண்டாடப்படும் புனித தோமையார் திருநாளுக்கு முந்திய நவநாட்களிலும், அப்பெருநாளன்றும் அவை மக்களின் வணக்கத்திற்குப் பீடத்தில் எழுந்தேற்றஞ் செய்யப்பட்டு வருகின்றன. மக்கள் அவற்றை முத்தி செய்யும் பாக்கியமும் அடைகிறார்கள் இந்தத் திருப்பொருளை — அருளிக்கத்தை — முத்தி செய்வதற்காகச் சென்னை நகரத்தின் பலபாகங்களினின்று பெருந்திரள் வருகிறதை இக்காலமும் காணலாம். இந்தத் திருநாளை “தோமையார் அருளிக்க முத்தத் திருநாள்” என்று மக்கள் சாதாரணமாய் அழைப்பார்கள்.

# 13 ஆம் அதிகாரம்

## சின்னமலை

சென்னைக்குத் தென்மேற்கில் ஆறு கல் தொலைவுக்கு அப்பால் ஒரு குன்றும், அதற்கு மேற்கே இரண்டு கல் தூரத்தில் மற்றொரு குன்றும் உள்ளன. முன்னையது சிறியதாதலால் சின்னமலை என்றும், பின்னையது பெரியதாதலால் பெரியமலை அல்லது பரங்கிமலை என்றும் அழைக்கப்படுகின்றன. சின்னமலையானது செந்தோமுக்கும் பெரியமலைக்கும் இடையேயிருக்கிறது. போர்த்துக்கீசியர் வந்தபின் அம்மலையின்மேல் இரண்டு சிறு கோவில்கள் கட்டியிருந்தனர். ஒன்று தேவமாதாபேராலும், மற்றொன்று உயிர்த்த இயேசுவின் பேராலும் வழங்கப்பட்டுவந்தன. இவற்றைத் தாமே பார்த்ததாக 1911ஆம் ஆண்டு இயேசு தாஸார்டு சுவாமியார் தாம் எழுதிய நிருபத்தில் சொல்லுகிறார். நாளாவட்டத்தில் பின்னது கண்காணிப்பில்லாமையால் தகர்ந்து வீழ்ந்துவிட்டது. இக்காலமும், அது இருந்ததற்கு அடையாளமாகக் கடைக்கால் குறிகள் இருக்கின்றன. தேவமாதா பேரால் கட்டப்பட்ட கோயிலோ இதுவரையில் இருந்து வருகின்றது. இவ்வாலயம் மேற்சொன்னபடி போர்த்துக்கீசியரால் 1551ஆம் ஆண்டு கட்டப்பட்டது. புனித ஆரோக்கியமாதா பீடத்தின்மீது கோயில் கொண்டிருக்கின்றாள். புனித தோமையாரின் காலடிச்சுவடுகள் பட்ட இடமாகையால் இங்குப் பண்டையக் காலந்தொட்டு, தொண்டர்கள் பலர் யாத்திரையாக வந்து காணிக்கை செலுத்திப் போவது வழக்கம். இதுவரையில் அவ்வாறே நடக்கின்றது. இயேசு உயிர்த்த திருநாளுக்குப் பின்வரும் 4ஆம் ஞாயிறன்றுதான் திருவிழா. அப்போது கூடுகின்ற மக்கள் திரள் அளவிடற்கரியது. மற்றக் காலங்களில் சின்னமலை ஒரு குக்கிராமம்போல் இருந்தாலும், ஆண்டுத் திருவிழாக் காலத்தில் மக்கள் கூட்டத்தின்பொருட்டும் கடைகள், உணவு விடுதிகள், வேடிக்கைசாலைகளின் பொருட்டும் அது ஒரு பெரிய பட்டணம்போலிருக்கும்.

# சின்னமலை
# பீடமும், குகையும்



சென்னை—சின்னமலையில் உள்ள இக்குகையில் புனித தோமையார் தங்கியிருந்ததாகக் கருதப் படுகிறது. இங்குள்ள பழைய பீடத்திற்கு இடப் பக்கமுள்ள 5 அடி நீளமும் 2 அடி அகலமும் உள்ள குகை உள்ளது. குகை நுழைவில் தோமையாரின் விரல் பதிந்த இடங்களும் காணப்படுகின்றன.

இவைகளுக்கெல்லாம் திலகமெனத் திருத்தலம் மலைமீது விளங்கும். அதில் நடக்கும் இறை வழிபாடுகளில், கிறிஸ்தவர்கள் பக்தியுடன் பங்கு கொண்டு தேவ ஆசீர்வாதம் கேட்பார்கள். இதர மதத்தினரும் கூட்டங் கூட்டமாக வந்து, திருக்கோயிலை நாள்முழுதும் தரிசித்தவண்ணமாய் இருப்பார்கள். இவர்களும், மெழுகுவர்த்திகள், மலர் மாலைகள், நாணயங்கள் ஆகியவற்றை மிக்க பயபக்தியுடன் காணிக்கையாகச் செலுத்துவார்கள்.

## மலைக்குகை

கோயிலின் பீடத்திற்கடியில் இயற்கையாகவே ஏற்பட்ட ஒரு குகையிருக்கின்றது. அது கிழக்குப் பக்கம் நீண்டுள்ளது. அது ஏறக்குறைய 16 அடி நீளமும், 14 அடி அகலமும், நடு மத்தியில் 7 அடி உயரமுங்கொண்டது. உட்செல்ல 5 அடி உயரமும் 1½ அடி அகலமும் உள்ள வாசல் ஒன்றிருக்கின்றது. அதற்குத் தற்போது கதவு போடப்பட்டிருக்கிறது. குகையின் தென்பாகத்திலுள்ள சிறு துவாரமானது, காற்றும் ஒளியும் உட்செல்லும் வழியாயிருக்கிறது. இக்குகைக்குள்ளேதான் புனித தோமையார் போய் செபதபஞ் செய்வது வழக்கம். அப்படி அவர் ஒருநாள் செபித்துவிட்டு இச்சிறு துவாரத்தின் வழியாக நுழைந்து போக முயன்றபோது, கற்பாறையானது மெழுகுபோல இளகி இடந்தர அவர் எளிதாய் வெளியேபோயினர். போகும்போது இடதுகை பாறையில் பட்டமையால், அதில் அவரது கை அடையாளம் பதிந்து காணப்பட்டது. அந்த அடையாளத்தை இன்னும் பார்க்கலாம். 16ஆம் நூற்றாண்டில் புனித ஆரோக்கியமாதா கோவில் கட்டப்பட்டபின் அக்குகைக்குள்ளும் ஒரு பீடம் அமைக்கப்பட, சிற்சில சமயங்களில் அதில் குருக்கள் திருப்பலி நிறைவேற்றுவார்கள். சில ஆண்டுகளுக்குமுன் சலவைக் கற்களால் அழகான ஒரு பீடம் கட்டப்பட்டு அதன்மேல் புனித தோமையார் சுரூபம் வைக்கப்படலாயிற்று

## சிறு கற்சிலுவை

குகைக்குத் தென்கீழ்ப்பாகத்தில் கற்பாறையில் செதுக்கப்பட்ட சிலுவையொன்று இருக்கிறது. அது பெரிய மலையிலுள்ள கற்சிலுவையைப் போன்ற சாயலும் கொண்டுள்ளது; ஆனால் அளவில் சிறியது. இச்சிலுவையை புனித தோமையாரே கல்லில் வெட்டி, அதனடியில் பீடமொன்று கட்டிப் பலிபூசை நிறைவேற்றி வந்தாரென்பது பாரம்பரை. அதன்மேல் ஒரு சிறு ஆலயம் அமைக்கப் பட்டது. அதனுள் இக்கற்சிலுவை பீடத்தின்மேல் அமையுமாறு அக்கோவில் கட்டப்பட்டது. இதுதான் உயிர்த்த ஆண்டவர் கோயில். இது நாம் மேலே கூறியுள்ளபடி பிற்காலத்தில் இடிந்து அழிந்துபோயிற்று.

பெரியமலைமீதுள்ள கற்சிலுவையானது தண்ணீரும் இரத்தமும் வியர்க்கும்போது இதுவும் அதேபோல் அற்புதங் காட்டியதாம். [பெரியமலையில் நடந்த அற்புத வரலாறு பின்னால் விவரிக்கப்பட்டிருக்கின்றது]. இதைக் கண்கூடாகக் கண்ட குருக்களின் சாட்சியம் வரலாற்றால் தெளிவாகிறது. பின்னும் வீரமாமுனிவர் தாம் மேல்நாட்டுக்கு எழுதிய கடிதங்களிலும் இவ்வற்புதங்களைப்பற்றி வரைந்துள்ளார். 1711ஆம் ஆண்டு இயேசு சபை தாஸார்டு சுவாமியார் எழுதிய கடிதத்தில், "பெரியமலைக் கற்சிலுவையானது வியர்த்ததை அறிந்தபின் செந்தோம் சிரேஷ்டர் ஒரு குருவானவரைச் சின்னமலைக்கு அனுப்பிப் பார்க்க, அங்குள்ள சிலுவையும் வியர்வையால் கசிந்திருந்ததைக் கண்டார் என்று எனக்குச் சொன்னார்" என வரைந்துள்ளார்.

## சுனை

மேற்சொல்லிய கற்சிலுவையின் அருகே தென்புறத்தில் ஒரு பாறை இருக்கின்றது. அதன் மத்தியில் ஒரு வெடிப்பு உள்ளது. அதன் ஆழம் ஏழடியிருக்கும். இவ் வெடிப்பில் எப்போதும் தண்ணீர் நிற்கின்றது. வேனிற் காலத்தில் தண்ணீர் குறைந்துவிடுகிறது. இந்தச் சுனை அற்புதமாகத் தோன்றியதெனச் சொல்லப்படுகிறது.

# குருதி கொட்டும் சிலுவை



சென்னை புனித தோமையார் மலை (பெரிய மலை அல்லது பரங்கிமலையில் கல்லில் செதுக்கப்பட்டுள்ள இச்சிலுவை முன் செபித்துக்கொண்டிருந்தபொழுது புனித தோமையார் எதிரிகளின் ஈட்டிக்குப் பலியானார். 16ஆம் நூற்றாண்டில் இச்சிலுவைக்கல் கண்டுபிடிக்கப்பட்டது. 1558ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ஆம் நாளிலிருந்து இதில் குருதி கொட்டத் தொடங்கியது. 1704ஆம் ஆண்டில்தான் இதில் இறுதியாக இரத்தம் கசிந்தது.

அப்போஸ்தலர் மலையின்மீது மக்களை அழைத்து வந்து அங்கு அவர்களுக்குப் போதிப்பது வழக்கம். ஒருநாள் அங்குக் குழுமியிருந்து போதகங் கேட்டிருந்தவர்கள் தாகத்தால் தவிப்பதைக் கண்ட புனித தோமையார், தண்ணீர் பக்கத்தில் இல்லாததால் மனம் வருந்தி, ஆதி காலத்தில் மோசஸ் செய்த அற்புதத்தை நினைத்து, கடவுள்மேல் நம்பிக்கைவைத்துத் தமது கரத்திலிருந்த தடியால் பாறையைத் தட்ட, உடனே பாறை பிளவுபட்டு அதினின்றும் தண்ணீர் சுரந்தது அன்றுதொட்டு இது வரையில் நீர் அதினுள் கிடக்கின்றது. இவ்வற்புத வரலாற்றினுல்தான் யாத்திரீகர், - கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர் அல்லாதாரும் - அச்சுனையிடம் சென்று, தண்ணீர் மொண்டு பக்தியுடன் பருகி வருகிறுர்கள். ஏராள மானேர் அதைக் குப்பிகளில் நிரப்பி இல்லங்கொண்டுபோய் நோயாளிகளை அருந்தச் செய்வதும் வழக்கமாய் இருக்கிறது.

இச்சுனைக்கு மேற்கே ஒரு பெரும் பாறையின்மேல் சிகரம்போன்ற சின்னம் ஒன்று இருப்பதைப் பார்க்கலாம். அந்தப் பாறையின் உச்சியானது அகன்று பெரிய மேசை போல் இருக்கின்றது. அதன்மேல் நின்றுதான் அப்போஸ் தலர் போதித்தார். அந்நிகழ்ச்சியைக் குறிப்பிடவே மேற் சொன்ன சிகரம் கட்டப்பட்டுளதென்று சொல்லப்படுகிறது.

## காலடிச் சுவடு

மலையைச்சுற்றிப் பொதுச்சாலையொன்று போகிறது. கீழ்ப்பக்கத்துச் சாலையின் ஓரத்தில் அங்குள்ள சுவருக்கு அருகாமையில் தாழ்ந்த இரண்டு சிறு கட்டடங்கள் இருக் கின்றன. அவை ஒவ்வொன்றுக்குள்ளும் ஒரு கருங்கல் பாறை இருக்கின்றது. அதன்மேல் பாதம் பதிந்த அடை யாளத்தைப் பார்க்கலாம். அந்த அடையாளம், அப்போஸ் தலர் பாதம்பட்டதால் உண்டானதென்பது மக்களுக்குள் வழங்கி வருகிற பாரம்பரையாம்.

## பெரியமலை

இது ஒரு குன்று. முன்சொன்ன சின்னமலையைவிட இது பெரியதானதால் பெரியமலை என்று அழைக்கப் படுகின்றது. கடல் மட்டத்துக்குமேல் 300 அடி உயர முள்ளது. இம்மலைமேல்தான் புனித தோமையார் நம் ஆண்டவருக்காக இரத்தம் சிந்திஞரென்பது பாரம்பரை. ஆதிகாலத்தில் இம்மலை உச்சியினின்று இரவுக் காலத்தில் ஒரு ஒளி தென்படுமாம். அவ்வொளியைக்கொண்டு மாலுமி கள் கரையைக் கண்டு நங்கூரம் போடுவார்களென்று கொரேயா என்னும் வரலாற்ருசிரியர் கூறுகிருர்.

16ஆம் நூற்ருண்டில் போர்த்துக்கீசியர் இந்தியாவிற்கு வந்தபோது, இம்மலையைக் கண்டு அப்பக்கம் குடியேறினர் சிலர் அம்மலையில் பாளையம் இறங்குவதும் சரதாரணம் இந்தியர்கள் ஐரோப்பியரை அக்காலம் பரங்கியர் என்று அழைத்து வந்தமையால், அவர்கள் தங்கியிருந்த காரணம்பற்றி இந்த இடத்தைப் பரங்கிமலை என்றும் அழைக்கலாயினர் போர்த்துக்கீசியர் உத்தம கத்தோலிக்க ராகையால் அவர்கள் சென்ற இடமெல்லாம் முந்த முந்த வெற்றி விருதாகிய இயேசுவின் திருச்சிலுவையையே நாட்டி வந்தனர் அவ்வண்ணமே மலையின் உச்சியில் அவர்கள் ஒரு சிறிய கோயிலைக் கட்டியுள்ளார்கள்.

## கற்சிலுவை

1547ஆம் ஆண்டு மலையின் சில பாகங்களைச் சுத்தஞ் செய்வதற்காக வெட்டிச் சமப்படுத்தி வருகையில் அகன்ற ஒரு கல்லைக் கண்டெடுத்தனர். அதன் நடுவில் ஒரு சிலுவை செதுக்கப்பட்டும், அதன் சுற்றிலும் 'பெல்வி' மொழியில் எழுத்துக்கள் செதுக்கப்பட்டும் இருந்தன. சிலுவையின் மேலும் பக்கத்திலும் சிவப்புப் புள்ளிகள் தென்பட்டன. அவற்றைத் துடைத்துச் சுத்தஞ்செய்தார்கள். ஆச்சரியம்! திரும்பவும் அவை தென்பட்டன. இந்தச் சம்பவத்தைப் பார்த்துத் திகைத்து, இதில் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது

என்று மதித்துப் பக்தியுடன் அதை எடுத்துச் சென்று கோயிலில் வைத்தனர். அதற்குப் பின்னர்தான் அச் சிலுவை தோமையாரால் செய்யப்பட்டது என்றும், அதன் முன் செபித்திருக்கையில்தான் ஈட்டியால் குத்துப்பட்டார் என்றும், அவருடைய இரத்தத் துளிகள் கல்லின்மேல் பட்டிருந்தன என்றும் அறியலானார்கள். அப்பால் அக் கற்சிலுவையை நடுப்பீடத்தின்மீது ஏற்றிவைத்தார்கள். அது அப்படியே இது வரையில் இருந்து வருகின்றது.

இக்கோயிலானது பூரணமாதா பெயரால் கட்டப் பட்டுள்ளது. இதில், கன்னிமரியாயி இயேசுநாதர் சுவாமி யின் பிறப்பை எதிர்பார்த்திருந்த திருநாள் டிசம்பர்மாதம் 18ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. திருவிழா வுக்கு முந்தின நாள் சில காலங்களாக மேற்சொல்லிய கற்சிலுவையினிடத்து அற்புதக் காட்சி தென்படும். கல்லின் நடுவில் செதுக்கப்பட்டுள்ள சிலுவையின்மீது இரத்தமும் தண்ணீரும் கசிந்து விழும். இப்புதுமை 18ஆம் நூற்றாண்டுவரை நடந்து வந்தது என்பதற்குச் சரித்திரம் சான்று. 1711ஆம் ஆண்டு இந்தியாவைத் தரிசிக்க, பிரான்சு நாட்டினின்று வந்த இயேசு சபை 'தாஸார்டு' சுவாமியார் மேனாட்டிலிருந்து 'தூ தெ ரெ வோன்' சுவாமியாருக்கு இவ்வற்புதத்தைப்பற்றி விவரமாக எழுதி யிருக்கிறார். "பெரிய மலையிலிருக்கும் கற்சிலுவையானது நிறம் மாறித் தண்ணீர் கசிந்த சமயமெல்லாம், சின்ன மலையிலிருக்கும் கற்சிலுவையினிடத்தும் அவ்வாச்சரியம் தோன்றுமாம். நமது சபை 'சில்வெஸ்டர் டிசோஸா' சுவாமி அவர்கள் இப்பாகங்களில் பல ஆண்டுகளாகத் தேவ அலுவல் புரிந்து வருகிறார். சின்ன மலையிலும் பல ஆண்டுகள் இருந்திருக்கிறார். தாமே மேற்சொன்ன அற்புதத்தைக் கண்கூடாகப் பார்த்ததாக எனக்குத் தெரிவித்தார்".

"இவ்வதிசய சம்பவத்தினால் பல பேர் அக்கோயிலைத் தரிசிக்கிறார்கள். இது எல்லாருக்கும் வெளிப்படையாகக் காணப்படுகிறபடியால் மறுப்போர் ஒருவருமில்லை.

புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களும் வந்து பார்க்கப் பின் வாங்குகிறதில்லை. நமது குருக்களில் ஒருவர், இப் புதுமையை இரண்டு தடவை நேராகக் கண்டதாக எனக்குச் சொன்னார். ஒரு காலத்தில் கோயிலில் 400 க்கு மேற்பட்ட மக்கள் இருந்தார்கள். அவர்களுள் பல பிரிவினைக் கிறிஸ்தவர்களும், ஆங்கிலேய புராட்டஸ்டண்டாரும் அதன் உண்மையைப் பரிசோதிக்கும்பொருட்டுக் கூடினர். புதுமையைப் பார்க்கும் பாக்கியம் பெற்றார்கள். ஆனால், அதைப் பார்த்ததும் ஒன்றும் பேசாது திரும்பினார்களாம்''.

''இன்னொரு சமயம் (1711ஆம் ஆண்டிலிருந்து) ஏழெட்டு ஆண்டுகளுக்குமுன் தேவமாதா திருநாளின்போது பெருந்திரளான மக்கள் கோயிலில் இருந்தார்கள். குருவானவர் மறையுரை ஆற்றிக் கொண்டிருந்தார். பீடத்திற்குச் சமீபமாயிருந்த விசுவாசிகள் திடீரென எழுந்து புதுமை! புதுமை! என்று கூவினார்கள். பக்கத்திலிருந்த குருவானவர் அவர்களை அமர்த்தி எல்லாருக்கும் அன்று நடந்த அற்புதத்தைத் தெரிவித்தார். அவர்தாமே எனக்குச் சொன்னது என்னவென்றால்:— 'கருங்கல்லில் கரடுமுரடாய்ச் செதுக்கப்பட்ட சிலுவை கருப்பு நிறமாக மாறினது. பின்னர் வெண்ணிறமாக ஒளிர்ந்தது. அதற்குப் பிறகு ஒருவிதப் புகை அங்கு உண்டாகச் சிலுவையோ மறைந்துபோயிற்று. கொஞ்ச நேரம் சென்றதும் சிலுவை தெளிவானது. அப்போது அது ஈரமாகவும், வியர்வை வடிவதுபோலும் நீர் கசிந்து, கீழே பீடம் மட்டும் வடிந்தோடியது பெரிய மனிதர் சிலருடைய வேண்டுகோளுக்கு இணங்கிக் குருவானவர் பீடத்தின்மீதேறி சில துணிகளை அதில் தோய்த்து எடுத்தார். இச்சம்பவம் நடந்த காலம் வேனிற்காலம். ஆதலால், புதுமை என்றே எல்லாரும் ஒப்புக்கொண்டு கடவுளைத் துதித்தார்கள்'' என்பதே.

''அச்சமயம் கூடியிருந்த புராட்டஸ்டண்டாரும், பின்னர் ஓடிவந்த வேறு சிலரும் முதலில் இப்புதுமையை நம்பாதவர்களாயிருந்தார்கள். ஆதலால் அதை நன்கு பரிசோதிக்கும்பொருட்டுச் சிலர் படத்தின் உட்பக்கமும்

# புனித லூக்காஸ் தீட்டிய அன்னையின் ஓவியம்



புனித லூக்காவினால் தீட்டப்பட்டதாகக் கருதப்படும் இந்த ஓவியம், புனித தோமையாரால் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. அன்னை கன்னிமரியாளும், இயேசு குழந்தையும் மரப்பலகையில் ஓவியமாகக் காட்சி தருகின்றனர்.

வெளிப்பக்கமும் நன்ருக உற்றுப் பார்த்து, வெளியினின்று வேறு காரணத்தாலும் வியர்வை கசியவில்லையென்று நம்பினர்கள். வேறுசிலர் கோவில் மேலே போய், அங்கிருந்து தந்திரமாக ஏதாகிலும் சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கின்றதோ என்று சோதித்துப் பார்த்து ஒன்றையும் காணுததால் திகைத்து, இது சாதாரணமாய் இயற்கையாய் நடக்கிற சம்பவமன்று; தெய்வீக சம்பவமே என்று கூறினர்கள். அவர்கள் பார்த்த நிகழ்ச்சி மெய்யான புதுமை என்றும் ஒப்புக்கொண்டார்கள். ஆயினும், அவர்களில் ஒருவராகிலும் மனந்திரும்பவில்லை.'' இதுவே 'தாஸார்டு' சுவாமியார் எழுதியதாம்.

கற்சிலுவையைச் சுற்றியுள்ள எழுத்துக்கள் பெல்வி மொழியாம். அதன் பொருள் என்னவென்று நிச்சயமாய் நிரூபிக்கக்கூடுமாயில்லை. "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர் தோமையார், அவருடைய (இயேசுவினுடைய) பரிசுத்த கோட்பாடுகளைப் போதிக்க இங்கு அனுப்பப் பட்டார் இவ்விடத்தில் சீடர்களைச் சேர்த்தார். இவ்விடத்திலேயே வேத சாட்சியானர்'' என்று பொருள் படுகின்றதாக முன் காலத்தில் எண்ணியிருந்தார்கள். தற்காலத்திய பண்டிதர், "நானே நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையிலேயே பெருமை பாராட்டுவேனே ஒழிய வேறென்றுமில்லை'' என்பதே அவ்வெழுத்துக்களின் அர்த்தமென்று கருதுகிருர்கள்.

## தேவ அன்னை படம்

இப்படமானது தேவதாய் திருக்குழந்தையை ஏந்திய வண்ணம் பலகையில் வரையப்பட்டுள்ளது. புனித லூக்காஸ் சுவிசேஷகரால் எழுதப்பட்டதென்றும், புனித தோமையாரால் இங்குக் கொண்டுவரப் பட்டதென்றும் சொல்லப்படுகின்றது. பரிசுத்த கற்சிலுவை கண்டெடுக்கப் பட்ட இடத்திலேயே அதுவும் கிடந்தது. தரையில் புதைந்திருந்தமையால் அதிலுள்ள வண்ணம் சற்று மங்கினதுமன்றி, மாதாவின் முகத்தில் சிறு பொட்டு விழுந்திருந்தது.

இரண்டொரு இடத்தில் வண்ணமும் போயிருந்தது. இதையும் கோயிலின் பீடத்திலேயே பக்தியாக நிறுவினர் போர்த்துக்கீசியர். இப்படத்தின் மூலமாகக் கிறிஸ்துவர்களும் மற்றவர்களும் பல உதவிகளை அக்காலந்தொட்டு இக்காலம்வரையில் அடைந்து வருகின்றனர். பற்பல ஊர்களிலிருந்து மன்ருட்டுச்களும் கோரிக்கைகளும் எழுதிய கடிதங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன உதவி பெற்ற பக்தர்கள் பொருத்தனைகள் சாற்றுகிருர்கள். இன்னும் அப் புனிதமான படத்தின்முன் வைக்கப்பட்டிருக்கும் ஏராளமான வேண்டுகோள் கடிதங்கள் அத்தேவதாய் செய்யும் சலுகைக்குச் சரியான சான்ருகும்.

ஒருகால், இப்படத்தைப் புதுப்பிக்கும்பொருட்டு குருவானவர் ஓவியக்காரனிடம் அதை ஒப்புவித்தார். அவன் அதை மலையடியிலிருந்த தனது இல்லத்திற்குக் கொண்டு வந்து, மறுநாள் வேலை ஆரம்பிக்கலாமென்று ஓரிடத்தில் வைத்துவிட்டான். சூரியன் உதயமானதும் படத்தைப் போய்ப் பார்க்க, ஆச்சரியம்! அது அங்கு இல்லாது போயிற்று. திகைத்துத் தடுமாறிப் பயந்து பதறி, குருவானவரைப் பார்க்க மேலே ஓடினன். அறையிலிருந்த குருவானவரைக் கண்டு செய்தியைச் சொல்லவே, அவரும் பதைத்துக் கவலைப்பட்டு என்ன செய்வதென்று அறியாது ஏங்கினர்; மாதாவைப் பார்த்துப் பிரார்த்தித்தார். பிறகு திருப்பலிக்கு ஆயத்தம் செய்யப் பீடத்தண்டை சென்றபோது, ஆச்சரியம்! அப்புதுமையுள்ள படம் அங்குப் பழையபடி கண்ணுக்குத் தென்பட்டது; கவலை நீங்கினது: அதிசயங் குடிகொண்டது. இச்சம்பவத்திலிருந்து புது வண்ணம் தீட்டுவது மாதாவுக்கு விருப்பமில்லையென்று யூகித்து அப்படியே விட்டுவிட்டார்.

இன்னெருகால், அப்படத்தைப் புதுப்பிக்க வேருெரு குருவானவர் துணிந்தார். முன் நடந்தவை அவருக்கும் தெரிந்திருந்தமையால், மாதாவின் சம்மதம் பெறுவதற்காக நவநாள் கொண்டாடிக் கடைசிதினம் திருப்பலி நிறைவேற்றினர். அதற்குப்பின் ஓவியக்காரனை அழைப்பித்துக்

கோவிலிலேயே வேலை ஆரம்பிக்கக் கற்பித்தார். அவனும் வண்ணம் பிசைந்துத் தூரிகையில் தொட்டுப் படத்தின் கிட்டப் போனான். ஐயோ! அவன் பார்வை மறைந்து விட்டது. ஒன்றும் செய்ய இயலாதவனாய் நின்று தவித் தான். இதைக்கண்ட குருவானவர் தமது எண்ணத்தை விட்டுவிட்டார்.

வேறொருகால், ஏறக்குறைய 90 ஆண்டுகளுக்கு முன், படத்திற்குப் புது வண்ணம் பூசத் துணிந்தார் மற்றொரு குருவானவர். அதற்காக செபதபமெல்லாஞ் செய்து, மக்களை வேண்டிக்கொள்ளும்படிக் கற்பித்தார். பாட்டுப் பூசை செய்து முடிந்தபின் ஓவியக்காரன் தனது வேலையை ஆரம்பிக்கப் போனான். வண்ணக்குச்சியில் மைதொட்டு படத்தில் வைத்தான். அது பாதரசம்போல் பலகையில் ஒட்டாது உருண்டு கீழே வடிந்தது. இதைப் பார்த்தபின் அவர்கள் மேற்கொண்டு வேலை செய்யத் துணியவேயில்லை. இதுவரையில் அப்பழமையான படம் தொடக்கத்தில் எப்படி இருந்ததோ அப்படியே இருக்கின்றது. மேற் சொன்ன நிகழ்ச்சிகள் ஈண்டுள்ள மக்களுக்குள் வழங்கி வருகிற பாரம்பரியம்.

## முடிவுரை

கிறிஸ்துவுக்குப்பின் முதல் நூற்றாண்டிலேயே, பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரால் இந்திய நாட்டில் மெய் மறை ஒளி வீசப்பட்டது வெளிப்படை. அன்றுதொட்டு கிறிஸ்துவின் அரசு பரவி ஓங்கி வளரப் போதகர்கள் முன் வந்துள்ளனர். சிற்சில சமயங்களில் ஓய்ந்திருந்தது உண்மை. 15ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசிய வணிகர் கள் அந்நிய நாடுகளில் சிலுவை விருதை முந்த முந்த நிலை நாட்ட ஆசையும் மன உறுதியும்கொண்டனர். அவர்கள் இந்தியாவுக்கு வந்த பின்னர் மீண்டும் கிறிஸ்துவேத மென்னும் மரம் கிளை விட்டு வளரத் தொடங்கியது.

போர்த்துக்கல் நாட்டு அரசனது சலுகையால் அனுப்பப் பட்ட புனித சவேரியார், அவரோடு உழைத்த வேறு பலர் மேற்கொண்ட கடின முயற்சியால் தென்னாட்டில் திருமறை தீவிரமாகப் பரவியது. அதன்பின் தத்துவப்போதகர், வீரமா முனிவர் முதலிய வேத போதகர்களின் பெருந்தொண்டு களினாலும், முத்திப் பேறுபெற்ற அருளாநந்தர் முதலிய வேத சாட்சிகளின் இரத்தத்தாலும் மெய்மறை சுடர் விடலாயிற்று. தற்காலமும், மனஉறுதி நிறைந்த திரு மறைத் தொண்டர்களின் அரிய முயற்சியால் திருச்சபை நாடெங்கும் தழைத்திருப்பது வெள்ளிடை மலை.

ஆயினும், கத்தோலிக்கர் தொகையை மற்றவர்கள் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்குமளவில், கத்தோலிக்கர் ஒரு சிறு புள்ளியே. இந்தியாவில் 50 கோடிக்கு மேலான மக்களுளர். அவர்களுள் கத்தோலிக்கர் ஏறக்குறைய 76 லட்சம் பேர்களே மற்ற்ரேரும் கிறிஸ்துவை அறிய வேண்டாமா? அதற்காக ஆவன செய்ய வேண்டியது உண்மைக் கத்தோலிக்கரின் இன்றியமையாத கடமை யாகும். இக்கடமை மிகப் பழங்காலந்தொட்டுத் துறவி களாலேயே செய்யப்பட்டு வந்துளது. இவ்வேலை அவர் களை மட்டும் சார்ந்ததென்று எண்ணுவது தவருகும். ஏனெனில், சாதாரண கிறிஸ்தவர்களும் தங்களைப்போல பிறரை நேசிக்கக் கடமைப் பட்டுள்ளனர். பிறர்நேசத்தின் அடையாளங்களில் முக்கியமானது நம் சகோதரனின் ஆத்துமத்தை இரட்சிப்பதாகும். கிறிஸ்தவர் எல்லாருக்கும் சிறப்பாகத் துறவறத்தாருக்கும் இக்கடமை இருத்தலால், இரு திறத்தாரும் ஒன்றித்து அவரவர் நிலைமைக்கு ஏற்றவாறு இத்துறையில் இறங்கிப் பணியாற்ற வேண்டும். சில சூழ் நிலையில் துறவறத்தோரைவிட இல்லறத்தாருக்கே கிறிஸ்து வைப் பிறருக்கு அறிவிக்கும் வாய்ப்புகள் அதிகமாய் உள்ளன. எவ்வாருயினும், சாதாரண கிறிஸ்தவர்களுக்கும் இவ்வுயர்ந்த அலுவல் இன்றியமையாத கடமை என்பது மறுக்கப்படாத உண்மையாகும். ஆதலால் அவர்கள் அதை எவ்வாறு செய்யலாம் என்பதை ஆராய்வோம்.

## கடமை

கிறிஸ்துவை மக்கள் விசுவசிக்கச்செய்யும் அலுவலில் கடவுள், குருக்கள், மற்றக் கிறிஸ்தவர்கள் ஆகிய மூவர் சேர்ந்துள்ளனர். வேண்டிய அருளைக் கடவுள் அருள் கின்றார். சாதாரண கிறிஸ்தவன் வழி காட்டுகிறான். குரு வானவர் மகத்தான வேலையை முடிவுக்குக் கொண்டுவரு கிறார். புனித ஸ்நாபக அருளப்பர் இயேசுநாதருக்கு முன்னோடியாய் இருந்ததுபோல், சாதாரண கிறிஸ்தவர்கள் துறவறத்தோருக்கு முன்னோடிகளாக இருக்கலாம். வழியை செம்மை செய்து, பள்ளத்தை நேராக்கிவிட அவர்களால் கூடும். பல விதத்தில் இவ்வாறு உதவிபுரிய முன்வரலாம். ஆண்டவரின் திராட்சைத் தோட்டம் அகன்று விரிந்து விசாலமாயுள்ளது. அங்கு பலவித வேலிகள் அவசியம். ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு அவற்றைத் தெரிந்து கொள்ளலாம். ஆயினும், மூன்றுவித அலுவல்கள் முதன்மையாகத் தோன்றுகின்றன. அவையாவன :— செபம், தருமம், செயல்.

## செபம்

கத்தோலிக்கரில் எத்திறத்தாரும் இக்கடமையை நிறை வேற்றலாம். ஆண் பெண், சிறியோர் பெரியோர், உயர்ந் தோர் தாழ்ந்தோர், செல்வர் வறியோர், பண்டிதர் பாமரர் எல்லாருமே செபிக்கலாம். எல்லாருமே நம் நாட்டினருக் காக வேண்டிக்கொள்ளலாம். இதுவே எளிதும் நம்மால் இயன்றதுமான வேலை. இதுவே மிகப் பயனுள்ள பக்திச் செயல். விசுவாசத்தோடு செபிக்கும் செபம் மலையையும் பெயர்க்கும். உயிருள்ள விசுவாசத்தோடு செபிக்கும் செபத் தையே இறைவன் விரும்புகின்றார். அவற்றை அவர் ஒரு போதும் புறக்கணியார். "கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்" என்று இயேசு விளம்பவில்லையா? தனது நாட்டின் நலத்தை விரும்பும் நாட்டுப்பற்று உடை யவன் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரின் நன்மையைத் தேடுவான். கத்தோலிக்கராகிய நாம் நம் நாட்டினராகிய

இதர சகோதரருக்குத் தேடும் நன்மைகளில் அதி முக்கியமானது அவர்களது ஆன்ம இரட்சணியமன்றோ? ஆகவே, செபிப்போம்; உருக்கமாக செபிப்போம்; எப்போதும் செபிப்போமாக!

## தருமம்

கிறிஸ்துவைப் பிறர் விசுவசிக்கச் செய்யும் அலுவல் தேவ அலுவலாயினும், இவ்வுலகின்கண் நடைபெறுவதால் அதற்கும் பொருளுதவி அவசியம். ஏழைகளை ஆதரிக்கவும் நெருக்கப்பட்டோரைத் துன்பத்தினின்று மீட்கவும் கோவில்கள் கட்டவும், பள்ளிக்கூடங்கள் நிறுவவும் பணம் தேவை. இந்தியா எளிய நாடு என்றும், வேதபோதக நாடு என்றும் பாராட்டப்பட்டமையால், முன்னர் மேல் நாட்டிலிருந்து பண உதவி மிகுதியும் வந்துகொண்டிருந்தது. இப்பொழுது அத் தருமங்கள் குறைந்து போயின. இனிமேல் நாம் அங்கிருந்து பொருளுதவியை எதிர்பார்ப்பதில் பயனில்லை. நமக்கு அது கண்ணியமும் ஆகாது. ஆகையால், நம்மவரை நல்வழியிலும், ஞானவாழ்விலும் வாழவைப்பதற்கு அவசியமான பொருள் உதவியை, நாமே தேடிக்கொள்ளவேண்டும். அதிகம் கொடுக்கச் சக்தியுள்ளவர்கள் அதிகம் கொடுக்கட்டும். கொஞ்சமே கொடுக்க முடிந்தோர் கொஞ்சமாகிலும் கொடுக்கட்டும். "உனக்கு மிகுதியான செல்வம் இருக்கும் போது ஏராளமாய்க் கொடு" (தொபி 4/9). ஆனால் எல்லாரும் தங்கள் தங்களால் இயன்ற அளவு கொடுக்கக் கடமைப் பட்டுள்ளார்கள்.

இப்படி ஈவதால் நாம் மிக மேலான இரட்சணிய அலுவலில் ஒத்துழைப்போர் ஆகிறோம். அதனால் விளையும் பலனில் பங்கடையாமற் போகமாட்டோம். மேலும் நம்முடைய சொந்த ஆன்ம இரட்சணியத்திற்கும் அது உதவியாயிருக்கும். "நீ ஈந்த தருமம் உனக்குத் தேவையான நேரத்தில் பேருதவியாய் இருக்கும். ஏனெனில், ஒருவனது அறச்செயல் அவனை எல்லாப் பாவங்களினின்றும் சாவினின்றும் மீட்கிறது. மேலும் ஆன்மாவை இருளினின்று விடுவிக்கிறது!" (தொபி : 4/10-11)

## செயல்

இந்த அலுவல் சிறப்பாகக் குருக்களுக்குரியதேயாயினும் அதைக் கிறிஸ்தவர் எல்லாரும் செய்யத் தகுதிஉள்ளவர்கள். படித்தோர் தமது ஞான ஒளியால் தம்மைச் சுற்றிலுமுள்ளவர்களுக்குத் தொண்டுசெய்ய இயலும். ஞான உரைகள், விளக்கங்கள் சொல்லியும், வாக்குவன்மையாகப் பேசியும், வாதித்தும், தகுந்த புத்தகங்களைக் கொடுத்தும், ஐயங்களை அகற்றியும் பிறருக்கு உதவி செய்யலாம். நல்ல புத்தகங்கள், பத்திரிகைகள், வேத உண்மைகளை விளக்கும் சிறு சிறு வெளியீடுகள் முதலியவைகளை வெளியிடலாம்; பரப்பலாம். குருக்களுக்கு உதவியாக நின்று மறைக்கல்வி, நல்லொழுக்கம் முதலியன கற்றுக்கொடுக்கலாம்.

ஆனால், எல்லாராலும் போதிக்கவும், உபதேசிக்கவும், வேத உண்மைகளை விளக்கிக்கூறி எண்பிக்கவும் இயலாத காரியம். ஆயினும், போதனையைவிடச் சாதனை மேல். நாம் எல்லாரும் நமது சீரிய நடத்தையால் நாம் விசுவசிக்கும் உண்மையைப் பிறருக்குத் தெளிவாகக் காட்டலாம். இச் சாதனையே அதிக பயன்தரக் கூடியது. போதனையைக் கேட்டு மறந்துவிடக்கூடும். ஆனால் சாதனையோ பசுமரத் தாணிபோல் பதிந்துவிடும். அது ஒரு வித்தேபோல் வேலை செய்யும். உடனேயோ அல்லது நாளாவட்டத்திலோ முளைக்கக்கூடும். ஆகையால், எல்லாருந் தத்தம் நிலைமையில் மெய்ம்மறைக் கோட்பாடுகளைப் பின்பற்றி நன்னெறியில் நடந்து, நமது திருமறை சிறந்தது எனக் காட்ட வேண்டியது நமது கடமையாம். "கிறிஸ்தவர்களைப்பார். எப்படி நடக்கிறார்கள்! என்ன நேர்மை! என்ன ஒழுக்கம்!" என்று நம்மைப்பார்த்து ஏனையோர் நல்லெண்ணங் கொள்ளும்படி நாம் நடத்தல் வேண்டும். காந்தமானது ஊசியை இழுப்பதுபோல, நமது நல்லொழுக்கமானது பிறரை நம் நல்ல ஆயன் மந்தையிற் கொண்டுவந்து சேர்க்கும்.

புனித தோமையார் விதைத்த ஆலவிதையானது முளைத்துக் கிளைத்துத் தழைத்து நிற்கிறது. அம்மரத்தின் நிழலில் நாமிருக்கின்றோம். அனைவரும் இந்நிழலுக்கு வந்து சேரும்படி நமது செபதவத்தாலும், தானதருமத்தாலும், நல்லொழுக்க நன்மாதிரியாலும் முயலுவோமாக!

முற்றிற்று.

# புனித தோமையாருக்கு மன்றாட்டுக்கள்

1. கிறிஸ்துவின் பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவரா யிருக்கப் பாக்கியம் பெற்ற புனித தோமையாரே,... எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

2. நற்செய்தியைப் போதிக்க இறைவனால் தேர்ந்தெடுக் கப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட புனித தோமையாரே,...

3. உலக இரட்சகரை ஆவலோடு பின்பற்றி, அன்பின் பெருக்கால் அவரோடு மரிக்கத் தயாராயிருந்த புனித தோமையாரே,...

4. உயிர்த்த இயேசுவின் உடலைக்காண ஆர்வங்கொண்ட புனித தோமையாரே,...

5. இயேசுகிறிஸ்துவின் திருக்காயங்களைத் தொட்டு அவ ருடைய தெய்வத்தன்மையையும், மனிதத்தன்மையை யும் ஐயமின்றி ஏற்று ஆராதித்த புனித தோமையாரே,

6. உயிர்த்த இயேசுவை "என் ஆண்டவரே, என் கடவுளே" என்று உறுதியாய் அழைத்து, அவர் பாதங் களில் விழுந்து ஆராதித்த புனித தோமையாரே,...

7. கிறிஸ்துவில் ஆழ்ந்த விசுவாசங்கொண்டு உம்மைப் போலவே நாங்களும் அவரை ஆராதித்து நேசிக்கும் படியாக,... புனித தோமையாரே எ...வே...

8. இயேசுவுக்காகவும், திருச்சபைக்காகவும் எங்கள் உயி ரைக் கொடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கும்படி யாக,...

9. இந்நாட்டு மக்கள் அனைவரும் உணவு, உடை, உறை விடம் ஆகியவற்றைப் பெற்று இறையன்பிலும், பிறர் அன்பிலும் வளரும்படியாக,...

10. எங்கள் நாட்டையும், மாநிலங்களையும் ஆளுவோர் நல்லுறவுகளை வளர்த்து, நீதிவழுவா நெறிமுறையு டன் ஆட்சிசெய்யும்படியாக,...

11. எங்கள் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், இல்லறத் தார் அனைவரும் அப்போஸ்தல ஆர்வம் நிறைந்தவர் களாய் இணைந்து பணியாற்றும்படியாக,...

12 எங்கள் குடும்பங்கள் தன்னலமற்ற அன்பிலும், வாழ் வின் தூய்மையிலும் வளர்ந்தோங்கி, தங்கள் பிள்ளை களின் ஆன்ம வாழ்வில் தக்க கவனம் செலுத்தும் படியாக,...

## புனித தோமையாருக்கு செபம்

இந்திய நாட்டின் அப்போஸ்தலராகிய புனித தோமை யாரே! நீர் எம் முன்னோர்களுக்கு நற்செய்தியைப் போதித்து அநேகருக்கு ஞானத்தின் வழியைக் காட்டினீரே. அவர் களுடைய மக்களாகிய நாங்கள் கிறிஸ்துவ விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், அதை முன்மாதிரிகையால் மற்றவர் களுக்கு விளக்கிக் காட்டவும் எங்களுக்கு உதவி செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். உயிர்த்த இயேசு வின் அப்போஸ்தலரே, நாங்கள் இயேசுவினுடைய பாடு களையும், மரணத்தையும், உயிர்ப்பையும் விசுவசித்து மீட்ப ராகிய இயேசுவுக்குச் சாட்சிகூற பேறுபெற்றவர்களாகும் படி கிருபை செய்தருளும்.

எங்கள் பாதுகாவலரான அப்போஸ்தலரே! உம் திருவடிகள் தோய்ந்த இந்நாட்டில் அமைதியும், ஒழுக்க மும், சமூக நீதியும், முன்னேற்றமும் செழித்தோங்கி வளர் வதாக அதனால் வேலையின்றி தவிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பும், ஏழை எளியவர்களுக்கு வாழ்க்கை வசதியும் கிடைத்தருளும்படி செய்தருளும். இறைவனின் சாயலை நாங்கள் மற்றவர்களில் கண்டு, நாங்கள் பெற்றிருக்கும் திருவாழ்வை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள இயேசுவிடம் இடைவிடாமல் எங்களுக்காக மன்றாடுவீராக, ஆமென்.